பறிக்கப்பட்ட
மாநில உரிமைகள்

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து மோடி ஆட்சி வரை

விடுதலை இராசேந்திரன்

பிரிட்டிஷ்
ஆட்சியிலிருந்து
பா.ஜ.க. ஆட்சி வரை

பறிக்கப்பட்ட மாநில உரிமைகள்

விடுதலை இராசேந்திரன்

வெளியீடு:

நிமிர்வோம்

95 டாக்டர் நடேசன் சாலை,
டாக்டர் அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600004

தொடர்புக்கு:
7373684049 / 9941759641 / 044-24980745
மின்னஞ்சல்:
www.dvkperiyar.com/periyarmuzhakkam@gmail.com

நூல் குறித்து...

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடான ‘புரட்சி பெரியார் முழக்கம்’ இதழில் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் எழுதிய தொடர் புத்தகமாக உங்கள் கைகளில்.

ஜூலை 2021 ஆரம்பித்த தொடர் டிசம்பர் 2021 வரை 20 அத்தியாயங்களாக வந்தது.

ஒன்றிய ஆட்சி பறித்த மாநில உரிமைகள்; அரசியல் நிர்ணய சபை விவாதங்கள்; பிரிட்டிஷார் கொண்டு வந்த சீர்திருத்தங்கள்; வைதீகப் பார்ப்பனிய எதிர்ப்பு என்று அரசியல் சமூக வரலாற்றை சுருக்கமாகப் பதிவு செய்கிறது, இந்நூல்.

உள்ளடக்கம்

- தமிழ்நாடு இழந்த உரிமைகள்: ஒரு சுருக்கமான வரலாறு
- மெக்காலே - நாத்திகர் பிராட்லா கொண்டு வந்த மாற்றங்கள்!
- பிரிட்டிஷ் இந்தியா - மாநில உரிமைகளை வழங்கியது; 'இந்துத்துவ' இந்தியா இருக்கும் உரிமைகளைப் பறிக்கிறது
- மாகாண சுயாட்சி வழங்கிய சைமன் ஆணையம்
- பிரிட்டிஷ் ஆட்சியில் பார்ப்பனர்கள் பதவிகளைக் கைப்பற்றிய வரலாறு
- பிரிட்டிஷார் கொண்டு வந்த சீர்திருத்தச் சட்டங்கள்
- 'திராவிட நாடு' கேட்டு காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்தார் ராஜாஜி
- பாகிஸ்தான் பிரிவினைக்கு யார் காரணம்?
- அரசின் கங்காணிகளே ஆளுநர்கள்
- ஆர்.எஸ்.எஸ். தேசபக்தி இயக்கமா?
- சுதந்திர நாளில் 'ஹிட்லரின்' கொடியை ஏற்றியது
- ஆர்.எஸ்.எஸ். - பிரிட்டிஷ் ஆதரவு அவலங்களைக் கொண்ட நூலை வெளி வராமல் தடுத்த முரளி மனோகர் ஜோஷி
- 'சுதந்திர இந்தியாவில்' பறிக்கப்பட்ட மாநில உரிமைகள்
- பா.ஜ.க. நடத்தும் 'புஷ்யமித்ரசுங்கன்' ஆட்சி
- ஜனநாயகக் கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டன
- ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி பறித்த சமூக நீதி உரிமைகள்
- ஒன்றிய ஆட்சியின் இந்தித் திணிப்புகள்
- தலித் மக்களின் வளர்ச்சி, மாணவர் கல்விக்கான உதவித் தொகை வஞ்சிக்கும் மோடி
- கார்ப்பரேட் நிறுவனங்களைக் காப்பாற்றச் சட்டங்கள்
- சிந்தனையாளர்கள் மீது அடக்குமுறைகள்
- வேளாண் சட்டங்கள்
- கட்டுரைக்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள்

தமிழ்நாடு இழந்த உரிமைகள்: ஒரு சுருக்கமான வரலாறு

கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர் பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.

கி.பி. 1600இல் பிரிட்டனின் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவுக்குள் வணிகம் செய்ய வருவதற்கு முன்பு, 'இந்தியா' என்ற ஒரு நாடே உருவாகவில்லை. பிரிட்டிஷ் அரசி எலிசபெத் அதற்கான சட்டபூர்வ உரிமையை கிழக்கிந்திய கம்பெனிக்கு வழங்கியிருந்தார். கடற்கரை ஓரப் பகுதிகளில் வணிகத்தை கம்பெனி தொடங்கியது. முதலில் சூரத் (கி.பி.1613), பின்னர் வரிசையாக மசூலிப்பட்டினம் (1616), அரிகரிபூர் (1633), சென்னை (1640), பம்பாய் (1669), கல்கத்தா (1686) என வணிகத்துக்கான குடியேற்றங்களைத் தொடங்கிய கம்பெனி, ஒரு கட்டம் வரை வணிகத்தில் மட்டுமே கவனம் செலுத்தியது. பிறகு தாக்குதல்கள் வழியாக பல்வேறு பகுதிகளை மீட்கத் தொடங்கியது. முதல் தாக்குதல் நடந்த பகுதி சிட்டகாங் (1686).

ஆட்சியிலிருந்த மன்னர் அவுரங்கசீப், பிரிட்டிஷ் படையை தோற்கடித்ததோடு, ஆங்கிலேயரை

இந்தியாவிலிருந்தே விரட்ட ஆணையிட்டார். இந்தியாவின் பெரும் பகுதியை தனது குடைக்குக் கீழே கொண்டு வந்து ஆட்சி நடத்திய ஒரே மன்னர் அவுரங்கசீப் தான். பிரிட்டிஷாரை எதிர்த்துப் போரிட்டு தோற்கடித்த முதல் மன்னனும் அவுரங்கசீப் தான். கி.பி. 1707இல் அவுரங்கசீப் முடிவெய்தியவுடன் அவரது பேரரசு சிதைந்தது. ஒற்றைத் தலைமை இல்லா சூழ்நிலை கம்பெனிக்கு சாதகமானது. பிரிட்டிஷ் அதிகாரி ராபர்ட் கிளைவ் ஆற்காட்டைப் பிடித்தார் (1749). அடுத்த 12 ஆண்டுகளில் தென்னிந்தியாவில் பல போர்களை நடத்தி தங்கள் வசமாக்கிக் கொண்ட கம்பெனி, 1758இல் நடந்த பிளாசி சண்டையில் கருநாடகம், வங்கத்தையும் பிடித்தது. இந்த வெற்றி தான் இந்தியாவில் ஆங்கிலப் பேரரசுக்கான அடித்தளம். பிளாசிப் போருக்குப் பிறகு ஒரு நூற்றாண்டில் இந்தியா முழுமையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது.

3000 ஆண்டுகால வரலாற்றில் உருவாக முடியாத இந்திய ஒற்றுமை, ஆங்கிலேயரின் துப்பாக்கி முனையால் தான் உருவாக்கப்பட்டது என்கிறார், வரலாற்று ஆய்வாளர் கே.எம். பணிக்கர். தொடர்ந்து கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரங்களை, மெல்ல மெல்லப் பறித்து வந்த பிரிட்டிஷ் ஆட்சி, 1858இல் இந்தியாவின் ஆட்சி நிர்வாகம் முழுவதையும் தன்னிடம் எடுத்துக் கொண்டது. அந்த ‘இந்தியா’வுக்குள் இன்றைய ஆப்கானிஸ்தான் நாட்டின் பெரும் பகுதியும், நேபாளம், பூட்டான், பர்மா, இலங்கையும் அடங்கியிருந்தன.

கிழக்கிந்திய கம்பெனி கட்டுப்பாட்டில் ஆட்சி நிர்வாகம் இருந்த காலத்திலேயே சென்னை, பம்பாய், கல்கத்தாவை தலைநகராகக் கொண்ட மூன்று மாகாண அமைப்புகளும், கல்கத்தாவில் தலைமை நீதிமன்றமும் அமைக்கப்பட்டது. இதில் கவனிக்கத்தக்க ஒரு வரலாறும் உண்டு. அவுரங்கசிப் மறைவிற்குப் பிறகு 72 ஆண்டுகள் (கி.பி.1779 வரை) இந்தியா முழுவதையும் நிர்வகிக்கும் ஒரு மத்திய அரசு உருவாகவே இல்லை.

ஆங்கிலேயரின் நேரடி கட்டுப்பாட்டிற்கு வந்த பிறகு மாகாணங்களாக, சிற்றரசர்களாக, குறுநில மன்னர் ஆட்சிகளாக நடந்த தன்னாட்சி அதிகார அமைப்பைக் குலைத்து விடாமல், மய்ய அரசு நிர்வாகம் ஒன்றை, ஆங்கிலேயே அரசு இலண்டனில் உருவாக்கியது.

‘இந்தியா’வில் மாகாணங்களில் ஆளுநர்களும் (கவர்னர்) இவர்களைக் கட்டுப்படுத்த சர்வ அதிகாரமுள்ள கவர்னர் ஜெனரலும் அவரது தலைமையில் குழுக்களும் உருவாக்கப்பட்டன. சொல்லப் போனால் இன்றைய நடுவண் ஆட்சி முறைக்கு இது முதல் வித்து. இந்த நிர்வாக அமைப்பைக் கண்காணிக்க மேலும் கூடுதல் அதிகாரங்களோடு இங்கிலாந்தில் இந்திய நாட்டுக்கான அரசுச் செயலர் குழு ஒன்று (Secretary of State for India in Council) உருவானது.

இந்த நிர்வாகக் கட்டமைப்பு வெற்றிகரமாக செயல்பட்டதா என்ற கேள்விக்கு பதில் இல்லை என்பதுதான். மாகாணங்களின் உரிமைகளை படிப்படியாக பறிக்கும் சட்டங்களை 1789, 1793, 1813, 1833 ஆண்டுகளில் கொண்டு வந்தார்கள். மாகாணங்களின் உள்ளாட்சி அதிகாரம், நிதி, பொருளாதார திட்டங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. மாகாண ஆட்சிகளுக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் முரண்பாடுகள் வெடித்தன. ‘மலர்க மாநில சுயாட்சி’ என்ற மிகச் சிறந்த வரலாற்று ஆவணத்தை எழுதிய கு.ச. ஆனந்தன் தனது நூலில் இவ்வாறு பதிவு செய்கிறார்:

“அந்தக் காலகட்டத்தில் மாகாணங்கள் மொழி அடிப்படையிலோ அல்லது அதனதன் தனித் தன்மையை நிலைநாட்டும் வகையிலோ பிரிக்கப்பட் டிருக்கவில்லை. அந்தந்த மாகாண மக்களின் கருத்தை எதிரொலிக்கும் ‘சட்டசபைகள்’ பற்றி மக்களுக்குத் தெரியாத காலம் அது. குடியரசு முறையே இந்தியா வில் உருவாகவில்லை. ஆள்பவர் களுக்கும் ஆளப்படு கிறவர்களுக்கும் தொடர்பே இல்லாத சூழ்நிலை. அந்த நிலையில்கூட ஓர் அனைத்திந்திய மய்ய அரசாங்கத்தின் வல்லாட்சியை மாகாணங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த நிலையில் விடுதலை பெற்ற இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தின் மூலமாய் அவ்வகை மத்திய வல்லாட்சியை மொழி சார்ந்த தனி மாநிலங்கள் மீது திணித்திடத்தான் முடியுமோ”

பிரிட்டிஷ் ‘இந்தியா’வில்

பார்ப்பன-பனியாக்களின் சுரண்டலுக்கு கதவு திறந்துவிட்ட இந்தியாவின் சுதந்திர ஆட்சி, படிப்படியாக மாநில மக்களின் உரிமைகளையும் அடையாளங்களையும் வளங்களையும் பறித்துக்

கொண்டே இருந்தது; இருக்கிறது. தேசிய இனங்களின் உரிமைக் குரல் போராட்டங்களாக உருவெடுத்தாலும் அந்த உணர்வுகளை மதிப்பதற்கு ஆளும் வர்க்கமான பார்ப்பன-பனியாக்களின் பிரதிநிதிகளாக செயல்படும் அகில இந்திய தேசியக் கட்சிகள் தயாராக இல்லை. ஆனால், வணிக நோக்கத்தோடு சுரண்டல் இலாபங்களுக்காக இந்தியாவை காலனியாக்கிய பிரிட்டிஷ் ஆட்சி, மாகாணங்களின் உரிமைகளைப் பறித்தாலும், அவ்வப்போது எழுந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கிறது. அதிகாரப் பறிப்புகளுக்கிடையே உரிமைக் குரல்களுக்கும் காது கொடுத்திருக்கிறது, என்பதே வரலாறு.

கிழக்கிந்திய கம்பெனி, நிர்வாக வசதிக்காக சென்னை, பம்பாய், கல்கத்தா என்ற மூன்று மாகாணங்களை உருவாக்கியதை ஏற்கனவே குறிப்பிட்டோம். இந்த மூன்று மாகாணங்களும் தங்களுக்கான சட்டங்களை இயற்றலாம். இலண்டனில் உள்ள கம்பெனியின் தலைமை நிலையத்துக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி நாடாளுமன்றம் வழியாக முதல் உரிமைப் பறிப்பில் இறங்கியது. அதுதான் 1773இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கொண்டு வந்த ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating act) இந்தச் சட்டத்தின் வழியாக பம்பாய், சென்னை மாகாணங்கள் கல்கத்தா மாகாணத்தின் அதிகார வரம்புக்குள் கொண்டு வரப்பட்டன. கல்கத்தா மாகாண கவர்னர், கவர்னர் ஜெனரல் ஆக்கப்பட்டார். பம்பாய், சென்னை மாகாண கவர்னர்கள், கல்கத்தா கவர்னர் ஜெனரல் அதிகாரத்துக்கு அடங்கிப் போக வேண்டும். அப்போதே சென்னை, பம்பாய் மாகாணங்களில் தங்களின் சட்டம் இயற்றும் உரிமை பறிக்கப்பட்டதற்கு எதிர்ப்புகள் எழத் தொடங்கி விட்டன.

கல்கத்தா அதிகார மய்யமாக மாற்றப்பட்டதை எதிர்த்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலும் குரல்கள் ஒலித்தன. இதன் விளைவாக மத்திய - மாகாண நிர்வாக உறவுகளை ஆராய நாடாளுமன்ற விசாரணைக் குழு ஒன்றை அமைத்து சாட்சியங்களைப் பதிவு செய்தது. குழு அமைக்கப்பட்ட ஆண்டு 1852-53. மாகாண உரிமைகளுக்காக இந்திய வரலாற்றில் அமைக்கப்பட்ட முதல் குழு இது தான். குழுவின் விசாரணைக்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

கல்கத்தா தலைமை மாகாண கவர்னர் ஜெனரலுடைய நிர்வாகக் குழுவில் பம்பாய், சென்னை மாகாண பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்வது என்பதே அந்த முடிவு. கல்கத்தா மத்திய சட்டசபையாக மாற்றப்பட்டிருந்த நிலையில் மாகாண ஆட்சியில் முதன்முறையாக மாகாணங்களுக்கு பங்கேற்பு வழங்கப்பட்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இப்படி ஒரு முடிவை எடுத்த காலகட்டத்தில் இந்தியா- கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரத்தில்தான் இருந்தது. அதற்குப் பிறகு 5 ஆண்டுகள் கழித்துத்தான் 1858இல் பிரிட்டிஷ் ஆட்சி தனது நேரடி கட்டுப்பாட்டில் 'இந்தியா'வைக் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து மாகாண உரிமைகளுக்கு புதிய வெளிச்சம் தரும் சட்டம் ஒன்றை 1861இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கொண்டு வந்தது. இதற்குப் பெயர் இந்திய கவுன்சில்கள் சட்டம் (கூாந ஐனேயைே ஊடிரஉேடைள ஹஉவ).

இச்சட்டத்தின் வழியாக சென்னை-பம்பாய் மாகாணங்களிடமிருந்து பறிக்கப்பட்டிருந்த சட்டமியற்றும் அதிகாரங்கள் மீண்டும் வழங்கப்பட்டன. அதற்காக மாகாண சட்டசபைகள் (Provincial Legistlative Councils) உருவாக்கப்பட்டன. அகில இந்திய அடிப்படையிலான பொதுப் பிரச்சினைகளுக்கு Imperial - Legislative Council எனும் கவர்னர் ஜெனரலுடைய சபை (கல்கத்தாவை தலைமை யகமாகக் கொண்டது) சட்டங்கள் இயற்றும். மாகாணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாகாண சட்டசபைகளே சட்டம் இயற்றும். மாகாணம் என்ற சொல் பயன்படுத்தப்படுவதற்குக் காரணம் - அப்போது மாநிலங்கள் (State) உருவாகவில்லை. ஞசநளனைநஉேல என்ற பெயரில் மாகாணங்கள் மட்டுமே செயல்பட்டன. மாகாண அரசு இயற்றுகிற எந்த சட்டமும் முதலில் கவர்னர் ஒப்புதல்; பிறகு கல்கத்தாவிலுள்ள கவர்னர் ஜெனரல் ஒப்புதல் (அவருக்கு வைஸ்ராய் என்ற பெயரும் உண்டு) அதன் பிறகு இலண்டனில் பிரிட்டிஷ் அரசு ஒப்புதலைப் பெற வேண்டும்.

இங்கிலாந்தில் இந்திய பிரச்சினை களுக்காக ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டார் (Secretary of State for India). மாகாண அரசுகளுக்கு நிதி அதிகாரம் ஏதும் கிடையாது. ஒவ்வொரு செலவுக்கும் மத்திய அரசின் அனுமதி பெற்றாக வேண்டும். 1870ஆம் ஆண்டு வரை இதுதான் நிலை. 1871ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரலாக (வைஸ்ராய்)

கல்கத்தா தலைமையகத்துக்கு மேயோ பிரபு வந்தார். அவர் முதன்முறையாக மாகாணங்கள் உரிமைகளின் கீழ் சில துறைகளை மாற்றினார். முதன்முறையாக காவல்துறை, சிறை, கல்வி, பத்திரப் பதிவு, சுகாதாரம், சாலைகள், சிவில் கட்டிடங்கள் தொடர்பான துறைகள் மாகாணங்களிடம் வந்தன. இவற்றை நிர்வகிப்பதற்கு மாகாண அரசு மொத்தமாக ஒரு தொகை மான்யமாக வழங்கப்பட்டது. அந்தத் தொகைக்கு மிகாமல் மாகாண அரசுகள் செலவிட முடியும். அதில் இந்த 7 ஆண்டுகளில் அதாவது 1877இல் மற்றொரு மாற்றம் வந்தது.

கவர்னர் ஜெனரலாக இருந்த லிட்டன் பிரபு நிலவரி, எக்சைஸ், முத்திரை (ஸ்டாம்ப்), பொது நிர்வாகம், சட்டம், நிதித் துறை அதிகாரங்களையும் அதில் கிடைக்கும் வருமானத்தையும் மாகாணங் களுக்கு உரித்தாக்கி, ஏற்கனவே வழங்கி வந்த மான்யத்தை நிறுத்தினார். மாகாணங்களுக்காக வருவாய் தரும் துறைகளை முதன்முதலாக ஒதுக்கியது இப்போதுதான்.

மெக்காலே - நாத்திகர் பிராட்லா கொண்டு வந்த மாற்றங்கள்!

'சுதந்திர தேசிய இந்தியா' - மாநிலங்களின் உரிமைகளைப் பறித்தது; 'மனுவாத பார்ப்பன' இந்தியா மாநிலங்களையே அழித்து வருகிறது.

இலண்டன் நாடாளுமன்றம் மாகாண உரிமைகளைப் பறித்தபோது எதிர்த்து குரல் கொடுத்தவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள்

தனித் தொகுதி உரிமையை முதன்முதலாகப் பெற்றவர்கள் இஸ்லாமியர்கள். அவர்கள் இப்போது அனைத்து உரிமைகளையும் பறி கொடுத்து நிற்கிறார்கள்.

கடவுள் பெயரால் உறுதி ஏற்க மறுத்து பதவியை தூக்கி வீசியவர் பிராட்லா.

கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.

'சுதந்திர இந்தியா' மாநிலங்கள் வருவாயையும் உரிமைகளைப் பறித்து வருகிறது. ஆனால் 'பிரிட்டிஷ்

இந்தியா' மாநிலங்களுக்கு வருவாய் தரும் துறைகளை வழங்கியது. மோடியின் பார்ப்பன 'இந்தியா', மாநிலங்களையே ஒழித்து வருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் 1807இல் கவர்னர் ஜெனரலாக இருந்த லிட்டன் பிரபு மாகாணங்களுக்கு வருவாய் தரும் நில வரி, எக்ஸைஸ், முத்திரை ஸ்டாம்பு போன்ற வருவாய் தரும் துறைகளை ஒதுக்கியதைக் கடந்த தொடரில் பார்த்தோம்.

அதற்குப் பிறகு அடுத்த மாற்றம் வந்தது. மாகாண அரசுகள் துறைகளில் செலவிட்டதுபோக எஞ்சிய தொகையை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய அரசிடம் ஒப்படைத்து விட வேண்டும். இதனால் சிக்கனமாக செலவிட்டு வருவாயிலிருந்து சேமித்த தொகையை மத்திய அரசு பறித்துக் கொள்வதிலிருந்து தப்பிக்க, மாகாண அரசுகள் 5 ஆண்டுகள் முடியும் காலத்தில் இறுதிப் பகுதியில் தொகை முழுவதையும் செலவிட்டன. இதனால் மத்திய-மாகாண அரசுகளுக் கிடையே மோதல்கள் உருவாயின.

இந்தப் பின்னணியில் இங்கிலாந்தில் இந்தியா வுக்கான அமைச்சராக வந்த மார்பி, மத்தியில் அதிகாரக் குவிப்பால் நிர்வாகம் முடங்கி நிற்பதை உணர்ந்து, அது குறித்து பரிசீலிக்க ஒரு ஆணையத்தை நியமித்தார். அதிகாரங்களைப் பரவலாக்குவது குறித்து ஆராய 1907இல் நியமிக்கப்பட்ட அந்த ஆணையத்தின் பெயர் 'ராயல் கமிஷன்'. கீழ்க்கண்ட கருத்துகளை பரிந்துரையாக முன் வைத்தது அந்த ஆணையம்.

1) இந்தியா போன்ற ஒரு பெரிய துணைக் கண்டத்தை ஒற்றைத் தலைநகரத்திலிருந்து நிர்வகிக்க முடியாது.

2) ஒவ்வொரு மாகாணமும் தனித்தனி மொழி, பண்பாடு, பழக்கவழக்கம் கொண்டவையாகவும் ஒரே சீரான முன்னேற்றம் இல்லாமலும் இருக்கின்றன.

3) மக்களிடம் கூடுதல் பொறுப்புகளை ஒப்படைத்து - பொது விவகாரங்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்

என்ற முக்கிய பரிந்துரைகளை வழங்கியது. பரிந்துரை செய்யப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1909இல் சில சீர்திருத்தங்கள் சட்டமாக்கப் பட்டன. அதற்குப் பெயர்தான் மிண்டோ மார்லி சீர்திருத்தம்.

(மிண்டோ – இந்தியாவின் வைஸ்ராய் (கவர்னர் ஜெனரல்). மார்லி இங்கிலாந்தில் இருந்த இந்தியாவுக்கான அமைச்சர்)

மாநிலங்களின் தனித்தன்மையை அங்கீகரித்தது பிரிட்டிஷ் ஆட்சி; தனித் தன்மையை ஒழித்து பார்ப்பன இந்தியா வாக்குகிறது, இந்துத்துவ ஒன்றிய ஆட்சி.

சரி; மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் வழியாகக் கிடைத்த உரிமைகள் என்ன?

மாகாண சட்டமன்றங்களுக்கு இந்திய உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் உரிமை முதன்முதலாகக் கிடைத்தது. (அப்போது நடந்த தேர்தலில் அனைவருக்கும் வாக்குரிமை இல்லை. நிலம் உள்ளோர், படித்தவர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை)

முதன்முதலாக இஸ்லாமியர்களுக்குத் தான் 25 சதவீத தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. முஸ்லீம் பிரதிநிதிகளை முஸ்லீம்கள் மட்டுமே வாக்களித்து தேர்ந்தெடுக்க தனித் தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. இந்தியாவில் தனித் தொகுதி உரிமை முதலில் வழங்கப்பட்டதே இஸ்லாமியர் களுக்குத் தான். பிறகு சீக்கியர், பார்ப்பனரல்லாதார் (முகமதியர் அல்லாதார் என்பது பெயர்) ஆதி திராவிடர் தொகுதிகள் வந்தன.

ஆளுநர்களின் நிர்வாகக் குழு விரிவாக்கப்பட்டு இந்தியர்களுக்கும் இடமளிக்கப்பட்டது.

மாகாண சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய பிரதிநிதிகள் இடம் பெற்றதால் மத்திய அரசைத் தட்டிக் கேட்கும் துணிவைப் பெற்றனர். அதன் காரணமாக மாகாணங்கள் தன்னெழுச்சி உணர்வு பெற்றன.

இப்போது நாம் வாழும் நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்ற பெயர் முதல்வராக அண்ணா இருந்தபோது சட்ட ஏற்புடன் சூட்டிய நமக்கான அடையாளம். அப்போது சுதந்திரா கட்சியிலிருந்த இராஜகோபாலாச்சாரி, ‘தமிழ்நாடு’ என்ற பெயரை ‘தமிழ்நாட்’ (கூயஅடை சூயன) என்றே பெயர் சூட்ட வேண்டும் என்று கோரிய போது அண்ணா ஏற்க மறுத்து விட்டார். ‘நாடு’ என்ற சொல் கட்டாயம் இடம் பெறுவதில் உறுதி காட்டினார். அதற்கு முன் ‘சென்னை மாநிலம்’ – அதற்கு முன் ‘சென்னை

மாகாணம்' அல்லது 'சென்னை இராஜதானி' என்ற பெயரையும், அதற்கு முன் 'புனித ஜார்ஜ் கோட்டை மாகாணம்' என்ற பெயரையும் தாங்கி நின்றது. 1800களில் பெரும்பாலான ஆவணங்களில் 'புனித ஜார்ஜ் கோட்டை மாகாணம்' என்றே சென்னை மாகாணம் பதியப்பட்டிருக்கிறது. ஆம்; இன்று தலைமைச் செயலகம் இயங்கும் அதே இடம் தான். 1700 முதல் 75 ஆண்டுகாலம் இந்த புனித ஜார்ஜ் கோட்டையே ஆங்கிலேயர்களின் தலைநகரமாக இருந்தது. சென்னைக்குப் பிறகு தான் கல்கத்தா தலைநகரமானது. சென்னைக் கோட்டைக்குள் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள்தான் அன்றைய ஆளுநர்களின் அலுவலகமும் வீடும். இங்கே 1910இல் சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டது.

நன்றி கூறப்பட வேண்டிய 3 அதிகாரிகள்

இந்தியாவை சுரண்டுவதற்குவந்தவர்கள்தான் பிரிட்டிஷ்காரர் என்பது உண்மைதான். ஆனால் வெகு மக்களை சுரண்டிக் கொழுத்தப் பார்ப்பனர்களைவிட அவர்களிடம் மனிதாபிமானம் இருந்தது என்பதை மறுக்க முடியாது. இது குறித்து மூன்று பிரிட்டிஷ் அதிகாரிகளை நாம் நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.

மெக்காலே என்ற பிரிட்டிஷ் அதிகாரிதான் சட்டமன்றம் என்ற அமைப்பை உருவாக்க வேண்டும் என்று முதலில் சிந்தித்தவர். அவர் உருவாக்கித் தந்த 'கரு'தான் சட்டமன்றம். கல்கத்தா- மாகாண தலைமை யகத்தில் கவர்னர் ஜெனரலாக பெண்டிங் இருந்தபோது அவரது நிர்வாகக் குழுவில் சட்ட அறிஞர் என்ற அடிப்படையில் இடம் பெற்றவர்தான் மெக்காலே.

சென்னை-பம்பாய் மாகாணங்களின் அதிகாரங்களைப் பிடுங்கி கல்கத்தா மாகாண ஆட்சியிடம் சரணடைய வைக்கும் சட்டம் ஒன்று 1833இல் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வந்தது. அந்தப் பிரச்சினையை பிரிட்டன் நாடாளுமன்றம் ஆய்வுக்கு எடுத்த போது அதை உரத்த குரலில் எதிர்த்தவர் தான் மெக்காலே.

"நம்மில் யாரும் எவ்வளவு பெரிய ஜனநாயகவாதியாக இருந்தாலும், எவரும் இந்தியருக்கு பிரதிநிதித்துவம் வழங்கக் கூடிய அரசாங்கத்தை தர மறுக்கிறோம்; இது நியாயமல்ல. இந்தியாவில் அந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு அரசியல் அமைப்பை நாம் உருவாக்கித்

தர வேண்டும்'' என்று ஓங்கி ஒலித்தார். மெக்காலேவிடம் இந்த சிந்தனையை விதைத்தவர் ஜேம்ஸ் மில். அவர் இந்திய வரலாற்றை எழுதிய வரலாற்றாளர்.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றங்கள்தான் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து மக்களை விடுவிக்கும். அப்போதுதான் மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை உறுதியாகும்'' என்றும், "ஒரு சுதந்திரமான ஆட்சியைக் கொடுக்கா விட்டாலும் குறைந்தது ஒரு நல்லாட்சியையாவது அமைத்திட வேண்டும்'' என்று பிரிட்டிஷாரின் மனசாட்சியையே உலுக்கியவர் ஜேம்ஸ் மில். இந்த நியாயத்தின் குரல் தான் மெக்காலேயின் மனசாட்சியையும் திறக்க வைத்தது பிரிட்டிஷ் நாடாளுமன்றம்! சட்டமன்றம் ஒன்றை உருவாக்க வேண்டியதன் நியாயத்தை உணர்ந்தது. அதை செயல்படுத்த பிரிட்டிஷ் மன்னரின் தூதுவராக இந்தியாவுக்கு வந்தார் மெக்காலே. 1834ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் நாள் சென்னை கடற்கரையில் வந்து இறங்கினார். அடுத்த 15 நாட்களிலேயே ஜூன் 25இல் சென்னை மாகாண அரசு உதயமானது. அதே நாளில் பம்பாய் மாகாண அரசும் அமைக்கப்பட்ட செய்தி சென்னை அரசிதழில் வெளியானது. அரசு, அரசமைப்பு, சட்டம், சட்டமன்றம் ஆகிய நான்கு கட்டமைப்பும் உருவாகக் காரணமாக இருந்தவர் மெக்காலே.

பிரிட்டிஷ்காரன் இந்தியாவை மட்டும் உருவாக்க வில்லை; மாகாணங்களையும், சட்டசபைகளையும் கூட அவன்தான் உருவாக்கினான் என்பதை 'சங்கிகள்' புரிந்து கொள்ள வேண்டும்.

வேதம் படிப்பது ஒன்று மட்டுமே கல்வியாக இருந்த சமூகக் கொடுமையை ஒழித்து அனை வருக்குமான கல்வித் திட்டத்தை உருவாக்கியவரும் மெக்காலே தான். மனுசாஸ்திர அடிப்படையில் குற்றங்களுக்கான தண்டனை இருந்தது. அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட அநீதிகளுக்கு முற்று புள்ளி வைத்து அனைத்து பிரிவு மக்களுக்கான, பொது கிரிமினல் சட்டத்தையும் கொண்டு வந்தவர் மெக்காலே தான்! அதற்கு முன் மனுசாஸ்திர அடிப்படையில் பார்ப்பன புரோகிதர் ஆலோசனை பெற்று 'சூத்திரருக்கு' ஒரு தீர்ப்பும் 'பிராமணனுக்கு' ஒரு தீர்ப்புமே வழங்கப்பட்டு வந்தன.

வேதம் படிப்பதே கல்வி என்ற முறையை மாற்றி அனைவருக்கும் பொதுக் கல்வி முறையைக் கொண்டு வந்தவரும் மெக்காலேதான்.

ஆர்.எஸ்.எஸ். சங்கிகளுக்கு ‘மெக்காலே’ என்ற பெயரையே வெறுப்பதற்கு முக்கியக் காரணம் இவை தான்.

மெக்காலே சட்டமன்றங்களை உருவாக்க வேண்டும் என்றார் என்றால், அப்படி அமைக்கப்படும் சட்டமன்றங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரநிதிகள் வழியாகவே செயல்பட வேண்டும் என்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் (காமன்ஸ் சபை) முதன்முதலாக சட்டம் கொண்டு வந்தவர் சார்லஸ் பிராட்லா என்ற பிரிட்டிஷ்காரர்தான். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்வி கேட்கும் உரிமையும் வேண்டும் என்று சட்ட முன் வரைவுகளை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தவரும் அவர்தான்.

பிராட்லா யார்? உலகப் புகழ் பெற்ற நாத்திகர். அவரது நாத்திகக் கருத்துகளைக் கேட்க அரங்கு கூட்டங்களுக்கு கட்டணம் செலுத்தி பார்வையாளர்கள் வந்தார்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்பை கடவுளின் பெயரால் ஏற்கவேண்டும் என்ற விதியை ஏற்க மறுத்து, தேர்தலில் வெற்றி பெற்ற நிலையிலும் நாடாளுமன்றத்துக்குள் செல்ல மறுத்தார். ‘உளமாற உறுதி ஏற்கிறேன்’ என்றுதான் கூறுவேன்; நான் நம்பாத கடவுள் மீது உறுதி ஏற்க மாட்டேன் என்று கூறினார். நாடாளு மன்றம் ஏற்க மறுத்தது. அதற்காக நீதிமன்றம் பிராட்லாவுக்கு தண்டனை வழங்கியது. நாடாளு மன்ற பதவியையும் பறித்தது. அதன் பின் தொடர்ந்து நடைபெற்ற 4 மறு தேர்தல்களிலும் பிராட்லாவே வெற்றி பெற்றார். குற்றக் கூண்டுக்கு வர மறுத்தார் பிராட்லா. வலுக்கட்டாயமாக சிறையில் அடைத்தனர். பிரச்சினை பேரரசியின் கவனத்துக்குப் போனது. அரசி, பிராட்லாவை விடுதலை செய்ய உத்தரவிட்டார். அதன் பிறகு விதிமுறைகளும் திருத்தப்பட்டன. கடவுள் பெயரால் உறுதி எடுக்க விரும்பாதவர்கள், உளமாற உறுதி ஏற்கலாம் என்ற உரிமை கிடைத்தது, பிராட்லா தொடர்ந்த வழக்கில்தான்! நாடாளுமன்றத்தின் முடிவுகளில் நீதிமன்றம் தலையிடாது என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பும் இந்த வழக்கின் மூலம் தான் கிடைத்தது. இன்று வரை நாடாளுமன்ற உரிமைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்ற நிலை நீடிக்கிறது. அந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் பிராட்லா.

அந்த நாத்திக மரபின்படி தான் தி.மு.க. ‘உளமாற’ என்று இப்போதும் உறுதி ஏற்கிறது.

மற்றொரு ஆளுநர் சார்லஸ் டிரெவெல்சன் அவர் குறித்து அடுத்தது..

பிரிட்டிஷ் இந்தியா – மாநில உரிமைகளை வழங்கியது; ‘இந்துத்துவ’ இந்தியா இருக்கும் உரிமைகளைப் பறிக்கிறது

ஆளுநர் டிரெவெல்யன் சென்னை மாகாண உரிமைகளுக்காக பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார். அதற்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

வடநாட்டைவிட தென்னாட்டவர் வேறு பட்டவர்கள் என்று முழங்கிய டரெவெல்யன், தன்னை தென்னாட்டுக் குடிமகனாகவே கருதினார். மக்கள் பேரன்பைப் பெற்றார்.

மாகாண அதிகாரங்கள் வழங்கப்படுவதும், இலண்டனின் பிரிட்டிஷ் அரசாங்கம் அதை முடக்குவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

நீதிக் கட்சி தான் இரட்டை ஆட்சிக்கு எதிரான மாகாண சுயாட்சியை அழுத்தமாக வலியுறுத்தியது.

கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள ‘ஒன்றியம்’ என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.

சங் பரிவாரங்களும் மனுவாதிகளும் ‘இந்துக் களின் நாடு’ - ‘இந்து இராஷ்டிரம்’ என்று இப்போது பேசுகிறார்கள். ‘தாலிபான்கள்’ இஸ்லாமிய மதவெறியை ஆட்சி அதிகாரமாக்க துப்பாக்கிகளைத் தூக்கி நிற்கிறார்கள். ‘இஸ்லாமிய’ நாடுகள் பல மன்னராட்சிகளின் கீழ் இருந்து வருகின்றன. அது போல ‘இந்து ராஷ்டிரம்’ உருவாக்குவதற்கு வேத காலத்துக்கு மீண்டும் திரும்புவதற்கு ‘இராமாயணம்-மகாபாரத’ காலத்துக்குத் திரும்பியாக வேண்டும். அல்லது சத்திரிய வம்சத்தைச் சார்ந்தவர்களை அரசனாக்கி, அவரின் இராஜகுருவாக இருந்து, வேத பண்டிதர்கள் ஆட்சி அதிகாரத்தை வழி நடத்த வேண்டும். இவற்றிற் கெல்லாம் பெரும் முட்டுக் கட்டையாக இருப்பது நாடாளுமன்றம், ஜனநாயகம், நீதித் துறையும் நான்காவது தூண் என்று அழைக்கப் படும் மக்கள் கருத்துகளை உருவாக்கும் ஊடகங்களும் தான்.

அதனால் தான் ‘இந்து இராஷ்டிரம்’ என்ற மனுவாத பார்ப்பனிய ஆட்சியை உருவாக்குவதற்குத் தடையாக நிற்கும் நாடாளுமன்ற ‘ஜனநாயகத்தை’ சிதைக்கிறது. மொழி வழி மாநிலங்கள் அரசியல் சட்டம் வழியாக உருவாக்கிய சட்டமன்ற இறையாண்மை என்ற உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து ஒற்றை ஆட்சி நோக்கி நாட்டை இழுத்துச் சென்றால் மட்டுமே ‘இந்து இராஷ்டிரா’ பார்ப்பனிய கனவை நினைவாக்கிக் கொள்ள முடியும் என்று பார்ப்பனிய மனுவாதம் திட்டமிட்டு காய் நகர்த்துகிறது. மனுவாதத்துக்கு பலியான பெரும்பான்மை ‘சூத்திர பஞ்சம’ மக்களின் வாக்குகளை பல்வேறு மோசடிகள் (குறிப்பாக - வாக்கு எந்திரங்களை தவறாகப் பயன்படுத்துதல்) தேர்தல் ஆணையத்தை சட்டத்துக்குப் புறம்பாக செயல்பட வைத்தல்; நீதிமன்றங்களை முறை கேடாகப் பயன்படுத்தி தீர்ப்புகளைப் பெறுதல்; ‘இந்துத்துவ’ சிந்தனையாளர்களை நீதிமன்றத்துக்குள் நீதிபதியாக படிப்படியாகக் கொண்டு வந்து நுழைத்தல் என்ற பல்வேறு சதித் திட்டங்கள் திட்டமிட்டு அரங்கேறி வருகின்றன.

இந்த அரசியல் பின்னணியில் சட்டமன்ற அமைப்புகள் இந்தியாவில் நிறுவுவதற்குக் காரணமான பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே; அந்த சட்டமன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் உரிமைக்குக் கதவு திறந்து விட்ட நாத்திகர் சார்லஸ் பிராட்லா ஆகிய நன்றிக்குரிய பிரிட்டிஷ் அதிகாரிகள் பற்றி கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். அந்த வரிசையில் இடம் பெற்ற

மூன்றாவது அதிகாரி இந்தியாவில் ஆளுநராக இருந்த சார்லஸ் ஸ்டிரொவல்சன் - இதற்காக தனது பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தே போராடக் கூடிய 'மானுடம்' அவருக்கு இருந்தது. இன்றைய ஆளுநர்களைப் போல 'கங்காணி'களாக அவர் செயல்பட விரும்பவில்லை. மாறாக மானுடத்தை நேசித்தார். 'அன்னியர்'களாக ஆட்சி செலுத்த வந்தவர்களிடம் கூட ஆளப்படும் மக்களின் மீது கரிசனம் அவர் களுக்கு இருந்தது.

யார் அந்த டிரெவெல்யன் யார்?

சென்னை-பம்பாய் மாகாண உரிமைகள் பறிக்கப்பட்டு, கல்கத்தாவில் மத்திய அரசிடம் சரணடையச் செய்த 1833ஆம் ஆண்டு சட்டத்தை பல மாகாண அரசுகள் ஏற்றுக் கொண்டபோது போர்க்கொடி உயர்த்தியது அன்றைக்கும் சென்னை மாகாணம் தான். அதுவும் சென்னை மாகாண ஆளுநராக இருந்த சர். சார்லஸ் டிரெவெல்யன். முதுகெலும்போடு இந்த பிரிட்டிஷ் அதிகாரி தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தார். எஜமான விசுவாசிகளாக சட்டத்தின் நெறிமுறைகளை மீறி எப்படியாவது பதவியில் ஒட்டிக் கிடக்கும் கங்காணி ஆளுநர்களைத் தான் சுதந்திர இந்தியா பார்த்து வருகிறது. நேர்மையுடன் செயல்பட்ட ஆளுநர்கள் என்பவர்கள் அபூர்வத்திலும் அபூர்வம். புகையிலை வரி, உப்பு வரி, தொழில் வரி என்று பிரிட்டிஷ் ஆட்சி மாகாணங்களுக்கு விதித்த அத்தனை வரிகளையும் எதிர்த்தார். 'வரி போடுவதை நிறுத்தி, அரசின் வீண் செலவுகளை குறையுங்கள்' என்று இடித்துரைத்தார். மாகாண அரசுகளின் ஒப்புதல் இன்றி எப்படி வருமான வரி போடுவீர்கள் என்று தட்டிக் கேட்டார். எதிர்ப்பை வெளிப்படையாகப் பேசினார். பத்திரிகைகளில் செய்தியாகப் பதிவிடச் செய்தார். ஆடிப் போனது கல்கத்தாவில் இருந்த பிரிட்டிஷ் மத்திய ஆட்சி. 14 மாதங்கள் மட்டுமே அவரை பதவியில் நீட்டிக்க விட்டது பிரிட்டிஷ் ஆட்சி. அவரை இங்கிலாந்துக்கே திரும்பி வர உத்தரவிட்டது. அவரை இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பும் உத்தரவைப் பிறப்பித்த அரசு செயலாளரான பிரிட்டிஷ் அதிகாரி அவருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஒரு நேர்மையான அதிகாரியை இந்தியா இழந்து விட்டது. இது இந்தியாவுக்கு பேரிழப்பு. ஆனால் நீங்கள் செய்த செயல் மத்திய

அரசையும் அதன் அதிகாரத்தையும் அதன் கடமைகளையும் எதிர்த்து பொது மக்களை புரட்சிக்குத் தூண்டுவதற்கு இணையாக அமைந்து விட்டது."

அதற்கு டிரெவெல்யன் அனுப்பிய பதில்தான் தென்னாட்டு மக்களின் உணர்வுகளோடு அவர் ஒன்றி நின்றார் என்பதை விளக்குவதாக அமைந்தது.

"வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியர்கள் வேறுபட்டவர்கள். எங்கள் மாகாணத்துக்கு ஏற்கனவே சட்டமியற்றம் அதிகாரம் இருந்தது. அதைப் பறித்தவர்கள் நீங்கள். எங்களைக் கேட்காமலேயே பறித்தது தவறு. எங்கள் தென்னிந்தியாவில்தான் பிரிட்டிஷ் ஆட்சி முதன்முதலாக நிறுவப்பட்டது. பிரிட்டிஷார் முதலில் கால் பதித்தது எங்கள் சென்னை மாகாணம் தான். அதற்குப் பிறகுதான் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் போனார்கள். நாங்கள் பெரிய மாகாணத்துக்கு உரியவர்கள். சிறிய மாகாணங்கள் பயப்படுவதைப்போல் நாங்கள் யாருக்கும் பயப்படத் தேவையில்லை" என்று பதில் எழுதினார்.

அவர் இங்கிலாந்து திரும்பும்போது சென்னை மக்கள் பெருமளவு திரண்டு வழியனுப்பி வைத்ததாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. பிரிட்டிஷ் அதிகாரியாக இருந்தாலும் தென்னாட்டுக் குடிமகனாகவே தன்னை அவர் கருதினார். இத்தகைய தேசங்களைக் கடந்த மானுடப் பற்றையும் சொந்த இனத்துக்காரனாக இருந்தாலும் அவனை எதிர்த்து பாதிக்கப்பட்டவர் பக்கம் தான் நிற்பேன் என்ற உணர்வுகளை இந்திய சுரண்டும் வர்க்கக் கும்பலிடம் எதிர்பார்க்க முடியுமா? நிச்சயமாக முடியாது!

1861இல் மாகாணங்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் வழங்கப்பட்டு இந்திய சட்டமன்றங்களுக்கான சட்டம் வந்தது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20லிருந்து 50 ஆக உயர்த்தி, அதில் மக்களால் தேர்வு செய்யப்படுவோர் 21 பேராக இருப்பர் என்ற சட்டம் 1909லும், அதற்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தலை மேலும் பரவலாக்கி தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளை அதிகரிக்கும் சட்டம் 1919ஆம் ஆண்டிலும் வந்தது. அதுவரை ஆளுநர்களின் நிர்வாக சபைகளின் நிழலாக இருந்த சட்டமன்றம், தனித்து இயங்கும் அதிகாரம்

படைத்ததாக மாற்றப்பட்டது. அப்போது இதற்குப் பெயர் மதராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் (எம்.எல்.சி.).

1914இல் முதல் உலகப் போர் தொடங்கிய நிலையில், பிரிட்டிஷ் இணைந்திருந்த நேச நாடுகள் அணிக்கு நிபந்தனையின்றி உதவிட இந்தியா தயாராக இல்லை. அப்போது இலண்டனில் இந்தியாவுக்கான அமைச்சராக இருந்த மாண்டேகு, இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டார். ஒன்று, நிர்வாகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்கள் பங்கு பெறுவது அதிகரிக்கப்படும். இரண்டாவது, மக்களுக்கு பொறுப்பேற்கும் ஆட்சியை அமைக்கும் நோக்கத்துடன் சுயாட்சி அமைப்புகள் படிப்படியாக அதிகரிக்கப்படும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற இந்தியாவுக்கான அமைச்சர் மாண்டேகுவும் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த சேம்ஸ் ஃபோர்டும் இணைந்து ஓர் அறிக்கை தயாரித்தார்கள். அதுதான் மாண்டேகு சேம்ஸ்போர்டு அறிக்கை. முதல் கட்டமாக அதிகாரத்தைப் பரவலாக்குதலும் (Decentralisation), அடுத்த கட்டமாக அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொண்டு பிரிந்து கொடுத்தலுமாக (Devolution) அது அமைந்தது. இந்தியாவின் கூட்டாட்சி முறையை நோக்கி வளர்ந்தது என்று ஆய்வாளர் மோசஸ் ஜோன்ஸ் தனது நூலில் (The Government and Politics of India) குறிப்பிடுகிறார். மூன்றாவது கட்டம் தான் மாகாண சுயாட்சி என்றால் மண்டேகு ஜேம்ஸ் ஃபோர்டு சட்டம் இரண்டாம் வகையைச் சார்ந்தது. ஆனால் அதிகாரப் பங்கீட்டை சட்டத்தில் எழுதி வைக்காமல், வைஸ்ராய் விருப்ப அதிகாரத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. மாகாண சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களிடம் சோதனையாக பொறுப்புகளில் ஒரு பகுதியை மட்டும் ஒப்படைத்தார்களே தவிர, மாகாண அரசுகளுக்காக ஒதுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் ஒப்படைக்கப்படவில்லை. ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டவர் களிடம் சில அதிகாரங்களும், அமைச்சர்கள் கையில் சில அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டதால் இதற்கு 'இரட்டையாட்சி' (Dyarchy) என்று பெயர் வந்தது. இந்த இரட்டை ஆட்சி எப்படி செயல்படுகிறது என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குழுவின் தலைவர் ஜின்னா. அக்குழுவில் டாக்டர்

ஆர். பராஞ்சிபே, சிவசாமி அய்யர் உள்ளிட்ட இந்தியர்களும் இடம் பெற்றிருந்தனர். இரட்டை ஆட்சி தோல்வி என்ற முடிவுக்குக் குழு வந்தது.

இரட்டை ஆட்சி தோற்று விட்டது என்றும் இந்தக் குறைகளைப் போக்க ஒரே வழி பூரண மாகாண சுயாட்சிதான் என்று பார்ப்பனரல்லாதார் இயக்கமான தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்ற நீதிக்கட்சி குழுவுக்கு கடிதம் எழுதியது. 1927இல் கோவையில் நடந்த நீதிக் கட்சி மாநாடு இரட்டை ஆட்சியைக் கண்டித்தும், மாகாண சுயாட்சியை வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேறியது. அன்றைக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கமான நீதிக்கட்சி, முஸ்லிம் லீக், காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்தோட்டமும் முழுமை யான மாகாண சுயாட்சியை வலியுறுத்துவதாகவே இருந்தன. அதைத் தொடர்ந்து 1928ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எத்தகைய சீர்திருத்தங்களை அரசியல் சட்டம் வழியாக வழங்கலாம் என்பது குறித்து ஆராய 7 உறுப்பினர்களைக் கொண்ட பிரிட்டிஷ் குழு கருத்துகளைக் கேட்க இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆட்சியால் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கு 'இந்திய சட்ட ஆணையம்' (Indian Statutory Commission) என்பதே உண்மையான பெயர். ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ் அதிகாரி தலைமை தாங்கியதால் அது சைமன் குழு என்று பெயர் பெற்றது. 1930ஆம் ஆண்டு இந்த ஆணையம் தனது அறிக்கையை அளித்தது. இந்தியாவில் இரட்டை ஆட்சி முறையை முழுமையாக ஒழிக்கவும் மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்கவும் குழு அழுத்தமாகப் பரிந்துரைத்தது.

'இந்தியா' என்ற நாட்டை துப்பாக்கி முனையில் உருவாக்கிய பிரிட்டிஷ்காரர்கள்தான் மாகாணம் - மாகாண சட்டமன்றங்களை உருவாக்கி தன்னிட மிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன் வந்தார்கள். அவ்வப்போது வழங்கிய அதிகாரங் களைப் பறிக்க முயலும் முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் வந்த பிறகு தங்கள் செயல்பாடுகளை மறு பரிசீலனைக்கு உட்படுத்தினார்கள். 'மாகாண சுயாட்சி' என்ற நிலை நோக்கி உரிமைகளை நகர்த்தினார்கள். இது தான் பிரிட்டிஷ் இந்தியா. 'சுதந்திர பார்ப்பன இந்தியா' உரிமைகளைப் பறிக் கிறது. எதிர்த்தால் மேலும் உரிமைகளைப் பறிக்கிறது. உலக மானுடம் தான் சந்தித்தவற்றில் மிகக் கொடுமையானது 'பார்ப்பனிய மனுவாதம்' தான் என்றே கூற வேண்டும்

மாகாண சுயாட்சி வழங்கிய சைமன் ஆணையம்

பிரிட்டிஷ் ஆட்சியின் சைமன் ஆணையம் - மாகாண சுயாட்சி வழங்கியது; பெரியார் வரவேற்றார்.

பெரியாருக்கு 'தேச துரோகி' பட்டம் சூட்டிய காங்கிரசும் பார்ப்பனர்களும் மறைமுகமாக சைமன் ஆணையத்துக்கு அறிக்கைகளை அனுப்பினர்.

1927 வரை காங்கிரஸ் இந்தியாவுக்கு 'முழு சுதந்திரம்' வேண்டும் என்று கேட்கவே இல்லை.

கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணி யில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.

பிரிட்டிஷ் ஆட்சி மாகாணங்களுக்கு உரிமைகள் வழங்குவது குறித்து அனுப்பிய சைமன் ஆணையம் குறித்து கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். பெரியார் சுயமரியாதை இயக்கம் இதை வரவேற்றது. காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தது. பெரியார் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வால் பிடிக்கிறார்; தேசத் துரோகி என்று குற்றம் சாட்டினார்.

சைமன் ஆணையம்! ஆதரவும் எதிர்ப்பும்

இது குறித்த ஒரு வரலாற்று விளக்கத்தை இளைய தலைமுறையினருக்கு விளக்கியாக வேண்டும். சைமன் ஆணையத்தில் இடம் பெற்றிருந்த 7 உறுப்பினர்களில் ஒருவர்கூட இந்தியர் இல்லை என்று கூறி அன்று காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆணையத்தைப் புறக்கணித்தபோது, பெரியாரின் சுயமரியாதை இயக்கம், இந்தியர்களின் கருத்துகளைக் கேட்க வந்த அந்த ஆணையத்தை வரவேற்றது. முதலில் தயக்கம் காட்டிய நீதிக்கட்சி, பிறகு ஆணையத் திடம் கருத்து கூறும் முடிவுக்கு வந்தது. 1929இல் செங்கல்பட்டில் பெரியார் கூட்டிய முதல் சுயமரியாதை மாநாட்டில் பெரியார் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம், பெரியார் ஏன் வரவேற்றார் என்பதை தெளிவாக விளக்குகிறது. ஆணையத்தில் இந்தியர்கள் இடம் பெற முடி யாது போனதற்குக் காரணம், அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் பிராந்திய பிரதிநிதி என்று ஒருவரும் இல்லை. இந்தியாவில் அப்போது பல்வேறு வகுப்பினரின் உரிமைகள் கருத்துகள் ஒன்றுக்கொன்று மாறாக இருக்கும் நிலையில் பல்வேறு வகுப்புகளில் பிரதிநிதி களையும் சட்டப்படியான உரிமைகளைப் பரிசீலிக்கும் ஆணையத்தில் இடம் பெறச் செய்ய இயலாது என்ற அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சி இதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தியிருப்பதை சுய மரியாதை மாநாட்டின் தீர்மானம் சுட்டிக் காட்டியது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்தியாவையே நிர்வகித்து வரும் அதிகாரம் பெற்றிருப்பதை ஏற்றுக் கொண்டு அனைத்துக் கட்சிகளும் அடங்கி ஒத்துழைக்கும்போது அதே நாடாளு மன்றம் நியமித்துள்ள இந்த ஆணையத்தின் முன் சாட்சியம் கூறுவது, இந்திய சுயமரியாதைக்கு எதிரானது என்று (காங்கிரஸ்) கூறுவது பொருத்தமற்ற வாதம் என்று கூறிய அத் தீர்மானம், சுயமரியாதை இயக்கத்தின் கருத்து களையும் நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்கு ஆணையத்தின் முன் கருத்துகளைப் பதிவு செய்து, அதற்கான வழிமுறைகளைத் தேடுவதே சரியான அணுகுமுறை என்றும் தெளிவு படுத்தியது. பெரியார் கொண்டு வந்த தீர்மானத்தை வழி மொழிந்து பேசிய சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஜனகங்கர கண்ணப்பர் சுயராஜ்யமே நமது இறுதி இலட்சியம்; அதனை அடைவதற்கான வாய்ப்புகளை முன்னெடுப்பதற்கு இந்த ஆணையத்தின் முன் கருத்துகளைப் பதிவு

செய்வதே இயக்கத்தின் நோக்கம் என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் என்ற போர்வையில் பார்ப்பனர்களே பல்வேறு அமைப்புகளில் பங்கேற்று வந்ததை சுட்டிக் காட்டிய பெரியார், இந்தியர்கள் என்ற பெயரில் அவர்கள் தான் இந்தக் குழுவிலும் இடம் பெற்றிருப்பார்கள். இந்நிலையில் இந்தியர்கள் இந்த ஆணையத்தில் இடம் பெறாமல் இருப்பதே நல்லது என்று கூறினார். ரவுலட் சட்டம் மற்றும் பத்திரிகைகளை ஒடுக்கும் சட்டங்களை பிரிட்டிஷார் கொண்டு வந்த போது அதற்கு கையொப்பமிட்டு ஏற்பு வாங்கியது இந்தியர்கள் தானே? என்று கேள்வி எழுப்பினார் பெரியார். ரவுலட் சட்டம் என்ற கொடூரமான ஒடுக்குமுறை சட்டத்தை உருவாக்கியது பிரிட்டிஷ் நீதிபதி ரவுலட் மட்டுமல்ல; குமாரசாமி சாஸ்திரி என்ற பார்ப்பனரோடு இணைந்து உருவாக்கப் பட்டதே அந்த சட்டம் என்ற உண்மையையும் பெரியார் போட்டுடைத்தார். ஆணையத்தைப் புறக்கணிப்பதால் சுயராஜ்ய கோரிக்கையை முன்னெடுக்க முடியாது. சட்டங்களை எதிர்த்து நடத்துகிற போராட்டங்களே நோக்கத்தை முன்னெடுக்கும் என்றார் பெரியார் (Progress could be achieved not by non co-operation but by constitutional agitation). பெரியார், பிரிட்டிஷ் ஆட்சிக்கு 'வால் பிடித்தவர்' என்ற தவறான ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளைப் பார்ப்பனர்கள் இன்று வரை கூறுவதற்கு சைமன் ஆணையத்தை வரவேற்றதையே முதன்மை யானதாக சுட்டிக் காட்டுகிறார்கள். இதன் அரசியல் பின்னணியை அன்றைய சூழ லோடு பொருத்திப் பார்க்க வேண்டும் என்பதற் காகவே இந்த விளக்கங்கள் தேவைப்படுகின்றன.

பெரியாரை தேச விரோதியாக சித்தரிக்கும் பார்ப்பனர்கள், உண்மையில் சைமன் ஆணை யத்தின் முன் சாட்சி கூறாமல் புறக்கணித் தார்களா என்றால் அதுவும் இல்லை. இது பற்றி பெரியார் 'குடிஅரசு' இதழில் (15.7.1928) இந்த உண்மையை அம்பலப்படுத்தினார்.

"பார்ப்பன சபையும், வர்ணாஸ்ரம பார்ப்பன சபையும் சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக் கூடாது என்று கூறியதோடு, சாட்சி சொல்லவும், ஒத்துழைக்கவும், தீர்மானங்கள் செய்தும் யதாஸ்து (கோரிக்கை மனு) தயார் செய்தும் அனுப்பி விட்டன. திருவாளர்கள்

எம்.கே. ஆச்சாரியார், சத்திய மூர்த்தியார் போன்ற ‘பிரபல’ தேசியவாதிகள் எல்லோரும் மேற்குறிப்பிட்ட சபைகளில் அங்கத்தினர் களாகவும் தலைவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

தவிர முதல் வகுப்பு தேசியத் தலைவர் களான திருவாளர்கள் விஜயராகவாச் சாரியார், ஸ்ரீனிவாசய்யங்கார், எ. ரங்க சாமி அய்யங்கார் முதலியோர்களும் தங்கள் யதாஸ்தை (கோரிக்கை மனு) சைமன் கமிஷனுக்கு போய்ச் சேரும்படி செய்தாகிவிட்டது. அவைகள் கடை களிலும் விற்க ஏற்பாடு செய்தாகி விட்டது”

– என்று உண்மைகளை பொது வெளியில் அம்பலப்படுத்தினார் பெரியார்.

சைமன் குழுவை வரவேற்றதற்காக பெரியாருக்கு ‘தேச துரோகி’ பட்டம் சூட்டிய காங்கிரசும் பார்ப்பனர்கள் திரைமறைவில் தங்கள் சொந்த ஜாதி - வர்ண அமைப்புகளின் பெயரில் ஆணையத்துக்கு தங்களின் மேலாதிக்கத்துக்கான கோரிக்கைகளை முன் வைத்து இரட்டை வேடம் போட்ட வரலாற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்

அரசியல் சட்ட சீர்திருத்தங்களை ஆராய வந்த சைமன் குழுவைப் புறக்கணித்த காங்கிரஸ், இந்தியாவுக்கான ஒரு அரசியல் சட்டத்தை தங்களாகவே உருவாக்கப் போவதாக முடிவெடுத்தது, மோதிலால் நேரு தலைமையில் (ஜவஹர்லால் நேருவின் தந்தை) ஒரு குழுவை நியமித்து, ஒரு அறிக்கையை தயாரித்தது. 1929இல் தான் காங்கிரஸ் முதன்முதலாக ‘முழு சுயராஜ்யம்’ என்ற கோரிக்கையையே முன் வைத்தது. அதற்குப் பிறகும்கூட மோதிலால் நேரு குழு தயாரித்த பரிந்துரை முழு சுதந்திரத்தை வலியுறுத்தவில்லை, பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட சுயராஜ் யத்தையே (Dominion Status) முன் மொழிந்தது. எத்தகைய கோரிக்கைகளை வைத்தாலும் அவை இந்தியாவின் நாடாளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்டாலும்கூட பிரிட்டிஷ் அரசரால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரலின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும் என்பதுதான் அப்போதிருந்த சட்டம். இந்தப் பின்னணியில் காங்கிரஸ் எடுத்த ‘சைமன் ஆணைய’ப் புறக்கணிப்பு நிலைப்பாடு ஒரு வெற்று ‘தேச பக்தி’ நாடகம் என்றே கூற வேண்டும். சைமன் ஆணையப் பரிந்துரையில் –

“அதிகாரங்களைப் பங்கிட்டு வழங்கிய முறை (Devolution) முழுமையடைய வில்லை. வருங்காலத்தில் ஒவ்வொரு மாகாணமும் இயன்ற வரை தனது வீட்டின் எஜமானியாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். (It is our intention that in future each province should be as for as possible mistress in her own house. Thus independent life will be given to the provinces which will from the nucleus of the new federal structure - Commission Report vol II, Para 27) என்று கூறியதோடு ஆணையத்தின் அறிக்கை “கூட்டாட்சி தனித் தன்மையை பெற்றிருக்க வேண்டும்; தன்னுணர்வு என்ற பிரக்ஞையும் இருக்க வேண்டும்” என்றும் கூறியது.

சைமன் பரிந்துரைகளைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை 1935இல் உருவாக்கியது. இந்தச் சட்டம் மத்திய ஆட்சிக்குட்பட்ட அதிகாரங்களின் ஒரு பகுதியையே பிரித்து மாகாணங்களுக்கு வழங்காமல் வைஸ்ராய்க்கு தந்து விட்டது. எனவே மத்தியில் கூட்டாட்சி உருவாக வில்லை. மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களிலும் மத்திய அரசு குறுக்கீடு செய்வதாகவே இருந்தது. ஆனாலும், மாகாணங்கள் வெறும் நிர்வாகத் தரகர்கள் என்ற நிலை மாறி மாகாண அரசுகளும் அரசியல் சட்டத்திலிருந்தே அதிகாரங்களைப் பெறும் தனி வடிவத்தை, இந்திய வரலாற்றில் முதன்முறையாகப் பெற்றது என்கிறார், ‘மாநில சுயாட்சி’ ஆய்வு நூலை எழுதிய முரசொலி மாறன், அந்தக் காலகட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் இது முழு மாநில சுயாட்சி அல்ல; முழுமையான சுயாட்சியையே வழங்க வேண்டும் என்ற குரலையே ஒலித்தனர். அப்போது முழு மாநில சுயாட்சி பேசியவர்கள் சுதந்திர இந்தியாவில் ஏன் மாநில சுயாட்சியை கை கழுவினர்? அப்படி பேசுவதே தேச விரோதம் என்று கூறினர்.

பார்ப்பன-பனியாக்களுக்கு அதிகார மாற்றம்

‘பிரிட்டிஷ் இந்தியா’ காலகட்டத்தில் மாகாணங்களில் எழுந்த கோரிக்கைகளை முழு உடன்பாடு கொண்டு ஏற்காவிட்டாலும்கூட பிரிட்டிஷ் ஆட்சி அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து வந்திருக்கிறது என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய கூறு. “ஆணையத்தை அறிவித்து அறிக்கையை அலமாரியில் தூங்க

வைக்கும்'' இன்றைய தேச பக்தர்களைப்போல் அல்லாமல், ஏதோ ஒரு வகையில் தொடர் நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்தது என்பதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். 1935இல் பிரிட்டிஷ் அரசு உருவாக்கித் தந்த சட்டம் தான் 1950இல் இந்தியாவில் உருவான அரசியல் சட்டத்துக்கும் அடிப்படையாக அமைந்தது.

கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.

1947 ஆகஸ்ட் 15 - இந்தியாவுக்கு 'சுதந்திரம்' என்ற அறிவிப்பு வெளியானது. இது சுதந்திர நாள் அல்ல; துக்க நாள். பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரம் பார்ப்பன-பனியாக்களுக்கு கை மாறுகிறது (Made over) என்று ஓங்கி ஒலித்தது ஒரு குரல்; அது தான் பெரியாரின் குரல்.

வரலாற்று ஆசிரியர் ரோனாலட் சேகால் இந்தியா ஒரே நாடு அல்ல என்ற வரலாற்று உண்மையை இவ்வாறு கூறுகிறார்:

"இன்றைய இந்தியா மொழிவாரி மாநிலங்களைக் கொண்ட ஓர் கூட்டாட்சி ஒன்றியம். வேறுபட்ட மக்கள், மொழி, கலாச்சாரம், மரபுகளைக் கொண்ட நாடு என்பதற்கு மொழி வழி மாநிலங்களே சான்றுகள். அதன் வேறுபாடுகள் மிக ஆழமாகத் தெரிகின்றன. வட இந்திய விவசாயி, உருவம், அளவு, நிறம், உடை, மொழி, மரபு ஆகியவைகளால் தென்னிந்தியன் மாறுபடுகிறான்.

ஆரியத்தின் வழி வந்த இந்தியை, நாட்டின் ஆட்சி மொழியாக ஏற்க மறுத்த தென்னகத் துக்கு திராவிடர் களால் நடத்தும் மொழிப் போராட்டம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, வெளியார் படையெடுப்புகளை எதிர்த்து பூர்வகுடி மக்கள் நடத்திய போராட்டத்தையே பெரிதும் ஒத்திருக்கிறது'' என்கிறார். (ஆதாரம்: Ronald Segal; "The Crisisis of India" 1971 p.20-21)

பிரிட்டிஷ் ஆட்சியைப் பயன்படுத்தி பார்ப் பனர்கள் மேலாதிக்கம் செலுத்த விரும்பியதையும் பிரிட்டிஷார் பார்ப்பனர்களைத் தங்களுக்கு

இணை யாக முன்னிறுத்த மறுத்த நிலையில் பார்ப்பனர்கள் பிரிட்டிஷ் எதிர்ப்பு முழக்கத்தை முன் வைத்தார்கள் என்றும், அதுபோது ஒடுக்கப்பட்ட மக்களோடு உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள மறுத்தார்கள் என்றும் ஆய்வாளர் எஸ். சந்திரசேகர் தென்னிந்திய வரலாற்றுக் காங்கிரசின் 22ஆவது மாநாட்டில் சமர்ப்பித்த ஆய்வில் சுட்டிக் காட்டுகிறார்.

"தென்னிந்தியாவில் தேசிய இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் முதலாவது தலைமுறையைச் சார்ந்த பார்ப்பனர்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் கிடைத்த சலுகை களையும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதே நேரத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களே தங்களோடு சமமான உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முயற்சித்தனர். அம்முயற்சி பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. இதனால் ஆத்திரம் அடைந்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கத் தொடங்கினர். ஆனால் பிற்படுத் தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் தங்களுக்கு சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறியபோது அவர்களுடன் உரிமைகளைப் பகிர்ந்து கொள்ள பார்ப்பனர்கள் மறுத்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் சமமான மதிப்பு நிலைக்கு தாங்கள் வரும் வரை பிற்படுத்தப் பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைப் பேசாமல் காத்திருக்க வேண்டும் என்று அறிவுரை கூறினர். இந்த சூழ்நிலையை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டனர்."

(S. Chandrasekar study of Early National Phase in South India - Problem and Perspectives)

பார்ப்பன மேலாதிக்கத்துக்கு மற்றொரு சான்றையும் கூறலாம். 1937ஆம் ஆண்டு மாகாண சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடந்தபோது 7 மாகாணங்களில் 6 மாகாண முதல்வர் பதவிகளை அபகரித்துக் கொண்டவர்கள் பார்ப்பனர்கள்.

அய்க்கிய மாகாணம் - கோவிந்த வல்லபந்த்; மத்திய மாகாணம் - ரவிசங்கர் சுக்லா; பீகார் - கிருஷ்ண சின்ஹா; பம்பாய் - பி.ஜி. கெர்; அசாம் - கோபிசந்த் பர்கவா; சென்னை - ராஜகோபாலாச்சாரி.

ஏழாவது மாகாணமான வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மிகப் பெரும்பாலோர் இஸ்லாமியர்களாக இருந்த காரணத்தாலும் அங்கு பார்ப்பனர்களே அறவே இல்லாததாலும் அம்மாகாண முதல்வராக டாக்டர் கான் சாகிப் என்ற இஸ்லாமியர் பதவிக்கு வந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியில் பார்ப்பன ஆதிக்கம் எப்படித் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது? பிரிட்டி ஷாரை தன் வயப்படுத்திப் பார்ப்பனர்கள் எப்படி பதவிகளைப் பிடித்தார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. இரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.

அப்போதெல்லாம் சென்னை மாகாணத்தில் ஐ.சி.எஸ். அல்லாத பணிகளுக்கும் (non-ICS.), டெபுடி கலெக்டர் அல்லாத பணிகளுக்கும் (non-Deputy Collector) ஆட்களை நியமிக்கும் பொறுப்பு மாவட்டக் கலக்டரிடமே இருந்தது.

அந்தக் காலத்துக் கலெக்டர்களோ சர்வவல்லமை படைத்தவர்கள். தஞ்சைக் கலெக்டராக நியமிக் கப்பட்ட எச்.எஸ். தாமஸ் என்கிற வெள்ளைக்காரர் பதவியேற்கும்போது மூவேந்தர்களைப் போலத் தஞ்சை நகரத்துத் தெருக்களில் யானை மீது பவனி வந்ததாக 1888, ஜூலை 25ஆம் நாள் ‘இந்து’வில் வந்த செய்தி கூறுகிறது.

டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் கீழ்க்கண்ட செய்தியைக் குறிப்பிடுகிறார்:

“உத்தமதானபுரத்தில் அண்ணா ஜோஸ்ய ரென்ற ஓர் அந்தணர் இருந்தார். அவர் ஜோஸ் யத்திலும் வைதிக வாழ்க்கையிலும் வேண்டிய வற்றைப் பெற்றுக் கவலையின்றி ஜீவனம் செய்து வந்தார். நல்ல கட்டுள்ள தேகம் வாய்ந்த அவர் ஒரு நாள் எங்கோ ஒரு கிராமத்தில் சாப்பிட்டுவிட்டு மார்பு நிறையச் சந்தனமும், வாய் நிறையத் தாம்பூலமும், குடுமியிற் பூவும் மணக்க மணக்க உல்லாசமாக ஊருக்கு வந்து கொண்டிருந்தார். நடு வழியே பாபநாசத்தில் தஞ்சாவூர்க் கலெக்டர், ‘முகாம்’ செய்திருந் தார். அவ்வழியே வரும்போது கலெக்டரும் சிரஸ்தேதாரும் வெளியே நின்று கொண்டிருந்தனர். கலெக்டர் வெள்ளைக்காரர்; சிரஸ்தேதார் இந்தியர்.

கலெக்டர் துரையினுடைய பார்வை அண்ணா ஜோஸ்யர் மேல் விழுந்தது. அவருடைய அங்க அமைப்பையும், ரிஷபம் போன்ற நடையையும், முகத்தில் இருந்த ஒளியையும் கண்டபோது கலெக்டர்

துரைக்கு மிக்க ஆச்சரியம் உண்டாயிற்று. திடீரென்று அவரை அழைக்கச் செய்து சிரஸ்தேதார் மூலமாக அவரிடம் சில விஷயங்கள் கேட்கலானார்.

கலெக்டர் : "உமக்குப் படிக்கத் தெரியுமா?"

ஜோஸ்யர் : "தெரியும்."

கலெக்டர் : "கணக்குப் பார்க்கத் தெரியுமா?"

ஜோஸ்யர் : "அதுவும் தெரியும். நான் ஜோஸ் யத்தில் நல்ல பழக்கம் உடையவன். அதனால் கணக்கு நன்றாகப் போடுவேன்."

கலெக்டர் : "கிராமக் கணக்கு வேலை பார்ப்பீரா?"

ஜோஸ்யர்: "கொடுத்தால் நன்றாகப் பார்ப்பேன்."

"அவர் கம்பீரமாக விடையளிப்பதைக் கேட்ட துரைக்குச் சந்தோஷம் உண்டாகி விட்டது. ஜோஸ்யர் நன்றாக அதிகாரம் செய்யக் கூடியவரென்றும், ஜனங்கள் அவருக்கு அடங்குவார்கள் என்றும் அவர் நம்பினார். உடனே ஒரு கர்ணம் வேலையைக் கொடுத்து விட்டார்."

- இப்படி போட்டியோ, தேர்வோ இல்லாத அந்தக் காலத்தில் உத்தியோகம் தானாக அவர்களை நாடி வந்தது!

உயர் பதவியில் ஒரு "பிராமணர்" நியமிக்கப்பட்டால் உடனே தனது நியமன அதிகார வரம்பிற்குட்பட்ட பிற பதவிகளிலும் தங்களது இனத்தாரைக் கொண்டு வந்து நிரப்புவதும், தொன்று தொட்டு இருந்து வரும் வழக்கமாகும்.

ஒருமுறை வருவாய்த் துறை வாரியம் ஆய்வு நடத்தியபோது, நெல்லூர் மாவட்டத்தில் ஜி.வெங்கட் ரமணையா என்கிற உயர் பதவி வகித்த பிராமணருக்கு உறவினர்களும், தொடர்புடையவர்களும் மாத்திரம் அந்தத் துறையில் 49 பேர் இருந்தது தெரிய வந்தது.

இந்தத் தகவல், வருவாய்த் துறை வாரியத்தின் 1854ஆம் ஆண்டின் மார்ச் மாதக் குறிப்பில் காணப்படுகிறது.

இதோ, மேலும் ஒரு உதாரணம் -

1890களில் செங்கற்பட்டிலும், சென்னை நகரிலும் தோன்றிய 'வெம்பாக்கம் அய்யங்கார் குடும்பம்' (புகழ் பெற்ற சர். பாஷ்யம்

அய்யங்கார் வகையறா) ஆங்கிலேயர் ஆட்சியில் கிடைக்கும் உத்தியோகங் களையெல்லாம் நன்கு நுகர்ந்தது.

1861லிருந்து 1921 வரை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஐவர் சட்டசபை உறுப்பினர்களாகவும், இருவர் அட்டர்னி ஜெனரல்களாகவும், மூவர் உயர்நீதிமன்ற நீதிபதிகளாகவும், மூவர் ஸ்மால் காஸ் கோர்ட் நீதிபதிகளாகவும், மாண்டேகு-செம்ஸ் ஃபோர்டு சீர்திருத்தத்தில் உதயமான ஆட்சியில் ஒருவர் முதல் உள்துறை அமைச்சராகவும், மூவர் மாநில அரசின் துணை செகரெட்டரிகளாகவும் இருந்திருக் கின்றனர். மேலும் பலர் தாசில்தார்களாகவும் பப்ளிக் பிராசிகியூட்டர் களாகவும், டெபுடி கலெக்டர்களாகவும் இருந்தனர்.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் ஸ்ரீ வைஷ்ணவ பிராமணர்கள் (அய்யங்கார்கள்) நாடெங்கிலும் பெரும் பதவி வகித்து வந்ததால், வெம்பாக்கத்துக்காரர்கள் அவர்களோடு திருமண உறவு கொண்டு மதுரை, திருச்சி, தஞ்சை வரைக்கும் உறவின் முறை யினரைக் கொண்டிருந்தனர். அந்தச் சமுதாயத்தில் நல்ல பிரகாசமான இளைஞர்கள் - உறவினர்கள் அல்லாதவர்களாக இருந்தாலும் மண உறவின் மூலம் அவர்களைத் தங்கள் சுற்று வட்டத்திற்குள் இழுத்துக் கொண்டனர்.

தங்களது குடும்பக் கட்டமைப்பையும், செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்வதற்காக 1890ஆம் ஆண்டிலிருந்து வெம்பாக்கத்துக்காரர்கள் ஆண்டுதோறும் தங்கள் ‘குடும்ப மாநாடு’ ஒன்றைக் கூட்டித் தங்களது குடும்ப நலன் - கல்வி - வேலை வாய்ப்புகள் முதலியன குறித்து விவாதித்திருக்கின்றனர். இந்த மாநாட்டில் 50க்கு மேற்பட்டோர் கலந்து கொள்வது வழக்கமாம். உண்மையில் அந்தக் குடும்பம் ஒரு சிறிய சாதிச் சங்கமாகவே செயல்பட்டிருக்கிறது.

இதுபோலவே ஆங்கிலேயர் ஆட்சியின் உத்தியோகத் துறையை நன்கு பயன்படுத்திக் கொண்ட குடும்பம் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சர். சி.பி.இராமசாமி அய்யர் குடும்பமாகும். அவரது தாத்தா வட ஆற்காட்டிலிருந்து தஞ்சைக்குச் சென்றார். அவரது தந்தை தஞ்சையிலிருந்து சென்னைக்கு வந்தார். 1900ஆம் ஆண்டிற்குள் உறவின் முறை மூலமும், நட்பின் மூலமும் தஞ்சையிலிருந்து மலபார் வரை அவர்கள் ஆதிக்கம் நீடித்தது. சர். சி.பி. இராமசாமி அய்யர் சென்னை மாகாணத்தில் அமைச் சராக நியமிக்கப்பட்டார். அவரது

உறவினர்களான சி.வி. குமாரசாமி சாஸ்திரி, (நீதிபதி ரௌலட்டோடு இணைந்து ரௌலட் சட்டத்தை இயற்றியவர்) விஸ்வநாத சாஸ்திரி ஆகியோர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளானார்கள்.

1870-71ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 164 பேர் பட்டம் பெற்றார்கள். அதில் 110 பேர் (அதாவது 67%) பிராமணர்கள்.

1901லிருந்து 1911 வரை பட்டம் பெற்றவர்கள் 5,709 பேர். இதில் 4,074 பேர் (அதாவது 71%) பிராமணர்கள்.

- இதன் விளைவாக அரசாங்க உத்தியோகம் பிராமண வகுப்பாரின் ஏகபோக உரிமையாயிற்று.

1870லிருந்து 1918 வரை சட்டப் படிப்பில் (பி.எல்.) பட்டம் பெற்றவர்கள் 3,651 பேர். இதில் 2,686 பேர் பிராமணர்கள்.

அதுபோலவே ஆசிரியருக்கான பட்டப் படிப்பில் (எல்.டி.) 1,498 பேர் தேர்ச்சி பெற்றனர். இதில் 1,094 பேர் பிராமணர்கள், 207 பேர் இந்தியக் கிறித்துவர், 163 பேர் தான் இந்து பிராமணரல்லாதார்.

(ஆதாரம்: சி.ஜே. பேக்கர், டி.ஏ. விஷ்புரூக் மற்றும் எஸ். சரசுவதி எழுதிய ஆய்வு நூல்கள்)

ஆக, பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கம் என்ற ஒற்றைப் பார்வை யோடுதான் பிரிட்டிஷ் ஆதரவு எதிர்ப்பு நிலைப்பாடுகளை எடுத்தனர். அப்போது தொழிலதிபர்களாக வளர்ந்து வந்த பனியாக்களோடு பார்ப்பனர்கள் கைகோர்த்துக் கொண்டார்கள். எனவே பெறப் போகும் சுதந்திரம் பார்ப்பன-பனியாக்களிடம் அதிகாரத்தை மாற்றும் சுதந்திரம் என்ற சரியான கணிப்புக்கு பெரியார் வந்தார். அதைத் தான் வரலாறும் உறுதிப்படுத்தியது.

பிரிட்டிஷார் கொண்டு வந்த சீர்திருத்தச் சட்டங்கள்

தென்னாட்டில் 'தீண்டப்படாத மக்கள்' ஊதியம் பெறாமல் 'அடிமைகளாக' நடத்தப்பட்டதை பிரிட்டிஷ் ஆட்சி தடை செய்தது.

'பால்ய விவாகம்' தடைச் சட்டம் வந்தபோது திலகர் கடுமையாக எதிர்த்தார். சீர்திருத்தச் சட்டத்தை ஆதரித்தவர்கள் தாக்கப்பட்டனர்.

தஞ்சை நாயக்கர் மன்னன் இறந்தபோது அவருடன் 375 பெண்கள் நெருப்பில் போட்டு சாகடிக்கப்பட்டனர்.

'உயில்' எழுதுவதை புரோகிதர்கள் ஏற்க மறுத்தனர்.

கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணி யில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.

பிரிட்டிஷ் ஆட்சியில் பார்ப்பனர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்று, பெரிய பதவிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டினார்கள். பிரிட்டிஷ் ஆட்சி, பார்ப் பனர்கள் எதிர்ப்பில் மிகவும் தயக்கம் காட்டியது. மதப் பிரச்சினைகளில் பிரிட்டிஷ் ஆட்சி தலையிடக் கூடாது என்ற

உறுதிமொழியை பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து பார்ப்பனர்கள் பெற்றுக் கொண்டார்கள். ‘விக்டோரியா பிரகடனத்தில்’ அவ்வுறுதி மொழி சேர்க்கப்பட்டது.

அப்போதெல்லாம் நீதிமன்றங்களில் ‘இந்துக்களுக்கான’ வழக்குகளுக்கு அடிப்படை சட்டமாக ‘மனு சாஸ்திரம்’ உள்ளிட்ட சமஸ்கிருத சாஸ்திர நூல்களே இருந்தன. அய்ரோப்பிய நீதிபதிகள் ‘புரோகிதர்களை’ அருகில் வைத்துக் கொண்டு, அவர்கள் தரும் ஆலோசனைப்படி தீர்ப்புகளை வழங்கினார்கள். மனுசாஸ்திரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் வில்லியம் ஜோன்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர். அவரே ‘புரோகிதர்கள் கூறும் சாஸ்திர விளக்கங்கள் குழப்பமாக இருக்கிறது; அவர்கள் நேர்மை யானவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் கூறும் விளக்கங்களை நம்ப முடியவில்லை’ என்று கூறினார். புரோகிதர்கள் கூற்றுக்கும் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள தற்கும் வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்த அய்ரோப்பிய நீதிபதிகள், புரோகிதர்களை உடன் வைத்துக் கொள்ளும் முறையை 1864 முதல் நிறுத்தி விட்டார்கள். இதை புரோகிதர் கூட்டம் விரும்பவில்லை.

மற்றொன்று ‘உயில்’ எழுதுவது தொடர்பான பிரச்சினை; தனது இறுதி காலத்தில் செத்துக்களை யாருக்கு வழங்குவது என்பது குறித்தும், இறுதி விருப்பம் குறித்தும் எழுத்துபூர்வமாகப் பதிவு செய்வதே ‘உயில்’, வேத சாஸ்திரங்களில் ‘உயில்’ எழுதுவது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. எனவே இந்த உயில்களை சட்டப்படி ஏற்க முடியாது என்று புரோகித பார்ப்பனர்கள் வலியுறுத்தினார்கள். 1860இல் நீதிமன்றம் உயில் எழுதுவது சட்டப்படி செல்லும் என்று தீர்ப்பளித்தது.

புரோகிதர்களை ஆத்திரப்படுத்திய மற்றொரு முக்கிய பிரச்சினை, பிரிட்டிஷ் ஆட்சி கொண்டு வந்த ‘இந்திய சம்மத வயது வந்தோர் சட்டம் - 1875’. மனைவிக்கு 12 வயது ஆன பிறகு தான் கணவன், அவளோடு உடலுறவு கொள்ள வேண்டும் என்று கூறியது இந்தச் சட்டம். அதற்கு முன்பு 10 வயதிலேயே உறவு கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. சிறு வயதிலேயே பெண்களை திருமணம் செய்து வைக்கும் ‘பால்ய விவாகம்’ என்ற சமூகக் கொடுமையை பெண்கள் மீது சுமத்தியிருந்தது வேத புரோகிதப் பார்ப்பனர்கள் கூட்டம். சிறுமிகளை பாலுறவு வன்கொடுமையிலிருந்து விடுவிக்கும் இந்தச் சட்டத்தை மிகக்

கடுமையாக எதிர்த்தவர் பேஷ்வா பார்ப்பனரும், காங்கிரஸ் தலைவருமான பால கங்காதர திலகர். இந்தச் சட்டத்தை எதிர்த்து 1890இல் மக்களைத் திரட்டி பெரும் பொதுக் கூட்டங்களை நடத்தினார் திலகர். எந்தச் சீர்திருத்தமாக இருந்தாலும் மதத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்றும், இந்த சீர்திருத்தச் சட்டங்களின் மீது நம்பிக்கை இல்லாதவர்களை சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் அவர் வாதிட்டார். நாடு முழுதும் பார்ப்பனப் புரோகிதர்கள் இந்தச் சட்டத்துக்கு எதிராகக் கூட்டங்களை நடத்தினார்கள். திலகர் தனது ‘கேசரி’ பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி எதிர்ப்பைத் தூண்டி விட்டார்.

சம்மத வயது சட்டத்தை ஆதரித்து 1891ஆம் ஆண்டு பிப். 25 அன்று புனே நகரில் ‘கிரீதா பவன்’ என்ற அரங்கில் சீர்திருத்தவாதிகள் நடத்திய ஒரு கூட்டத்தில் திலகர் தனது ஆதரவாளர்களுடன் உள்ளே நுழைந்து, நாற்காலி மேஜைகளை உடைத்து, கலவரம் செய்து கூட்டத்தை பாதியில் நிறுத்தினார் என்று திலகரின் வாழ்க்கை வரலாற்றைப் புகழ்ந்து பெருமையுடன் எழுதியுள்ள டாக்டர் விஸ்வநாத் பிரசாத் வர்மா, அந்த நூலில் பதிவு செய்துள்ளார். ஆனால் பார்ப்பன புரோகிதர் பண்டிதர்களின் கடும் எதிர்ப்புகளையும் மீறி 1891இல் மத்திய சட்டசபையில் பிரிட்டிஷ் ஆட்சி சட்டமாக்கியது. அப்போது வைஸ்ராயாக இருந்தவர் லேன்ஸ் டவுன். சட்டம் தான் வந்ததே தவிர, சமூகத்தில் ‘பால்ய விவாகங்களை’ தடுக்க முடியவில்லை.

பார்ப்பனியத்தின் சமூகச் செல்வாக்கு சமூகத்தை இறுக்கப் பிடித்திருந்ததோடு, பிரிட்டிஷ் ஆட்சியையும் அச்சுறுத்தியே வந்தது. பிறகு சுமார் 35 வருடங்கள் கழித்து, பெண்ணின் திருமண வயதை 14ஆக உயர்த்தும் மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் சட்டமாக்க முடிவில்லை. இந்தியாவில் பெரும்பாலான பெண்களுக்கு 15 வயதுக்கு முன்பே திருமணங்கள் முடிந்து விடுகின்றன என்ற அதிர்ச்சியான தகவல்களை பிரிட்டிஷ் ஆட்சி நியமித்த குழு வெளிப்படுத்தியது. அதைத் தொடர்ந்து, 1929இல் ஹர்பிலாஸ் சாரதா என்பவர் பெண்ணின் திருமண வயதை 14 என்றும் ஆணின் வயதை 18 ஆகவும் நிர்ணயித்து, ஒரு மசோதா கொண்டு வந்தார். அது சட்டமானது இந்தச் சட்டத்தை மீறுவோருக்கு 1000 ரூபாய் அபராதம், ஒரு மாத சிறைத் தண்டனை என்று

அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் இந்து, கிறித்தவர் மற்றும் முஸ்லிம் அனைவருக்கும் பொருந்துவதாக இருந்தது.

கணவன் இறந்தவுடன் அவனது உடலை எரிக்கும் நெருப்பிலேயே மனைவியையும் எரிக்கும் 'உடன்கட்டை' ஏறுதல் என்ற சமூகக் கொடுமையை பார்ப்பனர்கள் சமூகத்தில் திணித்தார்கள். இதற்காக வேதங்களின் வார்த்தைகளையே திருத்தியதை வரலாற்றாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். 'பால்ய விவாகம்', 'உடன்கட்டை ஏறுதல்' எனும் இரண்டு சமூகக் கொடுமைகளுமே வர்ணங்களை மீறி, திருமணங்கள் நடந்து விடக் கூடாது; 'பிராமணர்' உள்ளிட்ட இரு பிறப்பாளர்கள் 'உயர் வர்ணப் பெருமை' கட்டிக் காக்கப்பட வேண்டும் என்ற நோக் கத்தோடு திணிக்கப்பட்ட சமூகக் கொடுமையாகும்.

'சதி' எனும் 'உடன்கட்டை' ஏறும் கொடுமை, வடநாட்டில் அதிக அளவில் நடந்தாலும் தென்னாட்டிலும் இருந்திருக்கிறது. 1802இல் தஞ்சையை ஆண்ட நாயக்கர் மன்னர் இறந்தபோது அவருடன் 375 பெண்கள் தாங்களாகவே உயிரைப் பலி கொடுத்தனர். 1829இல் வில்லியம் பெண்டிங் என்பவர் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது 'சதி'க் கொடுமையை ஒழித்து சட்டம் இயற்றினார். இராஜாராம் மோகன்ராய் போன்ற சீர்திருத்தவாதிகள் இதற்கு ஆதரவாக இருந்தனர்.

அதேபோல், பெண் குழந்தைகள் பிறந்தாலே கொன்று விடும் 'பெண் சிசுக் கொலை', 1870இல் பிரிட்டிஷ் ஆட்சியில் தான் தடை செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தின் வழியாகத்தான் பிறப்பு, இறப்பு களைப் பதிவு செய்வது கட்டாயப்படுத்தப்பட்டது.

பெண்கள் மீது சுமத்தப்பட்ட மற்றொரு சமூகக் கொடுமை, கணவனை இழந்த பெண்கள், 'விதவை' களாகவே வாழ்ந்து, சாக வேண்டும் என்பதாகும். இது, சாஸ்திரத்தில் ஏற்கப்பட்டிருக்கிறது என்று பார்ப்பன பழமைவாதிகள் வாதிட்டனர். குறிப்பாக, 'பிராமண' சமூகத்தில்தான் இந்த 'விதவை'க் கொடுமைகள் தீவிரமாகப் பின்பற்றப்பட்டன. 1855இல் கவர்னர் ஜெனரல் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்த கிரான்ட் என்பவர், இந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தில், 'விதவைகள் மறுமணம்' எனும் மசோதாவைக் கொண்டு வந்தார். புரோகிதர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். பிரிட்டிஷான

கிறிஸ்தவர்கள், 'இந்து' நம்பிக்கைகளில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டினார்கள். நாடு முழுதும் இந்தச் சட்டத்துக்கு பழமைவாதிகள் எதிர்ப்பும், சீர்திருத்தவாதிகள் ஆதரவும் எழுந்த நிலையில், 1856இல் இந்து விதவைகள் மறுமணம் சட்டமாக்கப்பட்டது. சட்டம் வந்ததே தவிர, சமூகத்தில் நடைமுறைக்கு வர முடியவில்லை. சட்டம் வந்து 33 ஆண்டுகளுக்குப் பிறகு, 1889இல் ஜி. சுப்ர மணிய அய்யர் தன்னுடைய விதவை மகள் சிவப் பிரியாம்பாள் என்பவருக்கு மறு மணம் செய்து வைத்தார். இதன் காரணமாக ஜாதி சமூகத்திலிருந்து அவர் ஒதுக்கி வைக்கப்பட்டார். சட்டம் வந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு தான் சென்னை மாகாணத்தில் 1851, டிசம்பர் 11இல் முதல் விதவைத் திருமணம் நடந்தது. (ஆதாரம்: ப.சு. சந்திரபாபு-இல. திலகவதி எழுதிய 'பெண் வரலாறும் விடுதலைக்கான போராட் டமும்' ஆய்வு நூல், பாரதி புத்தகாலய வெளியீடு)

அடிமை முறை எனும் கொடுமை தமிழ்நாட்டிலேயே இருந்திருக்கிறது. அடிமைகளாக நடத்தப் பட்டவர்கள் அனைவருமே 'சூத்திரர்கள்'. 'தீண்டப் படாத' பிரிவைச் சார்ந்த மக்கள், ஊதியம் வாங்காமல் அவர்கள் வேலை செய்வது கட்டாயம். 'சூத்திரர்கள்', அடிமைகளாக நடத்தப்பட்டார்கள் என்றால், 'தீண்டப்படாத', 'சண்டாளர்கள்' என்று அழைக்கப் பட்ட மக்கள், இறந்துபோன சடலங்களுக்கு இணையாக நடத்தப்பட்டனர். முதலில் பிரிட்டிஷ் ஆட்சி இதை கண்டு கொள்ளவில்லை. 'கொடுமை தாங்காமல் ஓடிப்போன அடிமைகளை'க் கண்டுபிடித்து, மீண்டும் அவர்களின் எஜமானர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வருவாய் வாரியத்துக்கு தஞ்சை 'கலெக்டர்' (ஆட்சித் தலைவர்) கடிதம் எழுதிய ஆவணங்கள் இருக்கின்றன. அடிமைகள் தங்களின் 'எஜமானர்களிடம்' அடிமைகளாக வேலை செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டிய பொறுப்பு, காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1830இல் திருச்சி 'கலெக்டர்' என்.எஸ். கேமரோன், தனது மாவட்டத்தைச் சார்ந்த ஒரு 'பிராமண' நிலப் பிரபுவிடமிருந்து ஓடிப் போன பத்து 'பள்ளர்' சமூகத்தைச் சார்ந்தவர்களை திருப்பி அனுப்புமாறு சேலம் கலெக்டருக்கு கடிதம் எழுதியிருப்பதை வரலாற்றுப் பேராசிரியர் சி. பரமார்த்தலிங்கம் பதிவு செய்திருக்கிறார்.

1843ஆம் ஆண்டில் அடிமை ஒழிப்புச் சட்டம் வந்தது. 1861இல் தண்டனை வழங்கக்கூடிய 'பீனல் கோடு' சட்டம் வந்தது. ஆனாலும் சட்டங்களால் அடிமைமுறையை ஒழித்துவிட முடியவில்லை. 1871ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை இவ்வாறு கூறுகிறது.

"ஒரு சமூகம் என்ற அடிப்படையில் (தீண்டப் படாத) மக்களை பிரிட்டிஷ் நிர்வாகம் விடுதலை செய்திருந்தாலும் சமூக அடுக்கு எனும் அமைப்பில் அவர்கள் படுபாதாளத்திலேயே இருந்தார்கள். பொதுப் பயணிகள் படகுகளில் ஒரு 'பறையர்' தனது முகத்தைக் காட்டிவிட முடியாது. அரசு மற்றும் பொதுப் பள்ளிகளில், அரசு நிதி உதவியோடு நடத்தப்படும் பள்ளி களிலும் இதே நிலை தான்" என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை எழுத்து பூர்வமாகப் பதிவு செய்துள்ளது.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'இந்தியா' வந்த பிரஞ்சுக்காரர் அபேதுபே 30 ஆண்டுகள் தென்னகத்தில் தங்கி மக்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, 'இந்திய மக்கள்' என்ற நூலை பிரெஞ்சு மொழியில் எழுதி (1806) வெளியிட்டார். பிறகு தமிழிலும் வெளி வந்தது. அதில், ஏராள மான ஜாதிக் கொடுமைகள், பெண்களைக் கட்டாயப் படுத்தி உயிருடன் எரிக்கப்பட்ட அவலங்களைப் பதிவு செய்துள்ளார். மக்களிடையே இந்தக் கொடுமைகள் குறித்து விழிப்புணர்வை உருவாக்கி யதில் அய்ரோப்பாவிலிருந்து இந்தியா வுக்கு வந்த கிறிஸ்தவ போதகர்களின் பங்கு மகத் தானது. அவர்களின் நோக்கம் மதம் மாறச் செய்வது தான் என்றாலும் சமூகக் கொடுமைகளுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கினார்கள். பிரிட்டிஷார் கொண்டு வந்த சட்டங்களால் 'சமூக மாற்றங்கள்', 'விழிப்புணர்வுகள்' வந்து விடுமோ என்று பார்ப்பனர்கள் அஞ்சினார்கள்.

பிரிட்டிஷாருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள போட்டி போட்டுக் கொண்டு நின்ற பார்ப்பனர்கள், சமூக மாற்றச் சட்டங்களைக் கண்டு பதறினார்கள். முதலில் திலகர் தொடங்கிய 'இந்து' சுயராஜ்யத்தை ஆதரித்தார்கள். பிறகு காங்கிரசிலும் நுழைந்து தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தினர். மாறுபட்ட காந்தியை சுட்டுக்கொலை செய்தனர்.

‘திராவிட நாடு’ கேட்டு காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்தார் ராஜாஜி

1940இல் ‘திராவிட நாடு’ கொள்கையை ஆதரித்து தீர்மானம் போட்டது நீதிக்கட்சி.

நேரு - அரசியல் நிர்ணய சபையில் மாநிலங் களின் முழு சுயாட்சியை ஆதரித்துப் பேசினார்.

1921ஆம் ஆண்டிலேயே ‘சென்னை மாகாணம்’ என்ற அடையாளத்தைக் கைவிட்டு, ‘தமிழ் மாகாண காங்கிரசாக’ப் பெயர் சூட்டிக் கொண்டது. அதன் முதல் தலைவராக இருந்த பெருமை பெரியாருக்கு உண்டு.

பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கை எழுந்த நிலையில் காங்கிரஸ் தனது போக்கை தலை கீழாக மாற்றி மாநில சுயாட்சியைக் குழித் தோண்டி புதைத்தது.

பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொண்ட பார்ப்பனர்கள், சமூக சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்த நிலையில், ‘தேச பக்தர்களாகி’, ‘சுதந்திரப்’ போராட்டம் நடத்திய காங்கிரசுக்குள் புகுந்து கொண்ட வரலாறுகளைப் பார்த்தோம். எதிர்பார்த்ததுபோலவே, ‘சுதந்திரம்’ - பார்ப்பன-பனியாக்களுக் கானதாகவே இருந்தது. இதைத் தான் பெரியார் எச்சரித்தார். சுதந்திர நாளை துக்க நாள் என்றார். இந்தப் பின்னணியில் அரசியலமைப்பு சபை எப்படி உருவானது என்ற வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

முதலில் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய அரசியல் நிர்ணய சபை, மக்கள் அனைவராலும் ஓட்டுப் போட்டு தேர்வு செய்யப்பட்ட அமைப்பு அல்ல. 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷார் உருவாக்கித் தந்த சட்டத்தின்படி படித்தவர்கள், சொத்துள்ளவர் களுக்கு மட்டுமே ஓட்டுரிமை. அந்த அடிப்படையில் மாகாண சபைக்கு தேர்வு செய்யப்பட்ட மாகாண சட்டசபைகள் அரசியல் அமைப்பை உருவாக்கும் சபைகளாக அறிவிக்கப்பட்டன. அதில் உறுப்பினர் களாக இருந்தவர்கள் 299 பேர் (பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு). 11 முறை இந்த சபை கூடி, 3 ஆண்டுகள் விவாதித்து சட்டத்துக்கு இறுதி வடிவம் தந்தன. இதில் பெண் உறுப்பினர்கள் 15 பேர் மட்டுமே. சட்டத்துக்கு வடிவம் தருவதற்கு (Drafting Committee) 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் தலைவர். அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர், என். கோபால்சாமி அய்யங்கார், கே.எம். முன்ஷி, முகம்மது சாதுல்லா, பி.எல். மிட்டர், டிபி. கைத்தான். இதில் டாக்டர் அம்பேத்கர், முகம்மது சாதுல்லா இருவரைத் தவிர, அனைவருமே பார்ப்பனர்கள். செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட இந்த வரைவுக் குழு தயாரித்த சட்ட நகல்களே, அரசியல் நிர்ணய சபையில் பெருமளவில் விவாதிக்கப் பட்டன. வரைவுக் குழுவின் ஆலோசகராக இருந்தவர் பி.என். ராவ். இவர் உலகம் முழுதும் சுற்றுப்பயணம் செய்து பல நாடுகளின் அரசியல் சட்டங்களை ஆய்வு செய்தார்.

பார்ப்பனர்கள் ஆதிக்கம் நிறைந்த அரசியல் வரைவுக் குழுவில் அம்பேத்கர் தலைவராக இருந்தும் கூட அவரால், தான் எண்ணியவாறு முழு உரிமையுடன் செயல்பட முடியாத நிலையில் கைகள் கட்டப்பட்டிருந்தன. “நான் வாடகைக் குதிரையாகவே செயல்பட்டேன்” என்று அவரே பிறகு மனந்திறந்தார். இந்த சட்டத்தை எரிப்பதில் நானே முதல் மனிதராக இருப்பேன் என்று பின்பு மாநிலங்களவையிலேயே பேசினார். இந்த அரசியல் பின்புலத்தில் அரசியல் சட்டம் எப்படி உருவாக்கப்பட்டது என்ற சோகம் நிறைந்த வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்:

1935ஆம் ஆண்டு பிரிட்டிஷார் உருவாக்கித் தந்த சட்டத்தின் பெரும் பகுதியை அப்படியே சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டது. 1935ஆம் ஆண்டு சட்டம் மாகாண உரிமைகளுக்கு எதிரானது என்று எதிர்த்துக் கொண்டிருந்த காங்கிரசார், அதே

மாநிலங்களின் உரிமை பறிப்புகளுக்கு பச்சைக் கொடி காட்டினார்கள்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், 'சனாதன தர்மத்தில்' ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவரும் அரசியல் நிர்ணயசபை உறுப்பினரும், 1948இல் நேரு அமைச்சரவையில் தொடர்வண்டித் துறை அமைச்சராக இருந்தவருமான கே. சந்தானம் (அய்யங்கார்) அரசியல் சட்டம் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

"பிரிட்டிஷ் அரசைக் கடுமையாக எதிர்த்து வந்த இந்திய தேசியத் தலைவர்கள் 1935இல் பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் நிலைநாட்டும் நோக்கத்துடன் உருவாக்கிய ஒரு அரசியல் சட்டத்தை அப்படியே அடிமைத்தனத்துடன் ஏற்றுக் கொண்டனர். (adopting almost slavishly) அதற்கான அசாதாரணமான சூழ்நிலையை அவ்வளவு சுலபமாக விளக்கிட முடியாது" என்கிறார். (Federal Financial Relations and other Essays). 1935ஆம் ஆண்டு சட்டத்தைத் தவிர, புதிய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்ட பகுதிகள் என்ன தெரியுமா? குடியரசு தலைவர் அதிகாரம், தேர்தல் நடத்தும் முறை, அடிப்படை உரிமைகள் பற்றிய சில பகுதிகள், அரசாங்கக் கொள்கைக்கான நோக்கங்கள், அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தங்கள் - இவை தொடர்பானவை மட்டுமே சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டன.

இந்தியவில் கூட்டாட்சி அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே புதிய அரசியலமைப்பு 'சுதந்திர' இந்தியாவுக்காக உருவாக் கப்பட்டது. ஆனால் அத்தனையும் தலைகீழாக மாறிவிட்டது. இரண்டு உதாரணங்களை மட்டும் சுட்டிக் காட்டுகிறோம். 1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ் உருவாக்கித் தந்த சட்டத்தின் அடிப்படையில் இந்தியாவில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதுவரை தேர்தலைப் புறக்கணித்த காங்கிரஸ், தனது நிலையை மாற்றிக் கொண்டது. (நீதிக்கட்சி ஆட்சி தேர்தலில் பங்கேற்று, பார்ப்பனரல்லாத மக்களின் உரிமை களுக்காக வகுப்புவாரி உரிமை, அறநிலையத் துறை சட்டம், பல்கலைக்கழகங்களை உருவாக்கும் சட்டம் மற்றும் சீர்திருத்த சட்டங்களைக் கொண்டு வந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத காங்கிரஸ் பார்ப்பனர்கள், தேர்தலில் போட்டியிட கட்சிக்குள் அழுத்தம் தந்தனர். சுயராஜ்ய கட்சி என்ற போர்வையில் களம் இறங்கினர்.)

அப்போது சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று இராஜகோபாலாச்சாரி (ராஜாஜி), சட்டப் பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டவுடன், “1937 – பிரிட்டிஷ் கவர்னரை நேரில் சந்தித்து ஆளுநர் தனது விருப்பம்போல் நிர்வாகத்தில் தலையிட மாட்டார் என்ற உறுதி மொழியைத் தர வேண்டும் என்றார். கவர்னரின் தலையீடு மாகாண சுயாட்சி உரிமையை மறுப்பதாகும். முழுமையான சுயாட்சி உரிமை இருந்தால் மட்டுமே பதவி ஏற்பேன் என்று நிபந்தனை விதித்தார். அதே நேரத்தில் காந்தியும், மாநில சுயாட்சியை உறுதி செய்ய வேண்டும். பதவிக் காலத்தில் அமைச்சர்கள் முடிவுகளில் ஆளுநர் குறுக்கிடக் கூடாது” என்று கோரிக்கை விடுத்தார் (1937, மார்ச் 30).

இந்த இடத்தில் ஒரு முக்கிய வரலாற்றுத் தகவலை பதிவு செய்ய வேண்டும். இராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) திராவிட நாடு தனியாகப் பிரிய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியவர்தான். அது முக்கிய செய்தி. இது குறித்து ‘மலர்க மாநில சுயாட்சி’ ஆய்வு நூலை எழுதிய கு.ச. ஆனந்தன் பின்வருமாறு எழுதியுள்ளார்:

“1942ஆம் ஆண்டு ஏப். 29இல் அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரசு செயற்குழுவில், “வட இந்தியத் தலைவர்களால் சென்னை மாகாணம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதால் தனி பாகிஸ்தான் பிரிவினை கோரிக்கையைப் போன்று இந்திய துணைக் கண்டத் திலிருந்து தனி சென்னை மாகாணமும் பிரிவினை செய்யப்பட வேண்டும்” என்ற தீர்மானத்தை இராஜாஜி கொண்டு வந்தார். இதனைக் கடுமையாக எதிர்த்து மற்றொரு பார்ப்பன காங்கிரஸ் தலைவரான சத்திய மூர்த்தி, ‘பிரிவினை வாதத்தை எழுப்பும் நச்சு மனிதன் இராஜாஜியை காங்கிரசிலிருந்து நீக்க வேண்டும்’ என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அடுத்த நாள் இராஜாஜி காங்கிரஸ் செயற்குழுவி லிருந்து பதவி விலகினார். அதற்குப் பிறகு நடந்த அலகாபாத் காங்கிரஸ் மாநாட்டிலும் இராஜாஜி இதே தீர்மானத்தைக் கொண்டு வந்தார். கடுமையான கண்டனங்களுடன் அங்கிருந்து வெளியேற்றப் பட்டார்.

பின்னர் ஈரோட்டில் இருந்த பெரியாரிடம் நேரில் சென்று, நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவு தருவதாகக் கூறினார். அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது, “பெரியார் கேட்கும் திராவிடஸ் தானை பிரித்துக் கொடுத்து விட வேண்டும்” என்று இராஜாஜி பேசினார்.

1945ஆம் ஆண்டு மே 26இல் சென்னை கோகலே மண்டபத்தில் பேசிய ராஜாஜி தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கையை ஆதரித்துப் பேசினார். “தமிழர்கள் தமிழ்நாட்டை ஆள வேண்டும் என்று சொல்வதில் தவறில்லை. தமிழ்நாட்டில் கால்பங்கு பரப்புள்ள அயர்லாந்தை ஏமன்டிவேலரா என்ற தனிநாடாக ஆளும்போது தமிழ்நாடு ஏன் தனித்து இயங்காது? என்று கேட்டார்.

இப்படி திராவிட நாடு - தமிழ்நாடு பிரிவினையை ஆதரித்துப் பேசிய இராஜாஜி, நாடு சுதந்திரம் பெறப் போகும் கட்டத்தில் மீண்டும் காங்கிரசுக்குள் நுழைந்து மத்திய அமைச்சர் மேற்கு வங்க ஆளுநர் - கவர்னர் ஜெனரல் பதவிகளைப் பெறத் தயங்கவில்லை. இந்திய தேசியம் வழியாக பதவி, அதிகாரம் கிடைத்தால் தேசியவாதிகளாக மாறுவார்கள். அதிகாரங்களில் இல்லாதபோது நாட்டுப் பிரிவினையும் பேசுவார்கள். இதுவே பார்ப்பனர்கள் அணுகுமுறை.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மாநிலங்கள் உரிமைகளுக்கும் மொழிவாரி உரிமைகளுக்கும் அழுத்தமாகக் குரல் கொடுத்தது காங்கிரஸ். தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் நீதிக் கட்சி திரவிட நாடு பிரிவினையை ஒலித்தது என்பது வரலாறு:

1946ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி, பிரதமர் நேரு அரசியல் நிர்ணய சபையில் மாநிலங்களின் முழு சுயாட்சியை வலியுறுத்தும் தீர்மானத்தையே முன்மொழிந்தார். எந்த மாநிலத்தின் மீதும் ஒன்றிய ஆட்சி முடிவுகளைத் திணிக்காது என்றும் தங்களுக்கான நிர்வாக அமைப்பை மாநிலமே தேர்ந்தெடுக்கலாம்; அது மன்னராட்சி என்ற முடிவாக இருந்தாலும்கூட ஒன்றிய ஆட்சி தலையிடாது என்றும் நேருவின் தீர்மானம் கூறியது.

மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்படாத காலத்திலேயே 1921ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் கட்சியின் அமைப்புகள் மொழி வழி மாகாணங்கள் அடிப்படையில் மாற்றி அமைக்கப் பட்டன. ‘இராஜ்ய மாகாண காங்கிரஸ்’ என்ற பெயரில் செயல்பட்ட அமைப்பு, ‘தமிழ் மாகாண காங்கிரசாக’ மாற்றப்பட்டது. அதன் முதல் தலைவராக இருந்த பெருமை பெரியாருக்கு உண்டு.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் காங்கிரஸ் கட்சி இந்தியாவுக்கு அரசியல் சட்டத்தை உருவாக்கு வதற்கு நியமித்த மோதிலால் கமிட்டியும் மாகாணங்களின் சுயாட்சியையே அழுத்தமாக பரிந்துரைத்தது.

தென்னிந்திய நலஉரிமைச் சங்கமான நீதிக் கட்சி, 1940இல் திருவாரூரில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டில் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதை தனது இலட்சியமாக அறிவித்தது.

பார்ப்பன-பனியாவுக்கு அதிகார மாற்றம் தரும் ஒரு நாட்டில் தமிழர்கள் அடிமைத்தளையில் சிக்கி விடக் கூடாது என்பதில் உறுதி காட்டிய பெரியார், தனது திரவிட நாடு கோரிக்கைக்கு (சென்னை மாகாணத்தை தனித் தேசமாக்க வேண்டும்) ஆதரவு திரட்ட - 1940 ஜனவரியில் முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னாவை சந்திக்க பம்பாய் சென்றார். அப்போது பெரியாருக்கும் அவருடன் வந்த குழுவினருக்கும் அம்பேத்கர் வரவேற்று விருந்தளித்து பார்ப்பனியத்தை ஒழிப்பதில் பெரியாரோடு இணைந்து செயல்படு வதில் பெருமையடைவதாகவும் கூறினார். அம்பேத்கர் அந்தப் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தவர் பெரியாருடன் சென்ற அண்ணா.

1940ஆம் ஆண்டு திருவாரூர் மாநாட்டைத் தொடர்ந்து காஞ்சிபுரத்தில் திராவிட நாடு பிரிவினை மாநாடு நீதிக் கட்சி சார்பில் நடந்தது. பெரியார் 'சென்னை மாகாணம்' என்ற திராவிட நாட்டை தனி நாடாக்க வேண்டும் என்று பேசி தீர்மானம் நிறைவேற்றச் செய்தார்.

அப்போது பேசிய 'திராவிட நாடு' என்பது கேரளா, ஆந்திரா, கருநாடக மாநிலங்களை உள்ளடக்கியது அல்ல; பிரிட்டிஷார் உருவாக்கிய 'சென்னை மாகாணம்' என்ற முழு தமிழ் நாட்டையும் ஒரு சில ஆந்திர, கருநாடக மாவட் டங்களையும் உள்ளடக்கிய பகுதியைத்தான் என்பதை குறிப்பிட வேண்டும். மொழி வழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு பெரியார் தமிழ்நாடு விடுதலை என்ற முழக்கத்தையே முன் வைத்தார்.

ஆக, அன்றைய 'இந்திய அரசியல் சூழல்' என்பது மாநில சுயாட்சி மற்றும் தனிநாடு கோரிக்கைகளை மய்யமாகக் கொண்டே சுழன்றன. 'ஒரே இந்தியா' என்ற எண்ண ஓட்டமே உருவாகவில்லை. அது

இந்தியாவில் நினைத்துப் பார்க்கவே முடியாத கற்பனை என்ற எண்ண ஓட்டமும் அதற்கான அக-புறக் காரணிகளுமே மேலோங்கி நின்றன.

மாகாண சுயாட்சிக்கு இவ்வளவு அழுத்தம் தந்த காங்கிரஸ், சட்டம் உருவாக்கப்படும் காலத்தில் அதை முழுமையாகக் கை கழுவி விட்டது. காரணம், பாகிஸ்தான் பிரிவினைதான். மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி வழங்கப்பட்டால் இந்தியா தனித் தனி நாடாக சிதறிப் போய்விடும் என்ற தவறான கண்ணோட்டமே இதற்குக் காரணம். "மாநில சுயாட்சி பிரச்சினையில் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு கடிகாரத்தின் பெண்டுலம், ஒரு முனையிலிருந்து நேர் எதிராக வேறு முனைக்குச் சென்றது" என்கிறார் அரசியல் நிர்ணய சபைக்குழு உறுப்பினர் கே. சந்தானம் அய்யங்கார்.?

பாகிஸ்தான் பிரிவினைக்கு யார் காரணம்?

பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொண்ட பார்ப்பனர்கள், சமூக சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்த நிலையில், 'தேச பக்தர்களாகி', 'சுதந்திரப்' போராட்டம் நடத்திய காங்கிரசுக்குள் புகுந்து கொண்ட வரலாறுகளைப் பார்த்தோம். எதிர்பார்த்தது போலவே, 'சுதந்திரம்' - பார்ப்பன-பனியாக்களுக் கானதாகவே இருந்தது. இதைத் தான் பெரியார் எச்சரித்தார். சுதந்திர நாளை துக்க நாள் என்றார். இந்தப் பின்னணியில் பாகிஸ்தான் எப்படி உருவானது என்ற வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

முஸ்லிம் லீக் - பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிய வேண்டும் என்ற கோரிக்கையை தொடக்கத்தில் வற்புறுத்தவே இல்லை. முழுமையான மாநில சுயாட்சி தான் தங்களது கொள்கை என்றும், முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தனி மாகாணங்களை உருவாக்கி ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் முஸ்லிம் மாகாணங்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்தி வந்தது.

1937இல் லக்னோவில் நடந்த மாநாடு; 1938இல் கராச்சியில் நடந்த மாநாடுகளில் மாகாண சுயாட்சியை வலியுறுத்தியே தீர்மானங்கள் போடப்பட்டன.

காங்கிரசில் இருந்த பார்ப்பனர்கள் காங்கிரசோடு இரண்டறக் கலந்து நின்ற 'இந்து மகாசபை'யினர், இஸ்லாமியர்களோடு இணைந்து வாழ்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்தியாவில் இந்து, இஸ்லாமியர் என்று இரு இனங்கள் உண்டு. இரு இனமும் இருவேறு தேசங்கள் என்று 1935இல் சாவர்க்கார் இந்து மகாசபை மாநாட்டில் வெளிப்படையாகவே பேசினார்.

1937ஆம் ஆண்டு வரை முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி இருந்தது. (இந்தியாவிலேயே தேர்தலில் முதன்முதலாக தனித் தொகுதி ஒதுக்கீடு பெற்றவர்கள் முஸ்லிம்கள் தான்) அரசுப் பதவிகளில் தனி ஒதுக்கீடு, முஸ்லிம்கள் பெரும்பான்மை கொண்ட மாகாணங்கள் என்ற உரிமைகளை அவர்கள் பெற்றிருந் தார்கள். ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் முழுமையான சுயாட்சி என்ற கோரிக்கையை அரசியல் சட்டம் உறுதி செய்தால் போதும் என்பதே ஜின்னாவின் கருத்து; தனிநாடு கோரிக்கையை நோக்கி ஜின்னாவை விரட்டியது காங்கிரஸ் கட்சியி லிருந்த மதவாதிகளும் – இந்து மகாசபையினரும் தான். நேருவுக்கும் இதில் பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கு இல்லை. 1937ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு நேரு மேற்கொண்ட முஸ்லிம் எதிர்ப்பு அணுகுமுறையே ஜின்னாவின் தனிநாடு கோரிக்கையை தீவிரமாக்கியது.

அந்தத் தேர்தல் முடிவுகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த மாநிலங்களில் முஸ்லிம்களுக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அதே நேரத்தில் முஸ்லிம் லீக்கிற்கு சிறுபான்மையாக வாழ்ந்த மாநிலங்களில் முஸ்லீம் லீக்கிற்கு அதிக ஆதரவு கிடைத்தது. இந்த மாகாணங்களில் முஸ்லிம்கள் லீக் கட்சி சார்பின்றி சுயேச்சையாகவும் போட்டியிட்டனர். அவர்களைவிட முஸ்லீம் லீக்கினர் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்றனர். அப்போது அய்க்கிய மாகாணம் என்று அழைக்கப்பட்ட உ.பி. மாநிலத்தில் காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றது. ஆறு பேர் கொண்ட அமைச்சரவை அமைத்தது. 1935ஆம் ஆண்டு சட்டப்படி முஸ்லிம்கள் எண்ணிக்கைக்கேற்ப அமைச்சரவையில் இடம் தந்தாக வேண்டும். ஆனால் காங்கிரஸ் கட்சியோ வெற்றி பெற்ற இறுமாப்பில் முஸ்லிம் லீக்கினருக்கு அமைச்சரவையில் இடம்தர மறுத்து விட்டது. அனைத்து மாநிலங்களிலும் காங்கிரஸ் இப்படி திட்டமிட்டு முஸ்லிம் லீக்கைப்

புறக்கணித்ததோடு தேர்தலில் தோற்றுப் போன முஸ்லிம்களுக்கும் சுயேச்சையாக போட்டியிட்ட முஸ்லிம்களையும் காங்கிரசில் சேர்த்துக் கொண்டு அமைச்சராக்கினார்கள். வெற்றி பெற்ற எல்லா முஸ்லிம் லீக்கினரும் கூண்டோடு காங்கிரசில் சேர்ந்தால், அமைச்சராக்கலாம் என்று நேரு திமிர்வாதம் பேசினார். ஜின்னா சொன்னார், "காங்கிரஸ் எங்களைக் கூட்டணி சேர அழைக்க வில்லை; தற்கொலை செய்ய அழைக்கிறது" - இதனுடைய விளைவுதான் ஜின்னா காங்கிரசின் பார்ப்பன இந்தியாவை இனியும் நம்ப முடியாது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டார். பாகிஸ்தான் தனி நாடு முழக்கத்தை உயர்த்திப் பிடித்தார்.

1946இல் அரசியல் நிர்ணய சபை கூடியபோது 10 கோடி முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அதை புறக்கணித்தனர். வராமல் இருந்தால் போகட்டும் என்ற எண்ண ஓட்டமே நிர்ணய சபையில் மேலோங்கி யிருந்தது. முஸ்லிம் லீக்கை சமாதானம் செய்து அரசியல் நிர்ணய சபைக்குள் கொண்டு வரலாம் என்று நிர்ணய சபை உறுப்பினர் எம்.ஆர். ஜெயகர் கொண்டு வந்த தீர்மானத்தை கடும் கோபத்துடன் சபை நிராகரித்தது. நேருவும் முஸ்லிம் எதிர்ப்பில் தீவிரமாகவே இருந்தார்.

இந்த வரலாற்றுப் பின்னணியில் பாகிஸ்தான் பிரிவினையின் மீது எழுந்த கோபம், அரசியலமைப்பு உருவாக்கத்திலும் எதிரொலித்தது. முஸ்லிம் லீக் மட்டுமல்ல; சோஷலிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெறவில்லை. வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கி, தேர்தல் நடத்தி, அதற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபையை உருவாக்க வேண்டும் என்பதே சோசலிஸ்ட் கட்சி முன் வைத்த நியாயமான கோரிக்கை. இந்த நிலையில் அரசியல் நிர்ணய சபை காங்கிரஸ் கட்சியினர் நிறைந்த சபையாகவே இருந்தது. பார்ப்பனர்கள், நிலப் பிரபுக்கள், சுதேச சமஸ்தானப் பிரதிநிதிகள், இந்தி வெறியர்கள், நிறைந்த இந்த சபை பற்றி அரசியல் நிர்ணய சபை ஆலோசகராக செயல்பட்ட பி.என். ராவ், "அரசியல் நிர்ணய சபையினர் அனைத்து விவகாரங்களும் காங்கிரஸ் கட்சியின் சொந்த வீட்டு விவகாரகமாகவே கருதப்பட்டது என்று குறிப்பிடுகிறார். (The whole thing was treated as the family affair of the Indian National Congress) அதன் விளைவுகள் என்ன?

1935ஆம் ஆண்டு பிரிட்டிஷ்காரர்கள் உருவாக்கித் தந்த சட்டத்தில் இடம் பெற்றிருந்த ‘கூட்டாட்சி’ என்ற வார்த்தை சுதந்திர இந்தியாவின் சட்டத்தில் காணாமல் போய்விட்டது. திட்டமிட்டே நீக்கப்பட்டது.

அம்பேத்கர் எந்த மாநிலமும் பிரிந்து போய்விடக் கூடாது என்பதற்காகவே ‘யூனியன்’ என்ற சொல்லை சேர்த்திருக்கிறோம் என்று வெளிப்படையாகவே அறிவித்தார். கூட்டாட்சி என்ற சொல்லை சேர்க்கக் கோரி கொண்டு வரப்பட்ட இரண்டு திருத்தங்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

(அதற்குப் பிறகு மொழி வழி மாநிலங்கள் குறித்து அவர் எழுதிய நூலில் இந்தியாவுக்கு தெற்கில் ஒரு தலைநகரம் கூடுதலாக வேண்டும் என்றும், வடநாடு பிற்போக்கானது; தென்னாடு முற்போக் கானது என்றும் எழுதி ஒரே இந்தியாவுக்குள் இருந்த முரண்பாடுகளை சுட்டிக் காட்டினார்)

இந்தியாவில் ‘யூனியன்’ என்கிற மத்திய அரசுதான் அழிக்க முடியாதது. ஆனால் மத்திய அரசோ மாநிலங்களை படைக்கிற ‘பிரம்மா’வாகவும், காக்கின்ற ‘திருமாலாக’வும் அழிக்கின்ற ‘சிவனாக வும்’ இருக்கிறது. மத்திய அரசுக்கு இத்தகைய அதிகாரங்கள் இருப்பதால் மாநிலங்கள் சம உரிமை படைத்தவையாக உருவாக்கப்பட வில்லை” என்கிறார், அரசியல் சட்ட ஆய்வாளர் அசோக்சந்தா (Federalism in India - நூல்).

மத்திய அரசு, மாநில அரசு அதிகாரப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மாநில அரசு உரிமைகளைப் பறிக்கும் பொதுப் பட்டியலையும் உருவாக் கினார்கள்.

‘சுதந்திரம்’ - பார்ப்பன பனியாக்களிடம் கைமாறிய பிறகு முதல் அடி வகுப்புவாரி உரிமை மீது விழுந்தது. 1920ஆம் ஆண்டு முதல் நீதிக் கட்சி ஆட்சிகளில் வளர்த்தெடுக்கப்பட்ட வகுப்புவாரி பிரநிதித்துவம் என்ற பங்கீட்டு உரிமையை எதிர்த்து பார்ப்பனர்கள் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றங்களிலும் வழக்குத் தொடர்ந்தது செல்லாது என்ற தீர்ப்பைப் பெற்றனர். அரசியல் வரைவுக் குழுவில் இடம் பெற்றிருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரே மரபுகளுக்கு மாறாக வகுப்புவாரி உரிமையை எதிர்த்து ஒரு வழக்கறிஞராக நேர் நின்று வாதாடினார்.

தமிழ்நாட்டில் பெரியார் போர்ச் சங்கு ஊதினார். தி.மு.க.வும் களத்தில் குதித்தது. முதன்முறையாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, சமூக கல்வி ரீதியான பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு உறுதிப்படுத்தப் பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே சென்னை மாகாணத்தில் மட்டும் அஞ்சல் துறை, துறைமுகம் போன்ற மத்திய அரசுக்கு உட்பட்ட துறைகளில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வந்தது. ‘சுதந்திர இந்தியாவில்’ ஒரே ஆண்டில் பார்ப்பனர்கள் நீதிமன்றம் சென்று இந்த உரிமையைப் பறித்தார்கள்.

1967ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் அதிகாரத்துக்கு வரத் தொடங்கின. அதற்கு முன் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சிகளே ஆட்சி செய்த காரணத்தால் மாநில உரிமைகள் பற்றிய கவலையோ எதிர்ப்புகளோ எழவில்லை.

1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு சென்னை மாகாணத்துக்கு முதல்வர் அண்ணா, தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதோடு தமிழ்நாட்டிலிருந்து இந்தியை விரட்டி இரு மொழிக் கொள்கையை அறிவித்தார். வேத மந்திரங்களை மறுக்கும் திருமணங்களான பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணம் முன் தேதியிட்டு சட்ட வடிவம் பெற்றது. தமிழகம் தொழில் துறையில், நிதித் துறையில், விவசாயத் துறைகளில் தொடர் வண்டி சேவை போன்ற போக்குவரத்துத் துறைகளில் புறக்கணிப்பதற்கு எதிராக உரிமைக் குரல்கள் அரசு சார்பில் வெடித்துக் கிளம்பின. மாநில சுயாட்சி முழக்கங்கள் கேட்கத் தொடங்கின.

அரசின் கங்காணிகளே ஆளுநர்கள்

அரசமைப்பு நிர்ணய சபையில் ஆளுநர் குறித்து நடந்த விவாதம் என்ன?

மாநிலங்களைக் கண்காணிக்கவே ஆளுநர் என்று ஒப்புதல்.

ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள 'சுயவிருப்பு' அதிகாரங்கள் முறைகேடாகப் பயன்படுத்தி ராஜாஜி தமிழக முதல்வரானார்.

ஆளுநரை ஒன்றிய ஆட்சியின் அதிகார தரகராக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை தங்களது ஆட்சிகளாக்கும் முறைகேடு பா.ஜ.க.வில் சர்வ சாதாரணமாகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சியிலும் இந்தப் போக்கு இருந்தது. ஆளுநர் குறித்து அரசியல் நிர்ணய சபையில் கடும் விவாதங்கள் நடந்தன.

பன்வாரிலால் புரோகித் மாற்றப்பட்டு உளவு நிறுவனத்தில் பணியாற்றிய அய்.பி.எல். அதிகாரி ரவி, புதிய ஆளுநராகப் பதவி ஏற்க இருக்கிறார். ஆளுநர் பதவி குறித்து அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்களை சுருக்கமாகப் பார்க்கலாம். முரசொலி மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' நூலிலிருந்து சில பகுதிகள்:

கவர்னரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். குடியரசுத் தலைவர் நியமிக்கிறார் என்றால் பிரதமர் நியமிக்கிறார் என்று பொருள்.

பிரதமர் நியமிக்கிறார் என்றால் மத்திய அரசை ஆளுகின்ற கட்சி அப்படி முடிவு எடுக்கிறது என்று பொருள்.

அரசியல் நிர்ணய சபை எடுத்த எடுப்பிலேயே இந்த முடிவுக்கு வந்து விடவில்லை. பலவித முடிவுகளை அலசி ஆராய்ந்து, இறுதியில் இப்படி நியமனம் செய்யும் முடிவுக்கு வந்தது.

அவற்றையெல்லாம் ஆராய்ந்தால், கவர்னர் பதவியை நியமனப் பதவி யாக்கியதன் உள்நோக்கம் நன்கு புலப்படும்.

அரசியல் நிர்ணய சபையின் துவக்கக் காலத்தில், வயது வந்தோருக்கு வாக்குரிமை என்கிற அடிப்படையில் மாநிலத்து வாக்காளர்கள் அனைவரும் பெரும்பான்மை வாக்குகளால் அந்த மாநிலத்து கவர்னரைத் தேர்ந் தெடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரிடம் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் உள்ளதுபோல, உசிதம் போல் அமைச்சரவையின் ஆலோசனைகளைக் கேட்காமல் செயலாற்றுகிற அதிகாரங்களையும் (Discretionary powers), சட்டசபையைக் கலக்காமல் பயன்படுத்தக்கூடிய சிறப்பு அதிகாரங்களையும் (Special powers) ஒப்படைக்கலாம் என்றும் அப்போது கருதப்பட்டது.

– ஆனால், இந்தக் கருத்தினைப் பின் ஏன் மாற்றிக் கொண்டார்கள்?

ஜவகர்லால் நேரு 1949, மே 31ஆம் நாளன்று அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது, இதற்கான காரணங் களை விளக்கியிருக்கிறார்.

ஆனால், உண்மை இதுதான்; ஒரு மாநிலத்து கவர்னரை அந்த மாநிலத்து மக்களே தேர்ந்தெடுப் பதாக இருந்தால், அந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் தாம் கவர்னர் ஆக முடியும். எனவே, மாநிலத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவர்னர் வலிமை மிகுந்த ஜாம்பவனாக – மத்திய அரசுக்குக் கட்டுப் படாமல், மத்திய அரசையே கேள்வி கேட்க முனைந் தால் என்ன செய்வது என்கிற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. எனவேதான், மத்திய அரசின் பிடியைப் பலப்படுத்திக் கொள்ள கவர்னரைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று முடிவு செய்தார்கள்.

ஆனால், நேரு நேரடியாக இந்தக் காரணத்தை வெளிப்படையாகக் கூறவில்லை. ‘மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளும், குறுகிய, மாகாண ரீதியான எண்ணங்களும், செயலும் ஊக்கப்படுத்தப்படும்’ என்று பண்டித நேரு சுற்றி வளைத்துக் கூறினார்.

டாக்டர் பி.எஸ்.தேஷ்முக் இன்னொரு சூழ்நிலையைப் பயங்கரமாகப் படம் பிடித்துக் காட்டினார்: “மாநிலத்தில் உள்ள மிக முக்கிய மனிதர் களான கவர்னரும், முதலமைச்சரும் எல்லாவற்றிலும் ஒத்துப் போவதாக இருந்து, மத்திய அரசை எதிர்ப்பதிலும் அவர்கள் ஒத்துப் போய் விட்டால் என்ன செய்வது? மத்திய அரசு சொல்கிற கருத்துரை களையும், பிறப்பிக்கிற கட்டளைகளையும் அந்த மாநில அரசு கேட்கா விட்டால், மத்திய அரசு அந்த மாநிலத்தின் மீது படை யெடுத்துச் செல்லுமா?” - என்று அவர் கேட்டார்.

கவர்னர் பதவிக்குத் தேர்தல் நடத்தினால், அதன் காரணமாகப் பணச் செலவு ஏற்படும் என்பதும் ஒரு காரணமாகக் காட்டப்பட்டது.

இந்த முறை அமுலுக்கு வந்தால் கவர்னர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். முதலமைச்சரோ முதலில் ஒரு தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதியாக கவர்னரால் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறவர். ஆனால், கவர்னருக்கோ ‘நான்தான் நேரடியாக மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன்’ என்கிற உணர்ச்சி இயற்கை யாகவே ஏற்படும். இப்படி இரு பதவிகளில் இருப்பவர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களாக ஆகி விட்டால் அதிகாரத்தைப் பயன்படுத்தும் விஷயங்களில் இருவருக்கும் மோதல் ஏற்படும் என்கிற காரணமும் மறுபரிசீலனைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுத்தால் கவர்னருக்கும், முதலமைச்சருக்கும் மோதல் ஏற்படும் என்கிற வாதத்தை டாக்டர் அம்பேத்கர் ஏற்றுக் கொள்ளவில்லை. கவர்னர் தேர்தல் தனி மனிதரின் செல்வாக்கின் அடிப்படையில் - இவர் இந்தப் பதவிக்கு ஏற்றவரா? அதற்கேற்ற கல்வியறிவும், குணமும் இவரிடம் இருக்கின்றனவா? என்கிற பரிசீலனைக்கு உட்பட்டு நடக்கும். ஆனால், முதலமைச்சர்

தேர்தலோ, இவருடைய திட்டம் ஒத்து வருமா? சரியானதா? என்கிற அடிப்படையில் அமையும். எனவே, தேர்ந்தெடுக்கப்படுவதன் காரணமாக இருவருக்கும் மோதல் ஏற்படக்கூடும் என்பதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால், 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி (பிரிட்டிஷ் ஆட்சியில் மாகாணங்களுக்கு வழங்கப் பட்ட சட்டம்-ஆர்) கவர்னருக்குத் தரப்பட்ட சிறப்பு அதிகாரங்கள் அனைத்தையும் தம் உசிதம்போல் பணியாற்றும் அதிகாரங்களில் பலவற்றையும் நீக்கி விட்டு, அமைச்சரவையின் பரிந்துரையின்படியே கவர்னர் பெரும்பாலும் பணியாற்ற வேண்டும் - என்று அமைத்துவிட்டதால், அத்தகைய பதவிக்கு ஏராளமான பணம், நேரம், உழைப்பு ஆகியவற்றைச் செலவிடும் தேர்தல் வேண்டுமா என்கிற கேள்வி பிறந்ததாகவும், முன்புபோல் அப்பதவிக்கு அதிக அதிகாரங்கள் இல்லை என்பதை உணர்ந்தவர்கள் எவரும் கவர்னர் தேர்தலில் கலந்து கொள்ள மாட் டார்கள் என்றும்; அதனால்தான் தேர்ந்தெடுக்கிற முடிவைக் கைவிட்டதாகவும் டாக்டர் அம்பேத்கர் கூறினார்.

அரசியல் சட்டத்தை எழுதிய ‘நகல் வரைவுக் கமிட்டி’ (Drafting Committee) மேலும் இரு யோசனைகளை முன் வைத்தது.

முதல் யோசனை: முதலமைச்சர் போல கவர்னரை அந்தந்த மாநிலத்துச் சட்டமன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பது. - இது இரண்டு முதலமைச்சர்களை உருவாக்குவதற்குச் சமம் என்று கருதி இந்த யோசனை கைவிடப்பட்டது.

இரண்டாவது யோசனை : கவர்னர் பதவிக்கான வேட்பாளர்களைப் பட்டியலாகத் தயாரித்து, இந்தப் பட்டியலில் காணும் ஒருவரைக் குடியரசுத் தலைவர் கவர்னராக நியமிக்கலாம் என்று சட்டமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது; பிறகு குடியரசுத் தலைவர் அந்தப் பட்டியலி லிருந்து ஒருவரை கவர்னராக நியமிப்பார்.

இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் மாநிலத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய அல்லது பெரும் பான்மை பெற்றிருக்கக்கூடிய கட்சியின் ஆதரவைப் பெற்றவர்கள் தாம் கவர்னராக வரமுடியும்.

பிறகு கவர்னருக்கும், மாநிலச் சட்டமன்றத்திற்கும் தொடர்பு ஏற்பட்டுவிடும்; அதன் பின்னர் மத்திய அரசு விரும்புவதுபோல் காரியங்கள் நடக்காமல் போய்விடக்கூடும் - என்கிற உள்நோக்கத்தாலேயே இந்த யோசனையும் கைவிடப்பட்டது.

இறுதியாகத்தான், கவர்னர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் படுவார் என்கிற திருத்தத்தைப் பிரஜேஸ்வர் பிரசாத் என்பவர் கொண்டு வந்தார்.

"மத்திய அரசின் அதிகாரம் எல்லா மாகாணங்களிலும் நிலை நாட்டப்பட வேண்டியது அவசியம்" - என்பதையே அந்தத் திருத்தத்திற்குக் காரணமாகக் காட்டினார்.

"இந்த நாட்டின் நடுத்தர வர்க்கத்து அறிவாளிகளிடையே படைக்கும் சக்தி இல்லாமல் போய் விட்டது. தாமாகவே முயற்சி மேற்கொள்ளும் போக்கு அவர்களை விட்டு நீங்கி விட்டது. இந்த மண்ணை ஆள வேண்டிய மக்கள் எல்லா வழிகளிலும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், சுரண்டப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலையில் மாகாண நிர்வாகத்தைத் தன் கையில் வைத்திருப்பதைத் தவிர இந்தியப் பேரரசுக்கு வேறு வழி இல்லை" - என்று பிரஜேஷ்வர் பிரசாத் கூறினார்.

சர்வ வல்லமை பெற்ற ஞான பண்டிதர்கள் ஏதோ மத்திய அரசில்தான் நிலையாகக் குடியேறியிருப்பது போலவும்; மாநிலங்களில் ஏதோ மக்களுடைய வாக்குகளைத் தவறிப் பெற்றுவிடுகிற தான் தோன்றிகளாக இருப்பது போலவும். ஒரு நினைப்பு எப்படி அப்போது நீக்கமற அரசியல் நிர்ணய சபையில் நிறைந்திருந்தது என்பதற்கு இப்பேச்சு ஒரு சான்று!

அடுத்துப் பேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னணி உறுப்பினர் மகாவீர் தியாகி நிலைமையைத் தெளி வாக்கினார்.

"நாம் இப்போது சுயாட்சி கொண்ட மாநிலங்களை உருவாக்குவது என்கிற நமது பழைய கருத்தைக் கைவிட்டு விட்டு, மத்தியிலே அதிகாரங்கள் அனைத்தையும் குவித்து, இப்போது நியமன கவர்னர்களையும் பெறப் போகிறோம்" - என்று உண்மையைப் போட்டு உடைத்தார்.

அவர் இன்னும் ஒருபடி மேலே சென்று, "மத்திய அரசின் கொள்கையை வற்புறுத்தி, அதைப் பாதுகாக்கிற ஏஜெண்டாக அல்லது ஏஜென்சியாக இருக்கிறவர்தாம் கவர்னர்" என்று கூறி முழு அந்தரங்கத்தையும் வெளியிட்டார்.

ஆம்; மாநில அமைச்சரவை மீதும், அத்தகைய அமைச்சரவையை உருவாக்குகிற மாநிலத்து மக்கள் மீதும் சிறிதும் நம்பிக்கை வைக்காமல்; அவர்களைக் கண்காணிப்பதற்கு மத்திய அரசால் நியமிக்கப்படும் 'கங்காணி'தான் கவர்னர்!

1952ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில். அப்போதைய சென்னை மாநிலத்தில் மொத்தமிருந்த 325 சட்டமன்றத் தொகுதிகளில் 155 இடங்களில் தான் காங்கிரஸ் வென்றது. வெற்றி பெற்ற காங்கிரஸ் அல்லாத 167 பேர் 'ஐக்கிய ஜனநாயக முன்னணி' அமைத்துக் கொண்டனர். தம்மை அந்த 167 பேரும் ஆதரிப்பதாகவும், தாம் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அத்தனை பேருடைய கையெழுத்துடன் டி. பிரகாசம், கவர்னர் ஸ்ரீபிரகாசாவுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அந்த 167 பேரில் பலர் சுயேச்சைகள் என்பது உண்மை தான். எனினும், யார் முதலமைச்சர் ஆகிறாரோ அவர் பக்கம் தான் இந்தச் சுயேச்சைகள் சாய்வார்கள் என்பது உறுதி. ஆனால், ஸ்ரீபிரகாசா காங்கிரஸ் அல்லாத கட்சிக்கு அந்த வாய்ப்பைக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

சட்டசபையிலே சிறுபான்மைக் கட்சியாக இருந் காங்கிரசைப் பதவியில் அமர்த்துவதற்காக அவர் இராஜாஜியை அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு வகை செய்ய அவரை மேலவைக்கு நியமன உறுப்பினராக்கி உள்ளே நுழைய வைத்தார்.

பிரகாசத்தை அழைத்திருந்தால் சுயேச்சைகள் அவர் பக்கம் சேர்ந்திருப்பார்கள். ஆனால், அப்போது 'கவர்னர் யானை' இராஜாஜி தலையில் மாலை சூட்டியதால் சுயேச்சைகள் அவர் பக்கம் சேர்ந்து கொண்டார்கள்.

இதே ராஜாஜி, கவர்னர்-ஜெனரலாக இருந்த போது ஸ்ரீபிரகாசவைக் கவர்னராக நியமித்து, அந்த உத்தரவில் கையெழுத்திட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

இதே ஜனநாயக விரோத காரியத்தைத் தான் 1935ஆவது ஆண்டுச் சட்டப்படி பிரிட்டிஷாரின் ஏஜெண்டுகளாக இருந்த கவர்னர்கள் பல மாகாணங் களில் செய்து கொண்டிருந்தார்கள். சட்டமன்றத்தில் சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவரை அழைத்து அமைச்சரவை அமைக்கச் சொல்லி, பிறகு அக் கட்சிக்குப் பெரும்பான்மை தேடிக் கொடுத்தார்கள். அப்போது பாதிக்கப்பட்டது காங்கிரஸ் கட்சி! அப்போது கவர்னரையும், 1935ஆம் ஆண்டின் சட்டத்தையும் கண்டித்தது காங்கிரஸ் கட்சி! அதே கட்சி சிறிதும் வெட்கமில்லாமல் தனக்கு பிரிட்டி ஷார் செய்த அதே கொடுமையைப் பிற கட்சிகளுக்குச் செய்ததும், அப்படி ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டதும் வரலாற்றின் வெட்ககரமான நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும்.

ஆர்.எஸ்.எஸ். தேசபக்தி இயக்கமா?

வர்ணாஸ்ரம ஜாதிப் பிரச்சினைகளை எதிர்க்க மாட்டோம் என்று காங்கிரசைத் தொடங்கிய பிரிட்டிஷ் அதிகாரி பார்ப்பனர்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

காங்கிரஸ் கட்சி மாநாடும் இந்து மகாசபை மாநாடும் ஒரே மேடையிலேயே நடந்தன.

பிரிட்டிஷ் இராணுவத்துக்கு இராணுவக் கருவிகளை 'சப்ளை' செய்யும் ஒப்பந்தக்காரர் களாக ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் செயல்பட்டனர்.

வாஜ்பாய் சக போராளிகளை அரசுக்கு காட்டிக் கொடுத்தார்.

திராவிட இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவானது என்றும், ஆர்.எஸ்.எஸ். தேச பக்தர்கள் இயக்கம் என்றும் சங்கிகள் பேசி வருவது வரலாற்றுப் புரட்டு.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர், பெரியார் இயக்கத் தின் மீது தொடர்ந்து ஒரு குற்றச்சாட்டைச் சுமத்து வது வழக்கமாகிவிட்டது. திராவிட இயக்கம், பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தது அவர்கள். தேச விரோத சக்திகள் பிரிட்டிஷ் விசுவாசி என்று பேசி வருகிறார்கள். இது குறித்து இளைய தலைமுறைக்கு தெளிவான புரிதலை உருவாக்க சில வரலாற்றுக் குறிப்புகளை சுருக்கமாகப் பதிவிடு கிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நடந்த போராட்டமே சுதந்திரத்துக்கான போராட்டமல்ல; பார்ப்பனரல்லாதார் பார்ப்பனர் போராட்டம் என்பதே சரியான பார்வை.

காங்கிரஸ் ஏன் துவக்கப்பட்டது? அதன் நோக்கம் என்ன? பார்ப்பனரல்லாதார் இயக்கமான நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைக் கழகம் ஏன் தோன்றியது? பெரியார் - அம்பேத்கர் அந்தச் சூழலில் சமூக விடுதலையை பேச வேண்டிய கட்டாயம் ஏன் வந்தது? இந்த சமூக வரலாற்றுச் சூழலின் பின்புலத்தைப் பற்றிய புரிதல் அவசியமாகிறது.

1885இல் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியதே ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஓய்வு பெற்ற பிரிட்டிஷ் அய்.சி.எஸ். அதிகாரி தான்.

தொடங்கப்பட்டதன் நோக்கம் ஆங்காங்கே பிரிட்டிஷாருக்கு எதிரான எதிர்ப்புகளை எதிர் கொள்ள வேண்டும் என்பதே; பிரிட்டிஷாரை எதிர்த்தவர்களுடன் அப்போது 'உயர் கல்வி பயின்ற' படித்த கூட்டம் இணைந்து விடாமல் தடுப்பதற்காகவே காங்கிரஸ் உருவாக்கப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்திருக் கிறார்கள்.

(ஆதாரம்: ஆய்வாளர் பெ.சு. மணி எழுதிய காங்கிரஸ் வினா-விடை)

காங்கிரஸ் கட்சி மாநாடுகளிலே பிரிட்டிஷ் அரசுக்கும் பிரிட்டிஷ் ராணிக்கும் விசுவாசமாக இருப்போம் என்பதே எட்டு மாநாடுகளில் 1886 லிருந்து 1914 வரை முதல் தீர்மானங்களாக நிறை வேற்றப்பட்டன. பம்பாய் - கல்கத்தா - சென்னை காங்கிரஸ் மாநாடுகளின்போது பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் காங்கிரசாருக்கு விருந்து வைப் பது வழக்கம். காங்கிரஸ் கட்சியைத் தொடங்கிய ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் தான் - 20 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்.

1885இல் காங்கிரசின் முதல் கூட்டத்தில் முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவர் தமிழ்நாட்டைச் சார்ந்த ஜி.சுப்ரமணிய அய்யர். இதை வரலாற்றுப் பெருமையாக தங்கள் 'இனத்துக்கு' பார்ப்பனர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். இவர் 'சுதேசமித்திரன்', 'இந்து' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தவர். 'தேச பக்தராக'ப் போற்றப்படும் அவர் கொண்டு வந்த முதல் தீர்மானத்தின் வாசகம் என்ன?

“பல நூற்றாண்டுகளாக இந்தியா கொலை, கொள்ளை, ஆக்கிரமிப்பு முதலான பயங்கர குழப்பங்களால் தாக்கப்பட்டு வந்தது. இறைவனின் கருணை மிக்க அருளாட்சி நோக்கால் ஆங்கிலப் பேரரசு இந்தியாவை ஆட் கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் அளித்தது” என்று கூறி இந்த ஆட்சியின் பயன்களைப் பட்டியல் போட்டுக் காட்டினார்.

(ஆதாரம்: பெ.சு. மணி எழுதிய இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்)

பிரிட்டிஷ் ஆட்சியை “கடவுள் அருளாட்சியின் விளைவு” என்பதே காங்கிரஸ் மனப்பான்மையாக இருந்தது.

1929இல் நேரு தலைமையில் லாகூரில் கூடிய காங்கிரஸ் தான் முதன்முதலாக முழுமையான ‘சுதந்திரப்’ போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. காங்கிரஸ் தொடங்கிய 33 வருடங்களுக்குப் பிறகு தான் முழு சுதந்திரம் என்ற கோரிக்க்கையே முன் வைக்கப்பட்டது.

அப்போது எல்லாம் காங்கிரசில் இந்து மகாசபை யும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். காலையில் காங்கிரஸ் மாநாடு நடந்த அதே மேடையில் மாலையில் இந்து மகாசபை மாநாடு நடக்கும். ‘சமூக சீர்திருத்தம்’ பற்றி காங்கிரஸ் பேசவே கூடாது என்று காங்கிரஸ் கட்சிக்கு பார்ப் பனர்கள் கடிவாளம் போட்டு வைத்திருந்தனர்.

காங்கிரசைத் தொடங்கிய ஹியூம் பார்ப்பனர் களுக்கு ஒரு வாக்குறுதியைத் தந்தார்.

“நாம் அரசியல் ரீதியாகக் கூடுகின்றோமே தவிர, சமூக சீர்திருத்தம் பேசுவதற்கு காங்கிரஸ் இல்லை. ஜாதி ஒழிய வேண்டும் என்பது போன்ற பிரச்சினைகளை நாங்கள் பேச மாட்டோம். மதப் பிரச்சினைகளில் தலையிட மாட்டோம். ஆச்சாரம், வர்ணாஸ்ரம தர்மம், அனுஷ்டானம் இவை பற்றியெல்லாம் கண்டித்தோ, எதிர்த்தோ, மாற்றியோ நாம் பேச மாட்டோம்” என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

(ஆதாரம்: அம்பேத்கரின் சாதியை ஒழிக்க வழி நூல்)

1925இல் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். என்ன செய்தது? ‘தேசபக்தி’ இயக்கமாகவா செயல்பட்டது?

1940 ஆம் ஆண்டு, கோல்வாக்கர் ஆர்.எஸ்.எஸ். தலைவராகிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பை கம்யூனி சத்துக்கும் சோஷலிசத்துக்கும் எதிர்ப்பு அணியாகப் பிரகடனப்படுத்துகிறார்; இந்து பிற்போக்காளர்களை சேர்த்துக்கொண்டு, முஸ்லீம்களின் மீது தாக்குதல் நடத்துவது என்பது இவர் போட்ட திட்டம்.

1942 ஆம் ஆண்டில் வெள்ளையேன வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் கட்சி நடத்துகிறது. பல காங்கிரசார் கைது செய்யப்படு கின்றனர். அப்போது கோல்வாக்கர் பல பார்ப்பன இளைஞர்களையும், இந்து இளைஞர்களையும், ஆர்.எஸ்.எஸ்..க்கு இழுக்கும் முயற்சிகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறார். பல நடுத்தரக் குடும்பங்கள், குறிப்பாக பார்ப்பனர்கள் இந்த அமைப்பில் சேருகிறார்கள். பல பார்ப்பன பெற்றோர்களே, தங்கள் வீட்டுப் பிள்ளைகளை ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்த்தனர்; அதற்குக் காரணம், எங்கே காங்கிரஸ் கட்சிப் போராட்டத்திலே பங்கேற்று இந்த இளைஞர்கள் சிறைக்குப் போய்விடுவார்களோ என்று அஞ்சியது தான்.

பிரிட்டிஷார் ராணுவத்துக்கு ஆள்கள் சேர்த்த போது, அதற்கு பேருதவி செய்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். காரர்கள். பல இந்து இளைஞர்களை பிரிட்டிஷார் ராணுவத்தில் இவர்கள் சேர்த்ததோடு ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் நேரடிப் பங்கு கொண்டிருந்தவர்கள் கூட, ராணுவத்தில் சேர்ந்தனர். "அரசியலை இந்து மயமாக்கு இந்துக்களை ராணுவ மயமாக்கு" என்பன அப்போது இவர்கள் போட்ட கோஷம்.

அது மட்டுமல்ல; அதைப் பயன்படுத்திக்கொண்டு சொந்த வியாபாரத்தையும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஆரம்பித்து விட்டார்கள்.

டிரேவர் டிரய்பர்க் என்ற பத்திரிகையாளர் அதுபற்றி கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்;

பல ஆர்.ஏஸ்.ஏஸ். தலைவர்கள் பிரிட்டிஷ் இராணுவத்துக்கு வேண்டிய இராணுவ எந்திரங்களை சப்ளை செய்யும் "காண்ட்ராக்ட்" டுகளை எடுத்தனர். 1943 ஆம் ஆண்டு கிழக்கு வங்கத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டபோது, இருந்த உணவுப் பொருள்களை எல்லாம் இந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வாரிக் கொண்டு போய் பிரிட்டிஷ் ராணுவத்தினருக்குக் கொடுத்தனர். பஞ்சத்தால் பரிதவித்த மக்கள்

மேலும் கொடுமைக்குள்ளாயினர். இந்த காண்ட்ராக்ட்காரர்களிடம் பணம் ஏராளமாக வர ஆரம்பித்தது; பிரிட்டிஷ் ராணுவ நிதிக்குப் பணத்தை அள்ளி வீசினர். (அப்போதுதானே காண்ட்ராக்ட் கிடைக்கும்) ஆர்.எஸ்.எஸ். செய்தித்தாள்களுக்கும் பத்திரிகை களுக்கும், அரசாங்கம் பேருதவி செய்தது. ஏராளமான அரசு விளம்பரங்கள் தரப்பட்டன. இந்த நடவடிக்கைகள், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தேசியப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் என்ற மாயையை உடைத்துக் காட்டுகிறது" - என்று எழுதுகிறார், டிரேவர் டிரய்பர்க் (Drever Drieberg) தமது "Four Faces of subversion" என்ற நூலில் (பக்கம் 27)

பம்பாய் பிரிட்டிஷ் கவர்னரிடமிருந்து 1942ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் நன்னடத்தை சர்டிபிகேட்டுகளை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள் கின்றனர். புதுடில்லியில் உள்ள மத்திய அரசுக்கு பம்பாய் பிரிட்டிஷ் கவர்னர் கோல்வாக்கரைப் பற்றி ஒரு அறிக்கை கொடுத்தார். அதில் கோல்வாக்கர் எப்பொழுதும் முன்னெச்சரிக்கையாக இருக்கும் இயல்பு கொண்டவர் (றுயசல), தந்திர நுட்பமுடைய கூர்மதியாளர் (Astute). காங்கிரஸ் நடத்திய ஆகஸ்ட் போராட்டத்தில் ஜாக்கிரதையாக ஒதுங்கி இருந்தவர். (Scrupulously kept away)" என்று குறிப்பிட்டிருந்தார். ஆதாரம்: மேற்குறிப்பிட்ட நூலில் பக். 27)

அப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் போட்ட உத்தரவுகளை எல்லாம், கோல்வாக்கர் கேள்வி கேட்காமல் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தார். அப்போது ஆர்.எஸ்.எஸ்.சில் இருந்த ராணுவப் பிரிவை (militarisation Department) ஒழித்துவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டவுடன், உடனே அந்த உத்தரவை ஏற்று அந்தப் பிரிவை ஒழிக்க முன்வந்தார். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ராணுவப் பயிற்சியையும் நிறுத்தியதோடு சீருடையையும் மாற்றிக் கொண்டனர்; காக்கி சட்டைக்குப் பதிலாக வெள்ளை சட்டையும், தோல் பூட்ஸ் களுக்குப் பதிலாக கேன்வாஸ் செருப்புகளும் அணிந்தனர்; பெரிய பெல்ட் போடுவதையும் எடுத்து விட்டனர்; இத்தனையும், பிரிட்டிஷார் உத்தரவை ஏற்று; செய்யப்பட்டதாகும்! ராணுவத்தினர் போலவே, உடையணிந்து, ராணுவப் பயிற்சியையே இவர்கள் - பிரிட்டிஷார் தடை உத்தரவு வரும்வரை 'இந்து ராஜ்யம்' நடத்தி வந்திருக்கிறார்கள்.

அந்த நேரத்தில், வாஜ்பாய் காட்டிக் கொடுக்கும் துரோக வேலையையும் செய்தார்.

1942 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தில் "தேசபக்த திலகம்" வாஜ்பாய் செய்த வேலை என்ன தெரியுமா?

காட்டிக் கொடுக்கும் வேலை. ஆம். அந்த வேலையைத்தான் வாஜ்பாய் செய்தார்!

1942ஆம் ஆண்டு, வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் வாஜ்பாய் கலந்து கொண்டார். அவரோடு அவரது "புரட்சி" சகாக்களும் கலந்து கொண்டு சிறையேகினர். வெள்ளையனே வெளியேறு போராட்டம் தொடர்பாக நடந்த ஒரு வன்முறை சம்பவத்தைத் தொடர்ந்து இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. சிறைக்குப் போன வாஜ்பாய் என்ன செய்தார் தெரியுமா? இந்த சம்பவத்தில் கலந்துகொண்டு சிறைப் பிடிக்கப்படாத தனது புரட்சி நண்பர்களின் பெயர்ப் பட்டியலை எல்லாம் போலீசாரிடம் கொடுத்து விட்டு தான் மன்னிப்புக் கேட்டுச் கொண்டு விடுதலை ஆகிவிட்டார்.

இந்த சம்பவம் பற்றி பம்பாயிலிருந்து வெளிவரும் "பிளிட்ஸ்" பத்திரிகை (ஜன. 26, 1974) ஒரு நீண்ட கட்டுரை வெளியிட்டது. அந்த வழக்கின் முழு விவரம், நீதிமன்ற நடவடிக்கைகள் எல்லாவற்றையும், அந்தக் கட்டுரை தெளிவாக விளக்குகிறது.

வாஜ்பாயின் சகோதரர் பிரேம் பிகார் லால் பாஜ் பாய், என்பவர் மத்திய பிரதேச அரசாங்கமே நடத்தும் சந்தேஷ்' (Sandesh) என்ற பத்திரிகையில் (12.5.1973 இதழில்) இதுபற்றி ஒரு கட்டுரை எழுதி இருக் கிறார். அந்தக் கட்டுரையில் தானும் தனது சகோதரர் வாஜ்பாயும் பட்டேஸ்வர் கலவரம் தொடர்பாக கைது செய்யப்பட்டோர் என்பதையும் வாஜ்பாய் இழைத்த துரோகத்தையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். அது மட்டுமா? கிரிஜாஷங்கர் பாஜ்பாய் என்ற பார்ப்பனர் அப்போது வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினர். அவரது தலையீட்டின் பேரில் தான் நாங்கள் இருவரும் சிறையிலிருந்து விடுதலை பெற்றோம் என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அதைத் தொடர்ந்து, முன்னாள் ஜனதா கட்சியின் பொதுச்

செயலாளரும், தீவிர ஆர்.எஸ்.எஸ். காரருமான நானாஜி தேஷ்முக் என்பவரும், வேறு சில ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் ‘பிளிட்ஸ்’ ஏடு மீது வழக்கு தொடர்ந்தனர். ஆனால் இந்த வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட வாஜ்பாய், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ, அல்லது ‘பிளிட்ஸ்’ ஏடு மீது மான நஷ்ட வழக்கு தொடரவோ முன்வரவில்லை.

வழக்கு விசாரித்த நீதிமன்றம், வழக்கையே தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துவிட்டது.

1942ஆம் ஆண்டில் கோல்வாக்கரும், வாஜ்பாயும் தேசத்துக்கு செய்த ’தியாகங்கள் இப்படித்தான் இருந்தது.

சுதந்திர நாளில் ‘ஹிட்லரின்’ கொடியை ஏற்றியது

பெரியார் சுதந்திர நாளை துக்க நாள் என்று நேர்மையாக அறிவித்தார்; அவரை ‘தேச துரோகி’ என்று குற்றம் சாட்டும் ஆர்.எஸ்.எஸ். அதே நாளில் ஹிட்லரின் காவிக் கொடியை ஏற்றியது.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவை தங்களிடம் ஒப்படைக்கப் போவதாக நம்பிக் கொண்டிருந்தது ஆர்.எஸ்.எஸ்.

திராவிட இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவானது என்றும், ஆர்.எஸ்.எஸ். தேச பக்தர்கள் இயக்கம் என்றும் சங்கிகள் பேசி வருவது வரலாற்றுப் புரட்டு.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர், பெரியார் இயக்கத் தின் மீது தொடர்ந்து ஒரு குற்றச் சாட்டைச் சுமத்துவது வழக்கமாகி விட்டது. திராவிட இயக்கம், பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தது அவர்கள். தேச விரோத சக்திகள் பிரிட்டிஷ் விசுவாசி என்று பேசி வருகிறார்கள். இது குறித்து இளைய தலைமுறைக்கு தெளிவான புரிதலை உருவாக்க சில வரலாற்றுக் குறிப்புகளை சுருக்கமாகப் பதிவிடுகிறோம்.

1942ஆம் ஆண்டிலிருந்து 1947ஆம் ஆண்டு வரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் பிரிட்டி ஷாருக்கு ஆதரவாக வும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை தீவிரப்படுத்துவதிலும் ஷாகாக்கள்; ஆபீசர் பயிற்சி முகாம்கள் நடத்துவதிலுமே

தீவிர கவனம் செலுத்தி வந்தனர். நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ். தலைமைப் பீடம் 1945ஆம் ஆண்டில் துவக்கி, ஒரு ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டில் முகம்மது அலி ஜின்னா, முஸ்லீம் களுக்கு தனிநாடு கோரி, நேரடியான இயக்கத்தை நடத்த ஆரம்பித்தது இவர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமைந்து விட்டது. முஸ்லீம் - இந்துக் கலவரங்கள், ஆங்காங்கே வெடித்துக் கிளம்பின. இந்தியாவில் ஒரு முஸ்லீம் சாம்ராஜ்யம் அமையப் போகிறது என்ற கற்பனைக் கதையை; இந்தக் கூட்டம் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து, இந்துக்களை முஸ்லீம்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டது.

1947ஆம் ஆண்டு பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேற போகிற காலம்; பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறிய பிறா் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நிலை என்ன? இந்தக் கேள்விக்கு அப்போது ஆர்.எஸ்.எஸ். வட்டாரத் தில் கிடைத்த பதில் ஒரே குழப்பம்தான்! அது வரை பிரிட்டிஷாருக்கு முழு ஆதரவு தந்து, முஸ்லீம்களுக்கு எதிரான யுத்தத்தை நடத்தி வந்தவர்கள் சுதந்திர இந்தியாவில் தங்களின் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி தெரியாமல் குழம்பிப் போய்க் கிடந்தனர்.

பஞ்சாப் மாநிலத்தில் பக்வாரா என்ற இடத்தில் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் ஆர்.எஸ்.எஸ். அதிகாரிகள் பயிற்சி முகாம் ஒன்று நடந்தது. அந்தப் பயிற்சியின் நிறைவு விழாவில், ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கரிடம் இதே கேள்வியை நேரிடையாகவே கேட்கப்பட்டது. ‘இந்தியா இப்போது சுதந்திர நாடாக மாறப் போகிறது இப்போது ஆர்.எஸ்.எஸ். எப்படி செயல்படப் போகிறது?’ என்ற நேரடியான கேள்வியை கோல்வாக்கரிடம் கேட்கப்பட்ட போது, கோல் வாக்கர் வாய்விட்டு பலமாக குலுங்கி குலுங்கி சிரித்து விட்டுச் சொன்னார்.

பிரிட்டிஷார் வெளியேறுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? இந்த அறிவில்லாக் கூட்டத்தாரிடம், பேதைகளிடம் ஆட்சியைக் கொடுத்தால் இரண்டு மாதங்கள்கூட இவர்களால் சமாளிக்க முடியாது. இவர்கள் மீண்டும் பிரிட்டிஷாரிடம் மண்டியிட்டு, தயவு செய்து ஆட்சியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விடுவார்கள். எனவே ஆர்.எஸ்.எஸ். அதன் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும்

என்று பதிலளித்தார். (ஆதாரம்: டி.ஆர். கோயல் எழுதிய ஆர்.எஸ்.எஸ். நூல் பக்கம் 9)

அதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ்.இன் நெருக்கமான வட்டாரங்களில் இன்னொரு கருத்தும் பேசப்பட்டு வந்தது. பிரிட்டிஷார், நாட்டை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கையிலே தந்து விட்டுப் போகப் போகிறார்கள்; அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று அவர்கள் பேசினார்கள் காரணகாரியங்களின் அடிப்படையில் விவாதம் என்பதற்கு அந்த முகாமின் வரலாற்றில் எந்தக் காலக் கட்டத்தி லும் இடம் இருந்ததில்லை.

இதுபற்றி பண்டிட் ஹேமேந்திரநாத் என்ற முன்னாள் ஆர்.எஸ்.எஸ்.காரர் ஒருவர் குறிப்பிடுகிறார், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளில் ஒன்றான அகில பாரதிய பிரதிநிதிசா என்ற அமைப்பில் உறுப்பினராக இருந்து, பிறகு அதிலிருந்து வெளியேறியவர் ஹேமேந்திரநாத் அவர் 'The end of a dream; An inside view of the R.S.S. Today' என்ற ஒரு நூலை எழுதியிருக்கிறார். அந்த நூலில் 44ஆவது பக்கத்தில் அவர் எழுதியிருப்பதை இங்கே எடுத்துக்காட்டுகிறோம்:

டில்லி ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு தலைவராக இருந்தவர் லாலா ஹன்ஸ் ராஜ் குப்தா. இந்திய தலைநகரத்தில் நடக்கும் அரசியல் நடவடிக்கைகள் பற்றி கவனித்து முடிவெடுக்க வேண்டிய முழு பொறுப்பும், இவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவர் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் கூட்டத்திலே சில கட்டுக் கதைகளை எடுத்துச் சொன்னார். மத்திய இடைக்கால ஆட்சியில் இருக்கும் (காங்கிரஸ்) தலைவர்களால் அரசாங்கத்தை நடத்த முடியாது; எனவே அப்படிப்பட்ட சூழ்நிலை யில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிடமே, இந்தியாவை ஒப்படைத்து விடுவது பற்றி பிரிட்டிஷார் தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டிருக் கிறார்கள். எனக்கு இது பற்றி நம்பிக்கையான தகவல்கள் மேலிடத்திலிருந்து கிடைத்துள்ளது. ஒரு மாதத்துக்குள்ளோ அல்லது இரண்டு வாரத்துக்குள்ளோ இந்த அறிவிப்பு வெளியாகும் என்று அவர் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நடத்திய இரகசிய கூட்டத்திலே எடுத்துச் சொன்னார். இந்தச் செய்தி கோல்வாக்கரிடம் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

பெரியார், தனது கருத்தை வெளிப்படையாக அறிவித்தார். இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம், பார்ப்பன-பனியாக்களுக்குத்தான்; அதிகாரம் 'மேட் ஓவர்' செய்யப்பட்டுள்ளது என்று கூறி துக்க நாள் என்று வெளிப்படையாக நேர்மையாக அறிவித்தார். அதற்காக பெரியாரை தேச துரோகி என்று முத்திரைக் குத்தி வரும் சங்பரிவாரங்கள் அந்த நேரத்தில் கபட நாடக மாடினார்கள்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி, அதாவது இந்தியாவுக்கு சுதந்திரம் வந்த அந்த நாளில் இவர்கள் என்ன செய்தார்கள்?

நாடெங்கும் மூவர்ண தேசியக் கொடி ஏற்றப்பட்ட அந்த நாளில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நடத்திய நாடகம் என்ன? நாட்டுப் பற்றுக்கும் தேச பக்திக்கும் தாங்களே பிறப்பெடுத்தவர்கள் என்று மார்தட்டிக் கொள்வதால் இதை நாம் சுட்டிக்காட்டிக் கேட்கி றோம்.

இதோ பரபரப்பான 'Freedom at Midnight' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டுகிறோம்:

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி, பூனா நகரத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அங்கும் கொடிதான் ஏற்றப்பட்டது; ஆனால் அது சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடி அல்ல; அது காவிக் கொடி, 500 ஆண்கள் அந்த இடத் திலே திரண்டிருந்தனர் அய்ரோப்பாவையே நடுங்க வைத்த ஹிட்லரின் ஸ்வஸ்திக் கொடியைத்தான் அங்கே ஏற்றினார்கள்.

ஹிட்லர் கொடியிலிருந்து மிகச்சிறிய மாற்றம் மட்டுமே அதில் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கொடியில் பொறிக்கப்பட்டிருந்தது ஆரியச் சின்னம். அங்கே கூடியிருந்தவர்கள் சு.ளு.ளு.என்ற வகுப்புவாத பாசிச அமைப்பைச் சார்ந்தவர்கள்' என்று அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நாடெங்கும் தேசியக் கொடி உயர்ந்த அந்த நாளில் ஆரியக் கொடியை ஏற்றிய கூட்டம் தான் இந்த ஆர்.எஸ்.எஸ். கூட்டம்!

ஆம்! காந்தியாரை சுட்டுக்கொன்ற அதே நாதுராம் கோட்சே தான் அன்றைய தினம் (1947 ஆகஸ்ட் 15இல்) ஆர்.எஸ்.எஸ்.காரர்களோடு சேர்ந்து கொண்டு ஆரியக் கொடியை ஏற்றியவர்!

அந்தக் கோட்சே ஒரு பத்திரிகையின் ஆசிரியர். அந்த பத்திரிகையின் பெயர் 'Hindu Rashtra' என்பதாகும்.

"சுதந்திர நாளில் அந்தப் பத்திரிகையின் தலையங்கப் பகுதி, கறுப்பு மய்யினால் நிரப்பப்பட்டு வெளியே வந்தது.

ஆரியக் கொடி ஏற்றியபோது, முன் வரிசையிலே நின்று கொண்டிருந்த நாதுராம் கோட்சே உணர்ச்சி வசப்பட்டு அலறுகிறான்! 'இந்துக்கள் கொலை செய்யப்படுகிறார்கள்; இந்துப் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்; இதை மறைப்பதற்கே சுதந்திரம் பேசுகிறார்கள் இத்தனைக்கும் காரணம் காங்கிரஸ்தான்; எல்லாவற்றிற்கும் மேலாக காந்திதான்' என்று கோட்சே அப்போது அலறுகிறான். (ஆதாரம் மேற்குறிப்பிட்ட அதே நூல்) உடனே நாதுராம் கோட்சே, 500 தொண்டர்களோடு சேர்ந்து ஆரியக் கொடிக்கு சல்யூட்' செய்கிறான், குனிந்து தரையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு, "என்னை வளர்த்த தாய் நாடே, உனக்காக எங்கள் உடல் சாகத் தயார்" என்று பிரகடனப் படுத்துகிறான்.

அதற்குப் பிறகு 5 மாதங்களில் 1948 ஜனவரி 30இல் அதே நாதுராம் கோட்சே என்ற பார்ப்பனரால் காந்தியார் சுட்டுக் கொல்லப் படுகிறார்

ஆர்.எஸ்.எஸ். – பிரிட்டிஷ் ஆதரவு அவலங்களைக் கொண்ட நூலை வெளி வராமல் தடுத்த முரளி மனோகர் ஜோஷி

ஜன சங்கத்தை நிறுவிய ஷியாம் பிரசாத் முகர்ஜி, முஸ்லிம் லீக் தலைமையில் இருந்தவர்களை அமைச்சரவையில் இடம் பெற்று பாகிஸ்தான் பிரிவினை தீர்மானத்தை ஆதரித்தார்.

சங்கிகள் போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆளுநரிடம் மனு கொடுத்தார் அமைச்சராக இருந்த முகர்ஜி.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு சங்கிகள் ஆதரவு தந்த வரலாற்றை ஆவணங்களுடன் வெளிப்படுத்திய நூலை முரளி மனோகர் ஜோஷி தடை செய்தார்.

சாவர்க்கர் பிரிட்டிஷ் ஆட்சியில் தனது விடுதலைக்காக பல முறை மன்னிப்புக் கேட்டார்.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்ததால் 'தேச பக்தர்கள்' என்று தேசபக்தி முத்திரைக் குத்திக் கொள்கிறார்கள், ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். அதே நேரத்தில் ஈ.வெ.ரா., பிரிட்டிஷாரை ஆதரித்த தேசத் துரோகி என்று எச். ராஜா போன்ற பார்ப்பனர்கள் பேசி வருகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கும் இருந்த நெருக்கமான

உறவு தொடர்புகளை வரலாற்று ஆவணங்கள் பதிவு செய்திருக்கின்றன. கடந்த தொடரில் இது குறித்து பல வரலாற்று செய்திகளைப் பதிவு செய்துள்ளோம். வேறு சில முக்கிய வரலாற்று நிகழ்வுகள் இளைய தலை முறைக்கு வியப்பாக இருக்கும். மறைக்கப்படும் அந்த தகவல்கள் சிலவற்றை இந்தத் தொடரில் பதிவு செய்ய விரும்புகிறோம்.

1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் நடத்தியபோது பிரிட்டிஷாரை ஆதரித்தது அன்றைய சாவர்க்கரும் ஆர்.எஸ்.எஸ்.சும் என்பதை கடந்த தொடர்களில் சுட்டிக்காட்டி யிருந்தோம்.

இது குறித்து விரிவான ஆய்வு செய்த ஆண்டர்சன் மற்றும் பாம்லே ஆகியோர் பிரிட்டிஷ் ஆவணங் களிலிருந்தே ஆதாரங்களைப் பதிவு செய்துள்ளார். (ஆதாரம்: ஏ.ஜி. நூராணி எழுதிய ஆர்.எஸ்.எஸ். நூல்)

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காங்கிரஸ் அறிவித்த போது சாவர்க்கர் (ஆர்.எஸ்.எஸ். தத்துவார்த்த தந்தை - காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் விடுதலை செய்யப் பட்டவர்). பிரிட்டிஷ் வைஸ்ராய் லின்லித் கோ (Linlith Gow) என்பவரை 1939, அக்.2ஆம் தேதி நேரில் சந்தித்து, நாங்கள் காங்கிரஸ் போராட்டத்தை ஆதரிக்க வில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்கே ஆதரவு தருகிறோம் என்று அறிவித்தார். அப்போது பல மாகாணங்களில் பொறுப்புகளில் இருந்த காங்கிரஸ் கட்சியினர் தங்கள் அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்தார்கள்.

சாவர்க்கர் மட்டுமல்ல, சங்கிகளின்முன்னோடி தலைவரும் பாஜகவின் முன்னோடி அமைப்பான ஜனசங்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான ஷியாம் பிரசாத் முகர்ஜி (வங்காள பார்ப்பனர்) பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டையே எடுத்தார். காங்கிரசார், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆதரிக்க மாட்டோம் என்று வாக்குறுதியளித்தார். இது குறித்து ஆவணங்களோடு ஆய்வு செய்து வெளி வந்த ஒரு நூலை வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது மனித வளத் துறை அமைச்சராக இருந்த பா.ஜ.க.வின் முரளி மனோகர் ஜோஷி தடை செய்து விட்டார். காந்தி குப்தா என்பவர் ஆய்வு செய்து வெளியிட்ட அந்த நூலின் பெயர் “சுதந்திரத்தை நோக்கி... இந்தியாவின் சுதந்திர இயக்கத்துக்கான ஆவணங்கள்

‘1943-1944’ என்பதாகும். மூன்று பகுதிகளாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் இதை வெளியிட்டது. ஆவணக் காப்பகத்தில் இந்த நூலைக் கண்டுபிடித்த ஏ.ஜி.நூரானி, வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஜன சங்கத்தை நிறுவியவரான ஷியாம் பிரசாத் முகர்ஜி, வங்காள மாகாண அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தார். அம்மாகாணத்தின் முதல்வர் ஏ.கே. பல்வுல் ஹக். அவர், இந்திய பரனியன் முஸ்லிம் லீக் ஆட்சியின் பிரதிநிதி. இதே வங்காள மாகாண சட்டமன்றம், பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்து, தீர்மானத்தை நிறை வேற்றியது. முகர்ஜி - பாகிஸ்தானில் அடங்கி யுள்ள சிந்து மாககாணத்தின் பிரதிநிதியாக அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர். எனவே, இஸ்லாமிய ஆதரவு நிலைப்பாட்டை தனது அமைச்சர் பதவி வாய்ப்புக்காக எடுத்ததோடு, பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்ற தீர்மானத்தை யும் ஆதரித்தார். பிறகு வங்காள கவர்னர் சர். ஜான்ஹர்பர்ட்டை 1942 ஜூலை 26இல் சந்தித்து ஒரு மனுவை அளித்தார். காங்கிரசின் “வெள்ளையனே வெளியேறு” இயக்கத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். எங்களுடைய வங்காளத்தில் அப்படி ஒடுக்கிக் காட்டுவோம்; அதற்கான நிர்வாக ஏற்பாடுகளை சிறப்பாக செய்து வைத்துள்ளோம்” என்று பிரிட்டிஷ் ஆளுநருக்கு ஆலோசனை கூறினார். (Advising him to crush the revolt)

அதற்குப் பிறகு முகர்ஜி பம்பாயில் ஜின்னாவை சந்தித்தார். மூன்று மணி நேரம் இருவரும் பேசி னார்கள். இறுதியாக சாவர்க்கரை, வீர சாவர்க்கர் என்று கொண்டாடும் சங்கிகளின் வரலாற்றுப் புரட்டுகளை அம்பலப்படுத்தும் செய்திகளோடு இந்தப் பகுதியை நிறைவு செய்வோம்.

சாவர்க்கர் ஏன் கைது செய்யப்பட்டார்?

1909 ஜூலை முதல் தேதி இலண்டனில் உள்ள இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டுக்கு ஒரு நிகழ்ச்சிக்காக அதிகாரி வில்லி வந்தார். திங்காராவும் அங்கே மேலை நாட்டு உடையோடு வந்திருந்தான். திங்காராவின் தந்தையும் வில்லியும் நண்பர்கள். எனவே திங்காராவை - கர்சானுக்கு ஏற்கனவே தெரியும். திங்காராவைப் பார்த்தவுடன், “ஓ,

மைடியர்..... யு ஆர் ஹியர்'' என்று கூறிக்கொண்டு, கர்சான், திங்காரா விடம் மகிழ்ச்சியோடு கைகுலுக்க வந்தார். திங்காரா மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து, கர்சானை நோக்கி 5 குண்டுகள் சுட்டான். கர்சான் இரத்த வெள்ளத்தில் பிணமானார். கர்சானைக் காப்பாற்ற ஓடி வந்த டாக்டர் கோவாஸ்லால் காகா என்பவரும், குண்டு பாய்ந்து இறந்தார். கர்சான் பங்கேற்க வந்தது, தேசிய இந்தியக் கழகத்தின் ஆண்டு விழா நிகழ்ச்சி. அதே ஆண்டு டிசம்பர் மாதம் பாபாராவுக்கு (சாவர்க்கரின் அண்ணன்) தண்டனை விதித்தார் என்று நாசிக் மாவட்ட ஆட்சித் தலைவராகவும், நாசிக் மாவட்ட நீதிபதியாகவுமிருந்த எம்.டி. ஜாக்சனும் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜாக்சன், தியேட்டர் ஒன்றில் பிரபல மராத்தி நாடகமான 'ஷாரதா' எனும் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஆனந்த் கான்கரே எனும் சாவர்க்கரின் தீவிர சீடன் அவரை சுட்டுக் கொன்றான். இத்தனைக்கும் ஜாக்சன், பாபாராவுக்கு நேரடியாகத் தண்டனை தரவும் இல்லை; தன்னிடம் விசாரணைக்கு வந்த இந்த வழக்கை மேல் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பி விட்டார். ஜாக்சன் பிரிட்டிஷ்காரராக இருந்தாலும், சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இந்தியர் களையும், இந்திய இலக்கியங்களையும் மிகவும் நேசித்தவர். இலக்கிய வட்டங்களுடனேயே நெருக்கமாக இருந்தவர், இலக்கியக் கூட்டங்களில் பேசுவதிலும் எழுதுவதிலும், மிகவும் ஈடுபாடு காட்டியவர். இந்து மகாசபைத் தலைவர்களில் ஒருவரான எம்.ஆர். ஜெயகர் கூட, ஜாக்சனை மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார். இந்த இரண்டு கொலைகளிலும், சாவர்க்கரின் பங்கு என்ன? சாவர்க்கரின் புகழ் பாடி - அவரது சுயசரிதையை எழுதியுள்ள தனஞ்செய்கீர் இதுபற்றி - இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"திங்காரா - சாவர்க்கரிடம், தன்னை ஒப்படைத் துக் கொண்ட சீடன் - வில்லியைக் கொலை செய்வ தற்கு சில நாட்களுக்கு முன் திங்காரா, தனது தலைவர் சாவர்க்கரிடம் கேட்டான், 'உண்மையிலேயே நான் வீரத் தியாகம் புரியும் நேரம் நெருங்கி விட்டதா?' என்று; உடனே தயக்கம் எதுவுமின்றி - உறுதியான குரலில் சாவர்க்கரிடமிருந்து பதில் வந்தது. வீரத்தியாகத்துக்கு உறுதி பூண்டு செய்து முடிக்க எப்போது ஒருவன் தயாராகி விட்டானோ, அப்போதே அவன் வீரத்தியாகிதான்; அவனுக்கு வீரத்தியாகப் பட்டம் வந்தே தீரும்... முன்னாள் இந்திய வைஸ்ராய்

கர்சானைத்தான் உடனடியாக திங்காரா குறிவைத்தான்'' என்று எழுதுகிறார் கீர்! தனஞ்செய் கீர் எழுதிய வீரசாவர்க்கர் நூல் - பக். 49)

"இந்தக் கொலைக்குத் திட்டமிட்டது நான்தான், என்று தனது சுயசரிதையை எழுதிய தனஞ்செய்கீர் இடம் சாவர்க்கர் முழு உரிமை கொண்டாடினார். இதை கீர் என்னிடம் தெரிவித்தார். திங்காராவிடம், சாவர்க்கர் நிக்கல் முலாம் பூசப்பட்ட ஒரு துப்பாக்கியைக் கொடுத்து, இம்முறை நீ தோற்று விட்டால் பிறகு என் முகத்திலே முழிக்காதே (Don't show me your face. if you fail this time) என்று கூறினார். இலண்டன் போலீஸ் இந்தக் கொலையில் சாவர்க்கருக்குத் தொடர்பு உண்டு என்று உறுதியாக நம்பியது. ஆனால் சாட்சியங்கள் கிடைக்கவில்லை.

இறுதியாக, நாசிக் நீதிபதி கொலை வழக்கில் சதித் திட்டம் தீட்டியதாக சாவர்க்கர் குற்றம் சாட்டப்பட்டு அந்தமான் சிறையில் ஆயுள் கைதியாக்கப்பட்டார். கார்சன் வில்லி, ஜாக்சன் கொலைகளுக்கு சாவர்க்கர்தான் காரணம்'' - என்று எழுதுகிறார் ராபர்ட்பைன்.

விசாரணை முடிவில் தூக்குத் தண்டனை விதிப்பட்ட திங்காரா தனது கொலையை நியாயப்படுத்தி, சவால் அறிக்கை விடுத்தான்.

அதில், "என் தேசகாரியம், ஸ்ரீராமனின் காரியம்; என் தேச சேவை, நீ கிருஷ்ண பராமாத்மாவுக்குச் செய்யும் சேவை'' என்றான்.

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக - சாவர்க்கரின் சகோதரர் பாபாராவ் கைது செய்யப்பட்டு, அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டார். சாவர்க்கரை தேடப்படும் குற்றவாளியாக அரசு அறிவிக்கவே - இலண்டனில் உள்ள விக்டோரியா இரயில் நிலையத்தில் 1910இல் சாவர்க்கர் கைது செய்யப்பட்டார்.

அந்தமான் சிறைக்கு கப்பலில் கொண்டு போகப் படும்போது, மார்செ என்ற ஊரில் நங்கூரம் பாய்ச்சி நின்ற போது, கப்பலிலிருந்து குதித்து, கடலில் நீந்தி, பிரஞ்சு நாட்டில் அடைக்கலம் தேடிச் சென்ற சாவர்க்கர் - அங்கு கைது செய்யப்பட்டு, மீண்டும் 1911 ஜூலை 4ஆம் தேதி அந்தமான் கொண்டு வரப்பட்டார். மேற்குறிப்பிட்ட இரண்டு கொலைகளுக்கும் சேர்த்து 50 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது. அந்தமான் சிறையில் - சாவர்க்கர் என்ன செய்தார்? சிறைக்கு வந்த அடுத்த சில மாதங்களிலேயே - பிரிட்டிஷ் அரசிடம் தனது

விடுதலைக்கு கருணை மனு போடத் துவங்கி விட்டார். மற்றவர் களைத் தூண்டிவிட்டு, படுகொலைகளைச் செய்யச் சொல்லி விட்டு, தனக்கு எந்த ஆபத்தும் வராமல் காத்துக் கொள்வதும், தண்டிக்கப்பட்டு விட்டால், அரசிடம் கருணை மனு போடுவதும் சாவர்க்கரின் 'பண்பாக' இருந்திருக்கிறது என்று, ஆய்வாளர் ஏ.ஜி.நூரனி குறிப்பிடுகிறார். பிரிட்டிஷ் அரசிடம், முதலில் அவர் சமர்ப்பித்த இரண்டு கருணை மனுக்கள் பற்றிய தகவலை அவர் இரகசியமாகவே வைத்திருந்தார். சிறையில் உடனிருந்த தனது சகோதரரிடம் கூட இதைத் தெரிவிக்க வில்லை. இதே அந்தமான் சிறையில், சாவர்க்கர் இருந்தபோது, எவ்வளவோ அரசியல் கைதிகள், தண்டிக்கப்பட்டு சிறைக்குள்ளே வாடி வந்தார்கள். அவர்களில் யாரும், தன்னை மன்னித்து விடுதலை செய்யுமாறு, பிரிட்டிஷாரிடம் கருணை மனு போடவில்லை ஆனால், வீர சாவர்க்கர் தொடர்ந்து மன்னிப்பு மனுக்களைப் போட்டுக் கொண்டே இருந்தார்.

"நான் பிரிட்டிஷ் அரசுக்கு எநத வகையிலும் சேவை செய்யக் காத்திருக்கின்றேன்" (I am ready to serve the Government in any capacity they like) என்று 1913 அக்டோபரில் வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தில் 'வீரத்துடன்' பதிவிட்டார். பெரியார், தன் மீது தேசத் துரோக சட்டம் பாய்ந்தபோது எந்தத் தண்டனையை யும் ஏற்கத் தயார் என்று கூறி எதிர் வழக்காடவே மறுத்தவர்.

"அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருப்பேன்; பார்ப்பன ஆட்சிக்கு எனது முழு சக்தியையும் பயன்படுத்தும் நேர்மையாளனாக இருப்பேன்; இத்தகைய ஒரு பேரரசு எனது இதயத்தில் ஆழமாகப் பதிந்து மதிப்போடு உயர்ந்து விட்டது" என்ற எல்லையே 'வீர' சாவர்க்கார் மன்னிப்புக் கடிதம் 'பிரிட்டிஷ் தேச பக்தியை' வெளிப்படுத்தியது.

இறுதியாக 1980, ஜூலை 13ஆம் தேதி தலைமை நீதிபதி எம்.சி. சக்ளா மற்றும் நீதிபதி பி.பி.கஜேந்திர கட்கர் முன்னிலையில் சாவர்க்கர் "இனி எதிர்காலத் தில் எந்த அரசியல் நிகழ்விலும் ஈடபட மாட்டேன்; பம்பாய் வீட்டிலிருந்து வெளியேற மாட்டேன்" என்று உறுதி தந்ததோடு, இந்து மகாசபைத் தலைவர் பதவியிலிருந்தும் விலகினார். இறுதி வரை அரசியலி லிருந்து ஒதுங்கி வாழ்ந்தவர் என்பதே 'வீர சாவர்க்கர்' வீர வரலாற்றின் பதிவான இருந்தது.

‘சுதந்திர இந்தியாவில்’ பறிக்கப்பட்ட மாநில உரிமைகள்

பிரிட்டிஷ் ஆட்சி மாநிலங்களுக்கு வழங்கிய அறக்கட்டளை, தேசிய நெடுஞ்சாலை, தேசிய நீர் வழி உரிமைகள் மத்திய அரசிடம் போய் விட்டது.

பிரிட்டிஷ் இந்தியாவில் துறைமுகம், அஞ்சலகம் உள்ளிட்ட ஒன்றிய ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட நிறுவனங்களில் தமிழ்நாட்டுக்கு மட்டும் இருந்த பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு, சுதந்திரம் பெற்ற சில மாதங்களிலேயே நீதிமன்றம் வழியாக பார்ப்பனர்கள் பறித்தார்கள்.

பிரிட்டிஷ் இந்தியாவில் ‘இந்தியா’ கட்டமைக்கப்பட்ட வரலாறு; பிரிட்டிஷ் அரசு மாகாணங்களுக்கு வழங்கிய உரிமைகள்; கொண்டு வரப்பட்ட சீர்திருத் தங்கள்; பா.ஜ.க.வின் முன்னோடியான இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். பிரிட்டிஷ் ஆட்சியிடம் காட்டிய நெருக்கம் போன்ற வரலாற்றுச் செய்திகளை இதுவரை சுருக்கமாகப் பார்த்தோம். ‘சுதந்திர’ இந்தியா, மாநிலங்களின் உரிமைகளை பறிக்கத் தொடங்கிய வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

மாநிலங்கள் நிதி திரட்டித் தருபவை களாகவும், ஒன்றிய ஆட்சியோ மாநில அரசுகள் அதைப் பயன்படுத்தவிடாமல் தடுப்பதுமான நிலை நீடித்து. மாநிலங்கள் திரட்டித் தரும் நிதி,

ஒன்றிய அரசு வெளிநாடுகளிலிருந்து வாங்கும் கடன் அனைத்தும் ஒன்றிய அரசுக்குப் போகின்றன. அந்த நிதியை திட்டக் குழு, நிதிக் குழு, ஒன்றிய அமைச்சகம் வழியாக மாநில அரசுகளுக்கு வழங்குகிறது. நிதிகளைத் திரட்டித் தரும் மாநில அரசுகள் அதைப் பயன்படுத்தும் அதிகாரங்களற்றவைகளாயின. ஒன்றிய அரசு வசூலிக்கும் வரிகள், கூடுதல் வருவாய் தருவதாகவும், மாநில அரசின் வரிகள் குறைந்த வருவாய் வருவதாகவும் இருந்தன. (இப்போது ஒட்டு மொத்தமாக ஜி.எஸ்.டி. வழியாக மாநிலங்களின் வரி விதிப்பு உரிமைகளையே ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி மாற்றி அமைத்துவிட்டது. இது குறித்து அடுத்த பகுதியில் விளக்குவோம்)

இது மட்டுமின்றி மாநில அரசின் அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களின்படி மாநில உரிமைகளாக இருந்த அறநிலையங்கள், அறக்கட்டளைகள், சமய கட்டளைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் சுதந்திரத்துக்குப் பிறகு ஒன்றிய அரசு வசம் போய்விட்டது. தேசிய நெடுஞ் சாலைகள் ஒன்றிய அரசிடம் போய்விட்டன. தேசிய நீர் வழி என்று நாடாளுமன்றம் அறிவிக்கும் நீர் வழிகள் மீதும் அதில் செலுத்தப்படும் கலன்களான படகு, கப்பல்கள் மீதும் மாநில அரசுகளுக்கு அதிகாரமில்லை. இந்திரா பிரதமராக இருந்த போது 1974 ஜூன் 28, இந்தியாவுக்கு சொந்தமான கச்சத் தீவை, மாநில அரசின் கடும் எதிர்ப்புகளை மதிக்காமல் மாநில அரசுகளிடம் கலந்தாலோசிக்காமலேயே இலங்கைக்கு 'தாரை' வார்த்தார். இதைக் கண்டித்து 1976 ஆகஸ்டில் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநிலங்களுக்கான உரிமைகளை வலியுறுத்தி வந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, மாநில சுயாட்சி பற்றி ஆராய்ந்து அறிக்கை தர நீதிபதி ராஜமன்னார் தலைமை யில் ஒரு குழுவை நியமித்தார்.

மாநில சுயாட்சியை வலியுறுத்தும் அந்த அறிக்கையின் அடிப்படையில் தமிழக சட்ட மன்றத்தில் 1974 ஏப்.16 அன்று மாநில சுயாட்சி தீர்மானம் தமிழக சட்டசபையில் நிறை வேற்றப்பட்டு நடுவண் ஆட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. "உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்" என்று அத் தீர்மானம்

வலியுறுத்தியது. (சட்டசபையில் அ.தி.மு.க. இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. குப்பைக் கூடையில் தூக்கி எறிய வேண்டிய அறிக்கை என்று சட்டசபையில் பேசியது மிகப் பெரும் சோகம்)

மாநில சுயாட்சி தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய முதல்வர் கலைஞர் கருணாநிதி, சட்ட மன்றத்தில், மத்திய அரசு மாநில கோரிக்கை களைப் புறக்கணிப்பதைப் பட்டியலிட்டார். 1973-74இல் மால்கோ நிறுவனத்தை தேசிய மயமாக்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கை, தொழிலாளிகளுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு, முதலீட்டில் பங்கு கோரி தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவுக்கு மத்திய அரசு ஒப்புதல் தராததையும் சோளம், கம்பு போன்ற சிறு தானியங்களை ஒரு மாநிலத்தி லிருந்து வேறு மாநிலத்துக்குக் கொண்டு செல்ல இருந்த தடையை மாநில அரசை கலந்து ஆலோசிக்காமலே நீக்கியதையும், எண்ணெய் டெப்போக்களுக்கு மண்ணெண் ணெய் விநியோகம் செய்யும் மாநில உரிமையை திடீரென்று பறித்ததையும் சுட்டிக் காட்டினார். குறிப்பாக தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப்பட்டதை நீண்ட பட்டியலிடலாம் என்றாலும் அது மிக நீண்ட விரிவாகிவிடும் என்று உதாரணத்துக்கு மட்டும் சிலவற்றை சுட்டிக் காட்டினோம். பொதுவான உரிமை பறிப்புகளை கீழ்க் கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

- மாநில அரசு சட்டம் இயற்றினாலும் ஆளுநர் கையெழுத்திட்டு ஏற்பு வழங்க வேண்டும்.

- ஆளுநர், மாநில அரசும் இயற்றும் எந்த சட்டத்துக்கும் ஒப்புதல் தராமல் கால வரம்பின்றி கிடப்பில் போட்டு வைக்கலாம்.

- மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டு மாநில அதிகாரங்களை நாடாளுமன்றம் எடுத்துக் கொள்ளலாம்.

- வெளிநாடுகளுடன் ஒன்றிய அரசு செய்து கொள்ளும் உடன்பாட்டில் மாநிலம் தொடர்பான பிரச்சினைகள் இருந்தால் உடனே அது ஒன்றிய அரசின் கட்டுப் பாட்டின் கீழ் மாறிவிடுகிறது.

- அரசியல் சட்டம் 249ஆவது பிரிவின்படி நாட்டு நலன் கருதி மாநில உரிமைப் பட்டியலில் உள்ள கூறுகளை ஒன்றிய அரசு அபகரித்துக் கொள்ளலாம்.

- சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று கூறி மாநில அரசைக் கலைத்து ஒன்றிய அரசு கட்டுப்பாட்டின் கீழ் மாநிலங்களைக் கொண்டு வர முடியும்.

- காவல்துறை மாநிலங்களின் உரிமையில் வருகிறது. அதையும் மீறி ஒன்றிய அரசு 'ஒன்றிய ரிசர்வ் போலீஸ்' படையை வைத்திருக்கிறது. மாநிலங்கள் அனுமதி பெறமலேயே அப் படையை மாநிலங் களுக்குள் அனுப்பலாம்.

- நாடாளுமன்றம் இயற்றுகிற சட்டங் களுக்கு மாநிலங்கள் கட்டுப்பட வேண்டும். அதற்கான கட்டளைகளை ஒன்றிய அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் (பிரிவு 256).

- இந்தி ஆட்சி மொழியாவது குறித்து, நாடாளுமன்றத்தின் ஆட்சி மொழிக் குழு அளிக்கும் பரிந்துரைகளை செயல்படுத்த குடியரசுத் தலைவர் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம் (பிரிவு 344 கீழ்).

- அரசியல் சட்டத்தின் 18ஆவது பிரிவு நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்து அடிப்படை உரிமைகளையே நிறுத்தி வைக்கலாம் என்று கூறியது. இந்திரா பிரதமராக இருந்தபோது நெருக்கடி நிலையை அறிவித்து சர்வாதிகார ஆட்சியை நடத்தினார். தொடர்ந்து வந்த மொரார்ஜி தலைமையிலான ஜனதா கட்சி ஆட்சி, இந்தக் கொடூரமான சட்டப் பிரிவை எதிர்காலத்தில் செயல்படுத்தாமல் முடக்கி, சட்டத் திருத்தம் செய்தது என்பது வரலாறு.

- அந்த நெருக்கடி நிலை காலத்தில் தான் மாநில உரிமைப் பட்டியலில் இருந்த கல்வி, பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு, ஒன்றிய அதிகாரக் குவிப்பில் சேர்க்கப் பட்டது. அதன் பாதிப்புகளைத்தான் இப்போது பார்க்கிறோம். மோடி ஆட்சியின் மக்கள் விரோதக் கல்வித் திட்டங்கள் வழியாக தமிழ்நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

- 356ஆவது சட்டப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சியைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியை நடத்த வழி வகுக்கிறது. ஆட்சிக் கவிழ்ப்பு உத்தரவுக்கு ஆளுநர் கையெழுத்திட வேண்டும். அபூர்வமாக சில நேர்மையான ஆளுநர்கள் கையெழுத்திட மறுத்தால் குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டு மாநில அரசை

முடக்கி விடலாம். அதற்கு 'otherwise' என்ற சொல் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் 1991ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய ஆளுநராக இருந்த சுர்ஜித் சிங் பர்னாலா மறுத்தபோது குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் கையெழுத் திட்டு தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார் என்பது வரலாறு.

- அரசியல் நிர்ணய சபையில் மாநில ஆளுநரை மக்களே வாக்களித்துத் தேர்ந் தெடுக்கலாம் என்ற முடிவு தான் அரசியல் நிர்ணய சபையில் மேலோங்கியிருந்தது. பிறகு இப்படி ஒரு நிலை வந்து விட்டால் மாநிலங்கள் தனியே பிரிந்து போய்விடும் ஆபத்துகள் உருவாகலாம். மத்திய அரசின் பிடி தளர்ந்து விடும் என்று நேரு, ராஜேந்திர பிரசாத், டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற செல்வாக்குள்ள தலைவர்கள் அஞ்சியதால் நியமன முறைக்கு மாற்றி விட்டார்கள்.

- திட்டக் குழு, நிதிக் குழு, வரி வருவாய் போன்றவற்றில் ஏற்கனவே அமுலில் இருந்த சட்டங்கள் மாநிலங்கள் மத்திய அரசிடம் கையேந்தும் நிலையை உருவாக்கி வைத்திருந்தன. இப்போது மோடி ஆட்சியில் நிலைமை இன்னும் மோசமாகி (bad to worse) மாநிலங்களிலும் அடையாளங்களையே முற்றாக அழிக்கப்படும் ஆபத்துகள் தலைதூக்கி நிற்கின்றன.

பா.ஜ.க. நடத்தும் 'புஷ்யமித்ரசுங்கன்' ஆட்சி

பிரிட்டிஷ் ஆட்சி - காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறுகளைத் தொடர்ந்து இத்தொடரில் - அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் 'இருண்டகால' வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

பா.ஜ.க.வின் இருண்ட காலம்

இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத இருண்ட காலம் பா.ஜ.க.வின் ஆட்சிக் காலம். மவுரியப் பேரரசை வீழ்த்திவிட்டு புஷ்யமித்திர சுங்கன் ஆரிய வேதமத ஆட்சியை நிறுவிய காலம். இப்போது மீண்டும் திரும்பி இருக்கிறது. 'இராஷ்டிரிய சுயம் சேவக் சங்' (ஆர்.எஸ்.எஸ்.) என்ற வேத கால ஆட்சியை மீட்டுருவாக்கம் செய்யும் அமைப்பின் காலடியில் மோடி ஆட்சியின் அதிகாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியம் அதிகார மய்யங்களை வழி நடத்தி வருகிறது. ஒற்றை ஆட்சி என்ற இலக்கு நோக்கி சட்டங்கள் மாற்றப்படுகின்றன; கருத்துரிமைகள் நசுக்கப்படுகின்றன. 'மதச் சார்பற்ற' ஆட்சி என்ற அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள சொற் றொடர் முற்றாக உயிரற்றவையாக்கப்பட்டுள்ளன. மாநிலங்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு, 'சமஸ்கிருத' பண்பாடே ஒரே பண்பாடு என்ற திணிப்புகள் வேகமெடுத்துள்ளன.

1) தேசியம் (Nationalism) 2) எதேச்சதிகாரம் (authoritarianism), 3) மதப் பெரும்பான்மை (Majoritarianism) என்ற மூன்று

அடிப்படைத் தளங்களில் இந்த பார்ப்பனிய அரசு கட்டமைக்கப்பட்டு வருகிறது. 'தேசியம்' என்ற பா.ஜ.க.வின் கருத்தாக்கம் எது? இது 'இந்து தேசியம்' என்பதுதான். ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் இப்படி கூறுகிறார்:

"இங்கிலாந்தில் வசிப்பவர்கள் ஆங்கிலேயர்கள் என்று அழைக்கப்படும்போது, ஜெர்மனியில் வசிப்பவர்கள் ஜெர்மானியர்கள் என்று அழைக்கப் படும்போது, அமெரிக்காவில் வசிப்பவர்கள் அமெரிக்கர்கள் என்று அழைக்கப்படும்போது இந்துஸ்தானத்தில் இருப்பவர்கள் மட்டும் ஏன் இந்துக்கள் என்று அழைக்கக் கூடாது" (2014, ஆகஸ்ட் 10இல் கட்டாக்கில் பேசியது). அதே உரையில், "இந்தியாவில் உள்ள அனைவரின் கலாச்சார அடையாளம் இந்துத்துவா. நாம் அனைவருமே இந்த மாபெரும் கலாச்சார வழி வந்தவர்கள்" என்றும் குறிப்பிட்டார்.

இந்த உரை எதை உணர்த்துகிறது? இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரும் மதங்கள், கடவுளை மறுக்கும் நாத்திகர்களும், அதாவது இந்து அடையாளத்தை ஏற்க மறுக்கும் எவரையும் இந்த நாட்டின் குடிமக்களாகவே கருதக் கூடாது என்பதே இந்த உரையின் மய்யமான கருத்து. இது அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கே எதிரானது; அரசியல் நிர்ணய சபையிலேயே இது குறித்து விவாதங்கள் நடந்தன. அரசியல் சட்டத்தின் முதலாவது பிரிவு - 'இந்தியா, அதாவது பாரத்' மாநிலங்களின் ஒன்றியமாக (Union of States) இருக்கும் என்று வரையறுத்தது. 'இந்துஸ்தான்' என்ற சொல்லை ஏற்கவில்லை. சங்பரிவாரங்கள் 'இந்தியா' என்ற சொல்லையே ஏற்க மறுப்பவர்கள்; அது இஸ்லாமியர், கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய சொல் என்றும், 'பாரதியம்' என்பதே இந்துக்களுக்கான அடையாளம் என்றும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத் தலைவர் கோல்வாக்கர் கூறுகிறார். (ஆதாரம்: bunch of thoughts - நூல்) இதன் காரணமாக பா.ஜ.க. உள்ளிட்ட சங்பரிவாரங்களின் அனைத்து அமைப்பு களுமே 'பாரதிய' எனும் பெயரை மட்டுமே கொண்டுள்ளன.

ஒடுக்குதலிலிருந்து ஒழித்தல் நோக்கி...

மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகு மொழி அடையாளத்தை நீக்கி மத அடையாளமான இந்து தேசமாக்க அனைத்து

அதிகாரங்களையும் பயன்படுத்துகிறது பா.ஜ.க. ஆட்சி. இந்திய தேசியம் என்ற இப்போதுள்ள கட்டமைப்பே பார்ப்பன-பனியா பன்னாட்டு சுரண்டலுக்கு கதவு திறந்துள்ளது. இனங்களின் உரிமைகளை ஒடுக்குகிறது என்பது நமது பார்வை. இப்போதுள்ள நடுவண் பா.ஜ.க. ஆட்சியோ 'ஒடுக்குதல்' என்ற எல்லைகளைத் தாண்டி மொழி இன அடையாளங்களை 'ஒழித்தல்' என்ற இலக்கை நோக்கி பாய்கிறது. இந்தியா பெரும்பான்மையாக இந்துக்களைக் கொண்ட நாடு எனும்போது ஏன் 'இந்து' நாடாக இருக்கக் கூடாது என்பதே இவர்களின் அடிப்படையான வாதம். பெரும்பான்மை வாதம் சரியானதா? இது குறித்து தெளிவும் புரிதலும் அவசியமாகிறது.

மதத்தின் அடிப்படையில் 'பெரும்பான்மை'யை உறுதி செய்யும் வாதங்களுக்கு அம்பேத்கர் தெளிவான மறுப்பை முன் வைக்கிறார்.

இலண்டன் வட்டமேஜை மாநாட்டில் இது குறித்து விவாதங்கள் வந்தபோது அம்பேத்கர் எழுத்து பூர்வமாக இந்த விளக்கங்களை முன் வைக்கிறார்.

"மெஜாரிட்டி அடிப்படையிலான வாதத்தை முன்வைப்பவர்கள் ஒன்றை மறந்து விடு கிறார்கள். அதில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று அரசியல் பெரும்பான்மை (Political Majority), இரண்டு - (மத) வகுப்புவாத பெரும்பான்மை (Communal Majority), அரசியல் பெரும்பான்மை மாற்றத்துக்கு உட்பட்டது. அரசியல் பெரும் பான்மைக்குள் அடங்கியுள்ள பிரிவினர் மாறக் கூடியவர்கள் (Class Composition). ஆனால் (மத) வகுப்புவாத பெரும்பான்மை மாற்றத்துக்கு உள்ளாகவே முடியாது. அது பிறப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. அரசியல் பெரும்பான்மை என்ற வட்டத் துக்குள் யார் வேண்டுமானாலும் வரலாம். அது திறந்தே இருக்கும். (மத) வகுப்புவாதப் பெரும்பான்மைக்கான கதவுகள் எப்போதுமே மூடப் பட்டிருக்கும். அரசியல் பெரும்பான்மையின் அரசியல் என்பது ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கும் அகற்றுவதற்கும் அனைவருக்கும் உரிமைகளை வழங்குகிறது. வகுப்புவாதப் பெரும்பான்மையோ இந்து மதத்தில் பிறந்திருப்போருக்கு மட்டுமே உரித்தானது; அவர்கள் மட்டுமே தீர்மானிக்கக் கூடியது.

அரசியல் பெரும்பான்மையை உறுதி செய்யும் ஒரு ஜனநாயக ஓட்டத்தில் மதப் பெரும்பான்மை அதற்கான அடையாளத்தோடு எப்படி பங்கெடுக்க முடியும்? மதப் பெரும்பான்மை என்ற அடையாளத்தை அங்கீகரித்து விட்டால் அது பரம்பரை ஆட்சிக்கு வழி திறந்து விடும். பிறகு மதப் பெரும் பான்மை கொடுங்கோல் ஆட்சியாகவே மாறிப் போய்விடும். ஜனநாயகத்தை சீர்குலைத்து விடும்" என்று அற்புதமாக விளக்கம் தந்தார் அம்பேத்கர்.

அடுத்ததாக, மதசார்பின்மை பற்றி குறிப்பிட வேண்டும். பா.ஜ.க.வும் சங்பரிவாரங்களும் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'மதச்சார்பின்மை' என்பதை முற்றாகப் புறக்கணித்து வருகிறார்கள். இது போலி மதச் சார்பின்மை. சிறுபான்மை சமூகத் தினரை திருப்தி செய்யும் நோக்கம் கொண்டது என்கிறார்கள். 1976ஆம் ஆண்டு இந்திரா பிரதமராக இருந்தபோது அவசர நிலை காலத்தில் அரசியல் சட்டத்தில் 42ஆவது சட்டதிருத்தம் வழியாக சேர்க் கப்பட்டதுதான் சோஷலிசம், மதச்சார்பின்மை என்ற வார்த்தைகள் என்று பா.ஜ.க. வாதிடுகிறது.

"மதச்சார்பின்மை என்பதே மோசமான வார்த்தை (abusive word) அதைப் பயன்படுத்தவே கூடாது. வகுப்பு பதட்டங்களையே இது உருவாக்குகிறது என்று உள்துறை அமைச்சராக இருந்த ராஜ்நாத் சிங் நாடாளுமன்றத்தில் வெளிப்படையாகவே அறிவித்தார். (நாடாளுமன்ற உரை 26.11.2016). அது மட்டுமல்ல; அரசியல் சட்டத்தின் முகப்புரையிலும் மதச்சார்பின்மை என்ற சொல்லை, சட்டத்தை உருவாக்கிவர்கள் இணைக்கவில்லை என்றும் அம்பேத்கரே அதை விரும்பவில்லை என்றும் நமது இந்துமதமே மதச்சார்பற்றதுதான் என்றும் பதவுரை, பொழிப்புரைகளை எழுதினார் ராஜ்நாத் சிங். ராஜ்நாத் சிங்கிற்கு அரசியல் சட்டம் குறித்த புரிதலே இல்லை என்றே கூற வேண்டும்.

இந்திய அரசியல் சட்டத்தில் 'ஜனநாயகம்' என்ற சொல்கூட அதை உருவாக்கியபோது இடம் பெற வில்லை. அதற்காக இந்தியா ஜனநாயக நாடே இல்லை என்றுகூட கூறிவிட முடியுமா? அதே சட்டத் தில்தான் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை; தேர்தலை நடத்தும் சுயாட்சி உரிமைக் கொண்ட தேர்தல் ஆணையம்; தேர்தல் பிரதிநிதித்துவ சட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. சட்டத்தின் உள்ளடக்கமே 'ஜனநாயக நாடு' என்பதைத் தெளிவுபடுத்தும்போது அந்த

வார்த்தையை சேர்க்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு அரசியல் நிர்ணய சபை வந்தது. அதே பார்வையில்தான் ‘மதச்சார்பின்மை’ என்ற வார்த்தையும் தவிர்க்கப்பட்டது. ஆனால் ‘மதச்சார்பின்மை’ என்பதற்கான உள்ளடக்கங்கள் பல்வேறு சட்டப் பிரிவுகளில் இடம் பெற்றுள்ளன. (மத அடையாளமற்ற) குடிமகன் (பிரிவு 9) மதம், இனம், ஜாதி அடிப்படையில் பாகுபாடு கூடாது (பிரிவு 15), பொது வேலைகளில் பாகுபாடு கூடாது (பிரிவு 16), தனிமனித மத சுதந்திர உரிமை (பிரிவு 25) அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பாகுபாடு கூடாது (29(2), மத அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் பாகுபாடு கூடாது (பிரிவு 325) போன்ற பிரிவுகள் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை உறுதிப்படுத்துகின்றன; இந்த நிலையில் மதச் சார்பின்மை என்ற வார்த்தை இடம் பெறாததாலேயே இது மதம் சார்ந்த நாடாகி விடாது.

ஜனநாயகக் கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டன

மதச்சார்பின்மை என்பது மோசமான வார்த்தை என்று உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் பேசினார்.

டெல்லி சட்டமன்ற உறுப்பினர்களின் விளக்கத்தைக் கேட்காமலேயே தேர்தல் ஆணையம் அவர்களின் பதவி பறித்தது.

ஊழலை ஒழிப்பதாகக் கூறி பதவிக்கு வந்தவுடன், பல ஊழல் அதிகாரிகளை, தங்களுக்கு உதவி னார்கள் என்று பதவி வழங்கி காப்பாற்றியது மோடி ஆட்சி.

பிரிட்டிஷ் ஆட்சி - காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறுகளைத் தொடர்ந்து இத்தொடரில் - அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் 'இருண்டகால' வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

"தேசியம் - பெரும்பான்மை-மதச்சார்பின்மை" என்ற சொல்லாடல் வழியாக சங்பரிவாரங்கள் திணித்து வைத்துள்ள நச்சு சிந்தனைகளின் அடிப்படையில் அதன் எதேச்சாதிகார அதிகாரப் பறிப்புகள் தொடருகின்றன. அவற்றை சுருக்கமாகப் பட்டியலிடுவோம்.

திட்டக்குழு - நிதிஅயோக்காக மாற்றப்பட்டது

இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பிறகு பன்முகத் தன்மை கொண்ட மாநிலங்களுக்கு அதற்கேற்ற திட்டங்களை

உருவாக்கவும் அது குறித்து சுதந்திரமான விவாதங்கள் உரையாடல்களுக்கு வழி வகுக்கும் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர். அரசின் தலையீடு இல்லாத சுயேட்சை அமைப்பாக செயல்பட்டு வந்தது (திட்டக்குழு மாநிலங்களிடையே பாகுபாடு காட்டும் அமைப்பு என்ற விமர்சனமும் உண்டு). ஆனால், மோடி பிரதமர் பதவியேற்று 2014ஆம் ஆண்டு அவரது 'முதல் சுதந்திர நாள்' உரையில் திட்டக்குழு என்பதே ஒழிக்கப்பட்டு, அதற்கு பதிலாக 'இந்தியாவை மாற்றியமைக்கும் தேசிய நிறுவனம்' [National Institution for Transforming Inida (NITI)] - என்ற அமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்தார். துறைசார் நிபுணர்கள் ஓரம் கட்டப்பட்டு, அதற்கு பதிலாக அரசு அதிகாரவர்க்க நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. நாட்டின் பிரச்சினைகளை ஆராயக் கூடியவர்கள் அதில் இடம் பெறவில்லை. பொருளாதார ஆய்வுகளோ புள்ளி விவரங்களோ திரட்டப்படவில்லை. சுகாதாரம் - விவசாயம் - வேலை வாய்ப்புகள் குறித்து திட்டமிடக்கூடிய நிபுணத்துவம் இல்லாத அமைப்பாக அது முடங்கிப் போனது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடைத் தரகராக செயல்படும் அமைப்பாகியது.

தேர்தல் ஆணையம் சீர்குலைவு

தேர்தல் ஆணையம் - அரசியல் சட்டத்தின் கீழ் தன்னாட்சியுடன் செயல்படுவதற்காக உருவான அமைப்பு - பா.ஜ.க. ஆட்சியின் 'கைபொம்மையாக' மாறிக் கிடக்கிறது. ஆளும் பா.ஜ.க.வின் விருப்பு வெறுப்புக்கேற்ப தேர்தல்களை நடத்தி வருகிறது இந்த அமைப்பு. இதற்கு ஏராளமான சான்றுகளை பட்டியலிட முடியும். பா.ஜ.க. ஆட்சியின் நலனுக்காகவே 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ஏழு கட்டங்களாகப் பிரித்து நடத்தியது.

2017ஆம் ஆண்டு குஜராத்-ஹிமாச்சலப் பிரதேச மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடந்த போது தேர்தல் தேதி அறிவிப்புகளில் ஆணையம் பா.ஜ.க.வின் நலனுக்காக முறைகேடாக செயல்பட்டது. இரண்டு மாநிலங்களுக்கும் வாக்கு எண்ணிக்கைக்கு ஒரே தேதி தான் என்றாலும், குஜராத் தேர்தலை அறிவிக்காமல், இமாச்சலப் பிரதேச தேர்தல் தேதியை மட்டும் அறிவித்தார்கள். குஜராத் மாநில அரசு வாக்காளர்களிடம் ஓட்டு வாங்க சில புதிய திட்டங்களை அறிவிக்க

வேண்டும் என்பதற்காகவே முறைகேடாக இந்த கால அவகாசம் தரப்பட்டது.

2018 ஜனவரியில் தேர்தல் ஆணையத்தின் தலைவராக இருந்தவர் ஜோதி. டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி கட்சியின் 20 சட்டமன்ற உறுப் பினர்களை பதவி நீக்கம் செய்து அறிவித்தார். வருமானம் வரக் கூடிய பதவிகளை வகித்தார்கள் என்பது குற்றச்சாட்டு. இது குறித்து அந்த சட்டமன்ற உறுப்பினர்களிடையே எந்த விளக்கமும் கேட்காமலேயே தேர்தல் ஆணையம் பதவியைப் பறித்தது என்பதுதான் இதில் முக்கியமானது. பாதிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். தேர்தல் ஆணையம் பதவிப் பறிப்பு உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்புக்குப் பிறகு, ஆம் ஆத்மி கட்சியின் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியை உறுதி செய்யாமல் பா.ஜ.க. ஆட்சிக்கு சாதகமாக வேண்டுமென்றே ஒரு ஆண்டு காலம் வரை இதில் எந்த முடிவையும் எடுக்காமல் கிடப்பில் போட்டது தேர்தல் ஆணையம்.

தமிழ்நாட்டில் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க.வின் ஓ.பி.எஸ். அணி, சசிகலா அணிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது. முதலமைச்சர் பதவியில் தன்னைத் தொடர சசிகலா அனுமதிக்காமல், அவரே முதல்வர் பதவியைப் பறித்துக் கொண்டார் என்பதே ஓ.பன்னீர் செல்வத்தின் ஆத்திரம். சசிகலா முதல்வராக தேர்வு செய்யப்பட்டாலும் பதவி ஏற்க முடியவில்லை. சொத்துக் குவிப்பு மோசடி வழக்கில் அவருக்கு சிறைத் தண்டனை உறுதி யானது. எடப்பாடி பழனிச்சாமியை சசிகலா முதல்வராக்கினார். தி.மு.க. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. ஓ. பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 11 பேர் சொந்தக் கட்சிக்கு எதிராக வாக்களித்தனர். நியாயமாக கட்சிமாறல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் நடவடிக்கை எடுக்க வில்லை. எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக அவரது தலைமையை மாற்ற வேண்டும் என்று ஆளுநரிடம் புகார் தந்த 18 எம்.எல்.ஏ.க்கள் பதவியைப் பறித்து உத்தரவிட்டார் சபாநாயகர். இந்தத் தேர்தலை உடனே நடத்தாமல் காலம் தாழ்த்தி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் கவிழாமல் பா.ஜ.க. ஆணைக்கேற்ப செயல்பட்டது தேர்தல் ஆணையம். வேறு வழியில்லாமல் இப்போது நாடாளுமன்றத் தேர்தலோடு 21

சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவித்திருக்க வேண்டும். ஆனால் 18 சட்டமன்ற தொகுதிகளுக்கு மட்டுமே அறிவித்தது. 3 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் வழக்கு இருப்பதாக சமாதானம் கூறியது. 21 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு அதில் எதிர்க்கட்சி வெற்றி பெற்று விட்டால் அ.இ.அ.தி.மு.க. மெஜாரிட்டிக்கு நெருக்கடி வந்துவிடும் என்பதால் அதில் 3 தொகுதிகளை பாதுகாப்பாக தேர்தல் நடத்தாமல் ஒதுக்கி வைப்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கம். இப்போது சென்னை உயர்நீதிமன்றமும் உச்சநீதி மன்றமும் வழக்கு நிலுவையில் இருப்பதைக் காரணம் காட்டி தேர்தலைத் தள்ளிப் போடுவது சரியான காரணம் அல்ல. ஏற்கனவே வழக்கு நிலுவையில் உள்ள தொகுதிகளில் தேர்தல் நடந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டி யிருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் முகத்திரை கிழிந்து தொங்குகிறது.

ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது மூன்று இடைத் தேர்தல்கள் நடந்தன. அதில் ஒன்று திருப்பரங்குன்றம் இடைத் தேர்தல். அ.இ.அ.தி.மு.க. வேட்பாளருக்கு அவர் கட்சி வேட்பாளர் என்று சான்றளித்து ஜெயலலிதா கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் வேட்புமனுவில் கையொப்பமிட வேண்டும் என்பது தேர்தல் விதி. ஜெயலலிதாவால் கையொப்பமிட முடியவில்லை; விண்ணப்பப் படிவத்தில் அவரது கை நாட்டுப் பெற்றுள்ளதாகக் கூறி, கட்சி சார்பில் சமர்ப்பித்தார்கள். அது ஜெயலலிதாவின் கைவிரல் ரேகை தானா என்பதை முறையாக உறுதிப்படுத்தாமல் சமர்ப்பித்த விண்ணப்பத்தை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டது. இப்போது சென்னை உயர்நீதிமன்றம் இது மோசடி (கசயரன) என்று தீர்ப்பளித்துள்ளது. தேர்தல் ஆணையம் எந்த பதிலும் கூறாமல் வாய்மூடி நிற்கிறது.

ஊழல் ஒழிப்புக்கான ‘லோக்பால்’ அமைப்புக்கு தலைவரை நியமிக்கக் கோரி உச்சநீதிமன்றம் தொடர்ந்து வலியுறுத்தியபோது அதைக் கண்டுகொள்ளாத பிரதமர் மோடி, தேர்தல் தேதி அறிவிப்புக்குப் பிறகு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரை (பிளாக்கி சந்திர கோஷ்) இப்பதவிக்கு நியமித்து ஊழல் ஒழிப்புக்கு தமது ஆட்சி தயாராக இருப்பதாக வாக்காளர்களுக்கு உணர்த்த விரும்பினார். தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரான இந்த முறைகேட்டை தேர்தல்

ஆணையமும் ஒத்துக் கொண்டது.

இவை சில உதாரணங்கள் மட்டுமே.

சி.பி.அய். நம்பகத் தன்மை குலைப்பு

5 ஆண்டு மோடி ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட மற்றொரு அமைப்பு சி.பி.அய். என்ற மத்திய புலனாய்வுத் துறை. மத்திய கண்காணிப்பு ஆணையம் என்ற சுயேட்சை அதிகாரம் கொண்ட அமைப்பின் கண்காணிப்பில் செயல்படும் புலனாய்வுத் துறை சி.பி.அய்.

ஊழல் ஆட்சியான காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்று கூறி ஆட்சிக்கு வந்தார் மோடி. ஆனால் காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சி.பி.அய். இயக்குனராக நியமிக்கப்பட்ட ரஞ்சித் சின்கா என்பவரை மட்டும் அப்படியே பதவியில் தொடர அனுமதித்தது மோடி ஆட்சி. ரஞ்சித் சின்கா, பல ஊழல் வழக்குகளின் விசாரணையில் முறைகேடாக தலையிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான ஒரு அதிகாரி. உச்சநீதி மன்றமே இந்த அதிகாரியின் முறைகேடுகளைக் கண்டித்த நிலையிலும் அவர் பதவிக் காலம் முடியும் வரை பதவியில் தொடர அனுமதித்தது மோடி ஆட்சி. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? இஷ்ரத் ஜஹான் போலி என்கவுண்டர் வழக்கில் முக்கிய குற்ற வாளியான அமீத்ஷாவை தனது ஜூனியர் அதிகாரிகளின் கருத்துகளைப் புறந்தள்ளிவிட்டு அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் காப்பாற்றியவர் என்பதால்தான். அதற்கு மோடி ஆட்சி தந்த வெகுமதிதான் பதவி நீடிப்பு.

ரஞ்சித் சின்கா பதவி ஓய்வுக்குப் பிறகு இயக்குனர் பதவிக்கு வந்த அனில் குமார் சின்காவும் அமீத் ஷாவைக் காப்பாற்றும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டார். 2014 டிசம்பர் மாதம் விசாரணை நீதிமன்றம் அமீத்ஷாவை விடுவித்ததை எதிர்த்து சி.பி.அய். மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்க வேண்டும். அப்படி செய்யாமல், அமீத் ஷாவை காப்பாற்றினார் அனில் குமார் சின்கா.

பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கி, பல ஆயிரம் கோடி மோசடி செய்த விஜய் மல்லையா தேடப்படும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட நிலையில் 2015இல் அவர் பாதுகாப்பாக

இலண்டனுக்கு தப்பி செல்ல உதவியது சி.பி.அய்.

2016ஆம் ஆண்டு பி.கே. பன்சால் என்ற மூத்த அதிகாரி (60), அவரது மகன் யோகேஷ் (31) இருவரும் கிழக்கு டெல்லியில் உள்ள அவரது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார்கள். பன்சால் கார்ப்பரேட் கம்பெனிகள் தொடர்பான ஊழல் வழக்குகளை விசாரிக்கும் பிரிவுக்கு தலைமை இயக்குநராக இருந்தவர். ஒரு ஊழல் வழக்கு விசாரணையில் தாம் ஈடுபட்டிருந்தபோது சி.பி.அய். தன்னை அவமதித்து சித்திரவதை செய்தது என்றும், அதன் காரணமாகவே தற்கொலை செய்து கொள்வதாகவும் கடிதம் எழுதி வைத்திருந்தார். அதற்கு முன்பே தனது கணவருக்கு சி.பி.அய். தரும் அவமானங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவரது மனைவி சத்யபாலா, மகள் நேகா இருவரும் தற்கொலை செய்து கொண்டனர்.

குஜராத்தில் 2002இல் மோடி முதல்வராக இருந்தபோது இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட இனப் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடியவர் சமூகப் போராளி டீஸ்தா செதால் வாட் அதற்காக 2015ஆம் ஆண்டு 16 பேர் அடங்கிய சி.பி.அய். குழு வெளிநாட்டுப் பணம் அவருக்கு வருவதாகக் கூறி மும்பையில் அவரது வீட்டுக்குள் சோதனை நடத்தியது; தொடர்ந்து அவரை அலைக் கழித்தது.

அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் இரண்டா வது காலகட்ட ஆட்சி காலத்தில் இமாச்சல பிரதேச முதல்வராக இருந்தவர் வீரேந்திரா சிங். அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகக் கூறி அவரது டெல்லி வீட்டில் சி.பி.அய். சோதனை நடத்தியது. சோதனை நடத்திய நாள் அவரது வீட்டில் மகளுக்குத் திருமணம் நடந்த நாள்.

அனில்குமார் சின்காவின் பதவிக் காலம் 2016 டிசம்பரில் முடிவடையும் நிலையில் இயக்குனர் பதவிக்கு வர வேண்டியவர் அடுத்த நிலையில் இருந்த ஆர்.கே. தத்தா. அவர் தங்களது முறைகேடுகளுக்கு ஒத்துழைக்க மாட்டார் என்று கருதிய மோடி ஆட்சி, அவரை உள்துறை அமைச்சகத்துக்கு இடமாற்றம் செய்தது. மூத்த அதிகாரி இடமாற்றம் செய்யப் பட்டதால், கூடுதல் இயக்குனராக இருந்த நாகேஷ் அஸ்தானா என்பவர் தற்காலிக இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

சி.பி.அய். இயக்குநர்களை தேர்வு செய்வதற்கு உயர்மட்டக் குழு ஒன்று இருக்கிறது. அதில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் இடம் பெற்றிருப்பார்கள். இயல்பாக இயக்குனராக வேண்டிய ஆர்.கே. தத்தா, நிலக்கரி ஒதுக்கீடு தொடர்பான வழக்கை விசாரித்து வந்தவர் என்பதோடு உச்சநீதிமன்றம் இந்த விசாரணையில் தொடர்புடைய அதிகாரிகளை இடமாற்றம் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. ஆனாலும் நியாயமான விசாரணையை நடத்தி வந்த அந்த அதிகாரியை உச்சநீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் அவர் சி.பி.அய். தலைமைப் பொறுப்புக்கு வந்து விடாமல் தடுக்க இடமாற்றம் செய்தார்கள். 2017 பிப்ரவரியில் அவர் ஓய்வு பெற்றார். அவரைத் தொடர்ந்து அசோக் குமார் வர்மா என்ற இயக்குனரை உயர்மட்டக் குழு நியமித்தது.

இந்த நியமனத்தை விரும்பாத மோடி, குஜராத்தைச் சார்ந்த அஸ்தனா என்பவரை மத்திய கண்காணிப்பு வாரியத்தின் வழியாக சிறப்பு இயக்குனராக நியமித்தார். இவர் ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் என்பதால் இயக்குனர் வர்மா, சிறப்பு இயக்குநராக நியமிக்கப்பட்ட அஸ்தனாவின் நியமனத்தை எதிர்த்தார். வர்மா மீது எதிர் ஊழல் குற்றச்சாட்டை அஸ்தனா சுமத்தவே சி.பி.அய். அமைப்பு சந்தி சிரித்தது. ஒரு நள்ளிரவில் மோடி ஆட்சி இருவரையும் நீக்கி நாகேஸ்வரராவ் என்பவரை இடைக்கால இயக்குநராக நியமித்தது. (இயக்குநர் பதவி என்றால் மட்டுமே உயர்மட்டக் குழு நியமிக்க முடியும்; இடைக்கால இயக்குநரை அரசே நியமிக்கலாம்) பிரச்சினை உச்சநீதிமன்றம் போனது. வர்மா முறையான இயக்குநர் என்று அறிவித்த உச்சநீதிமன்றம் அதற்கு அடையாளமாக ஒரு நாள் மட்டும் அவர் இயக்குநராக இருக்கலாம் என்று கூறவே, அவர் தன்மானத்தோடு பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்து விட்டார். சி.பி.அய். என்ற அமைப்பை இப்படியெல்லாம் தனது சொந்த நலனுக்கு பந்தாடியது மோடி ஆட்சி.

இப்போது, இராஜஸ்தான், மகாராஷ்டிரா, கேரளா உள்ளிட்ட மாநில ஆட்சிகள், தங்கள் அனுமதியின்றி சி.பி.அய். விசாரணைக்கு தடை போட்டுள்ளன.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி பறித்த சமூக நீதி உரிமைகள்

102ஆவது சட்டத் திருத்தத்தின் வழியாக 'பிற்படுத்தப்பட்டோரை' நிர்ணயிக்கும் உரிமையை மாநில அரசிடமிருந்து பறித்த ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி, பிறகு பா.ஜ.க. பிற்படுத்தப்பட்ட எம்.பி.கள் எதிர்ப்பு காரணமாக மீண்டும் 105ஆவது சட்டத்திருத்தம் கொண்டு வந்து மாநிலங்களிடம் ஒப்படைத்தது.

மருத்துவப் படிப்புகளுக்கு அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு வழங்க மறுத்த ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி நடத்திய சட்டப் போராட்டத்தின் விளைவாக உச்சநீதிமன்றக் கண்டனத்துக்கு உள்ளானதால் மீண்டும் இடஒதுக்கீடு செய்ய முடிவெடுத்தது.

பிரிட்டிஷ் ஆட்சி - காங்கிரஸ் ஆட்சி காலங் களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறு களைத் தொடர்ந்து இத்தொடரில் - அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் 'இருண்டகால' வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

27 சதவீத இடஒதுக்கீடு மறுப்பு

பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு பதவிகளில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்தார், சமூக நீதிக் காவலரான பிரதமர் வி.பி.சிங். 24 ஆண்டுகள் கழிந்த பிறகும் 27 சதவீதத்தில்

இன்னும் பாதியளவுகூட பிற்படுத்தப்பட்டோருக்குப் பணிகள் வழங்கப்பட வில்லை என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளி வந்துள்ளன.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சி யூட்டுகின்றன. 1993 செப்டம்பர் 8ஆம் தேதி பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இப்போது என்ன நிலை? மத்திய அரசின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ள தகவலின்படி ஜனவரி 1, 2017 வரை இதுதான் நிலை.

24 மத்திய அமைச்சகங்களில் குரூப் ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில் பிற்படுத்தப்பட்டோர் 17 சதவீதம் பேரும் ‘பி’ பிரிவில் 14 சதவீதம் பேர் மட்டுமே பணியாற்றுகிறார்கள். ‘சி’ பிரிவு ஊழியர்களில் 11 சதவீதம் பேரும், ‘டி’ பிரிவில் 10 சதவீதம் பேரும் பணியாற்றுகிறார்கள். 24 அமைச்சகங்கள், மொத்த முள்ள 37 அரசுத்துறைகளில் 24 துறைகள், சட்ட அங்கீகாரம் பெற்ற 8 அமைப்புகள் (பிரதமர் அலுவலகம், குடியரசுத் தலைவர் செயலகம், பொருளாதாரம் தொடர்பான அமைப்புகள்) உள்ளிட்ட 54 நிறுவனங்கள், துறைகள் பற்றியும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் குரூப் ‘ஏ’ பிரிவில் 14 சதவீதம். ‘பி’, ‘சி’, ‘டி’ பிரிவுகளில் முறையே 15, 17, 18 சதவீதமும் மட்டுமே பிற்படுத்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அமைச்சரவைக்கான செயலகத்தில் (Cabinet Secretariat) 64 ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில், ஒருவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் இல்லை. 60 பேர் திறந்த போட்டியில் வந்தவர்கள் (இவர்கள் பார்ப்பனர், உயர் ஜாதியினர்) பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்தவர்கள் 4 பேர் மட்டுமே. தகவல் மற்றும் ஒலி/ஒளி பரப்பு அமைச்ச கத்தில் மொத்தமுள்ள 503 ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில் 25 பேர் மட்டுமே பிற்படுத்தப் பட்டவர்கள்.

2015ஆம் ஆண்டில் இதே சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி, 12 அமைச்சகங்கள் 10அரசுத் துறைகள், மற்றும் சட்ட அங்கீகாரமுள்ள நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைத்த இடங்களின் எண்ணிக்கை ‘ஏ’ பிரிவில் 10.71 சதவீதம், ‘பி’ பிரிவில் 7-18 சதவீதம்.

2013ஆம் ஆண்டு பெறப்பட்ட தகவலின்படி 55 மத்திய அரசின் கீழ் உள்ள அமைப்புகளில் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 9.43 சதவீதம் மட்டுமே.

சென்னையைச் சார்ந்த சமூக செயல்பாட்டாளர் முனைவர் ஈ. முரளிதரன், இந்த தகவல்களைப் பெற்றுள்ளார்.

மத்திய வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தந்துள்ள தகவல்கள் குறித்து அவர் தெரிவித்த கருத்துகள் மிகவும் முக்கியமானவை.

“தரப்பட்டிருக்கும் தகவல்கள்கூட முழுமை யானவை அல்ல. இவற்றில் 11 அமைச்சகங்கள் தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. இந்தத் துறைகள்தான் வேலை வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கும் துறைகள், தொடர்வண்டித் துறை, பாதுகாப்புத் துறை, உள்துறை, நிதித்துறை போன்றவை தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. மத்திய அரசின் மொத்த வேலை வாய்ப்புகளில் 91.25 சதவீத வேலை வாய்ப்புகள் இந்தத் துறைகளில்தான் இருக்கின்றன. இப்போது தகவல் தெரிவித்துள்ள 24 அமைச்சகங் களில் மொத்த வேலைகளில் 8.75 சதவீதம் வேலைகள் மட்டுமே உள்ளன. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொடர்வண்டித் துறையில் மத்திய அரசுப் பணியாளர்களாக பதிவு செய்தவர்கள் 13,28,199. இவர்கள் நிரந்தரப் பணியாளர்கள். இவர்களில் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனப் பிரிவினர் குறித்த எந்தத் தகவலும் இல்லை.

மத்திய அரசுப் பணிகளில் 31 இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். ஆனால், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாம் பெற்றிருக்கும் தகவல் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 735 ஊழியர்களைப் பற்றி மட்டுமே.

2015ஆம் ஆண்டில், நான் தகவல் கேட்டபோது, 40 அமைச்சகங்கள், 48 மத்திய அரசுத் துறைகள், பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக் குறித்து, தகவல் தர மறுத்து விட்டன.

மத்திய வேலை வாய்ப்பு, பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை, 2013ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் தேதி, ஒரு தாக்கீதை பிறப்பித்தது. (O.M. No.43011.10.2002 ESTT. RES) இதன்படி ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் பட்டியல் இனம், பழங்குடி மற்றும்

இதர பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை பிரதிநிதித்துவம் குறித்தத் தகவலைத் தெரிவிப்பது கட்டாயக் கடமை' என்று இந்த தாக்கீது அறிவுறுத்தியது. ஆனால் அது கிடப்பில் போடப் பட்டது.

2013 ஜூன் மாதம் மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகம் விரிவான ஒரு தாக்கீதைப் பிறப்பித்தது. (No.36038/1(i) 2013 ESTT. RES) அதில் பட்டியல் இனப் பிரிவினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோருக் கான நிரப்பப்படாத பணியிடங்களை, விரைவாகக் கண்காணித்து, உயர்மட்ட அளவில் முடிவுகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கூறியது. 6 மாதத்துக்குள் பணியிடங்களை நிரப்புவதற்கான விரைவான செயல்பாடுகளை முடுக்கிவிட வேண்டும். அதற்காகத் தேவைப்பட்டால், விதிகளிலிருந்து விலக்குகளை வழங்கலாம் என்றும் தாக்கீது அறிவுறுத்தியது.

இதைத் தொடர்ந்து மத்திய வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திரசிங் நாடாளு மன்றத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். சமூக நீதித் துறைஅமைச்சகத்தின் பரிந்துரைப்படி இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கான நிரப்பப்படாத இடங்களை நிரப்புவதற்கான முனைப்பான செயல்பாடுகள் 2014 நவம்பர் 11இல் தொடங்கி, ஆகஸ்டு 2016க்குள் முடிக்கப்படும் என்றார்.

இதற்கான செயல் திட்டங்களும் உருவாக்கப் பட்டன. அந்த செயல் திட்டங்கள் செயலாக்கம் பெற்றிருக்குமேயானால் இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது. தாக்கீதுகளோ, செயல் திட்டங்களோ முழுமையாக அலட்சியப்படுத்தப் பட்டதைத்தான் இந்த புள்ளி விவரங்கள் காட்டு கின்றன என்றார் முனைவர் முரளீதரன்.

இறுதியாக 2019ஆம் ஆண்டு நிலவரம் இது தான். சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள்.

27 சதவீதம் நடைமுறைப்படுத்தப்பட்டு 27 ஆண்டுகளான பிறகும்,

மத்திய அரசின் அதிகாரப் பகிர்வில் நாட்டின் பெரும்பான்மை மக்களான ஓபிசி (சூத்திர) பிரிவினர்க்கு இன்னமும் அவல நிலை.

குரூப் 'ஏ' பதவிகள் - 27 துறைகளில் ஓபிசி பிரிவினர் 'ஜீரோ' (ஒருவர்கூட இல்லை).

மத்திய அரசின் 41 அமைச்சக / துறைகளில் ஓ.பி.சி, எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் எண்ணிக்கை (31.3.2019).

ஆதாரம் : மத்திய பொது நிறுவனங்களின் துறை சர்வே அறிக்கை 2018-2019.

(தகவல் அனுப்பி உதவியவர்: தமிழ்நாடு அரசின் சமூக நீதி கண்காணிப்புக் குழு உறுப்பினர் கோ. கருணாநிதி)

தமிழர் வேலை வாய்ப்புகளைப் பறிக்கும் வடநாட்டுக்காரர்கள்

“முஜே தமில் நஹி மாலும், இந்தி மே போலோ” (எனக்கு தமிழ் தெரியாது, இந்தியில் சொல்). இன்று தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள், இரயில்வே பயணச் சீட்டு பெறும் இடங்கள், வாழ்நாள் காப்பீடு, பொதுக் காப்பீடு மற்றும் பொதுத் துறை வங்கிகளில் பணியாற்றும் ஊழியர் களிடம் தமிழர்கள் இவ்வார்த்தைகளை எதிர் கொள்கிறார்கள். டெல்லி அரசுகளின் கயமைத் தனத்தினால், சூழ்ச்சியினால் கடந்த பத்தாண்டுகளாக தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசுத்துறைகளில் தமிழர்களுக்கான வேலை வாய்ப்புரிமை தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது.

இது சேவைத்துறைகளில் மட்டு மல்லாது தமிழகத்தில் செயல்படும் மத்திய அரசின் தொழிற் துறைகளான (Factories and Enterprises) என்.எல்.சி (NLC), ஓ.என்.ஜி.சி (ONGC), பி.எச்.இ.எல் (BHEL), துப்பாக்கி தொழிற்சாலை, டாங்கி தொழிற்சாலை, இராணுவ உடை தயாரிப்பகம் (Defence Factories), இணைப்பு பெட்டி தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகிய தொழிற்சாலைகளில் இந்த நிலை தான்.

மத்திய அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், பொதுத்துறை நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், வங்கிகளில் அதிகாரிகள் அளவிலான பணி நியமனங்களுக்கு அகில இந்திய அளவில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகளில் முதற்கட்ட அப்ஜெக்டிவ் (Objective) வினாத் தாள்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் இருக்கிறது. இரண்டாம் கட்ட எழுத்துமுறை தேர்வுகளை (Descriptive) இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதலாம் என்று

விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வுகளும் (Interview) டெல்லியில் மையமிட்டு நடத்தப்பட்டு, நேர்முகத் தேர்வுகளை நடத்தி மதிப்பெண் அளிப்பவர்கள் பெரும்பாலும் வட மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருப்பதால் இந்தி பேசுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தமிழகத்தை சேர்ந்தவர்கள் பின்னுக்கு தள்ளப்படு கிறார்கள். இலட்சங்களில் மாத ஊதியம் பெறும், இவ்வாறு தேர்வு செய்யப்படும் அதிகாரிகளே எதிர்காலத்தில் அந்த நிறுவனங்களுக்கு தலைமைப் பொறுப்புகளுக்கு வருகிறார்கள், இவ்வாறு தலைமைப் பொறுப்புகளுக்கு தமிழகத்தை சேர்ந்தவர் களை வரவிடாமல் தடுப்பதற்கான டெல்லியின் சூழ்ச்சியினால் இப் பணியிடங்களுக்கு தமிழர்கள் ஒருவர் கூட நியமிக்கப்படுவதில்லை இதே நிலைதான் அதிகாரிகள் அல்லாத பணியாளர் அளவிலான தேர்வுகளுக்கும்.

பணியாளர் அளவிலான தேர்வுகள் மாநில அளவிலோ அல்லது மண்டல அளவிலோ நடத்தப் படவேண்டும் என்று பல ஆணைகள், தீர்ப்புகள் உள்ளன. ஆனால் இவை எல்லாம் காற்றில் விடப்பட்டு, படிப்படியாக தளர்த்தப்பட்டு மத்திய அரசின் ஆதிக்கப் போக்கினால் இப்பணிகளும் அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்றன.

உதாரணத்திற்கு 2006 ஆண்டுவரை மத்திய பணியாளர் தேர்வாணையம் மண்டல அளவிலேயே தேர்வுகளை நடத்தி வந்தது, தபால் துறை தபால் உதவியாளர் பணியிடங்களுக்கு 2014 வரை மாநில அளவில் நடத்தி வந்தது. அப்போது இத்தேர்வுகளில் அப்ஜெக்டிவ் (Objective) மற்றும் நேர்முகத் தேர்வு (Interview) மூலமாக இரண்டு கட்ட நிலைகளில் பணி நியமனச் சேர்க்கை நடைபெற்று வந்தன. இதனால் அந்தந்த மாநில மக்களுக்கான வேலை வாய்ப்புகள் மத்திய அரசு நிறுவனங்களில் கிடைத்து வந்தது.

பின்னர் இவை அகில இந்திய அளவிலான தேர்வுகளாக மாற்றப்பட்டு இத்தேர்வுகளில் இந்தி பேசுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக சூழ்ச்சிகள் செய்யப்பட்டு எழுத்துமுறை (Descriptive) வினாத் தாள்கள் இந்தியில் நுழைக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் அப்ஜெக்டிவ் (Objective) வினாத்தாள்களும் ஆங்கிலத்துடன் இந்தியிலும் இருப்பதால், இந்தியைத் தாய்மொழியாக கொண்டவர் களுக்கு, வினாக்களை எளிதில் புரிந்து கொண்டு விடையளிப்பது மிகவும்

எளிதாக இருக்கிறது. மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே விடையளிக்க வாய்ப்புகளை இந்திய அரசு ஏற்படுத்தித் தந்து இந்தி பேசும் மக்களுக்கு சாதகமாக நடந்துகொள்கிறது என்பதை இங்கு சுட்டிக் காட்டுகிறோம். மிக உயரிய முதல்நிலை IAS, IPS பணியிடங்களுக்கு தேர்வுகளை நடத்தும் UPSC கூட தேர்வுகளைத் தமிழில் நடத்துகிறது. ஆனால் மக்களிடையே நேரடியாக தொடர்பு கொண்டு களத்தில் பணியாற்றும் இப்பணியிடங் களுக்கு நாம் பலமுறை வலியுறுத்தியும் இந்திய அரசானது தமிழில் தேர்வுகளை நடத்த மறுக்கிறது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு இந்தி பேசும் வேற்று மாநிலத்தை சேர்ந்தவர்கள் தமிழகத் தில் சிறு நகரங்களுக்கும், மாவட்ட தலைநகரங்களுக்கும் பணியமர்த்தப் பட்டு பெருவாரியாக பணியாற்றி வருகிறார்கள். இதனால் தமிழகத்தில் இயங்கும் மத்திய அரசின் சேவைகளைப் பெறவேண்டுமானால் அங்கு பணியாற்றும் இந்தி மட்டுமே தெரிந்த வேற்று மாநிலப் பணியாளர்களிடம், இந்தி தெரிந்தால் மட்டுமே சென்று அவர்களின் சேவையை பெற முடியும் என்ற நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு பணியிடங்களில் தேவைக்கேற்ப மண்டல அளவிலோ அல்லது மாநில அளவிலோ பணியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இருந்தும் (Radhe Shyaam Vs Union of India) மத்திய அரசானது தான் தோன்றித்தனமாக வடவர்களை பணிகளில் திணிப்பதையே கருத்தாக கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளை தமிழர்களுக்கு மறுக்கும் இந்த ஆபத்தான போக்குகளை தடுத்து நிறுத்த வேண்டியது அவசரம்; அவசியம்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில்

1.10.2015 நிலவரப்படி 18 தேசிய வங்கிகளில் மொத்தமுள்ள 450 மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 5 பேர் மட்டுமே. 1255 துணை மேலாளர் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 16 பேர் மட்டுமே. அதாவது 1.1 சதவீதம். அரசின் கீழ் உள்ள நான்கு ஆயுள் காப்பீட்டுக் கழகங்களில் (இன்சூரன்ஸ் நிறுவனங்கள்) 43 மேலாளர் பதவிகளில் ஒரே ஒருவர்தான் பிற்படுத்தப்பட்டவர். 275 துணை மேலாளர் பதவிகளில் 3 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர். ‘தலித்’ நிலையை சொல்லவே வேண்டாம்.

ஒன்றிய ஆட்சியின் இந்தித் திணிப்புகள்

உள்துறை அமைச்சகத்தில் அனைத்து கோப்பு களும் இந்தியில் மட்டுமே எழுதப்படுவதாக பெருமை பேசுகிறார் அமித்ஷா.

மும்மொழிக் கொள்கையிலிருந்து விலக்கு பெற்ற தமிழ்நாட்டில் தொடர்ந்து இந்தியைத் திணிக்கிறது, ஒன்றிய ஆட்சி.

அஞ்சல் துறை, வங்கித் துறை, ஒன்றிய அரசுத் துறைகளில் இந்தித் திணிப்பு வேகம் வேகமாக நடக்கும்போது - தமிழ்நாட்டில் ஒன்றிய அரசுத் துறைகளில் இந்திக்காரர்களே நியமிக்கப்படு கிறார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சி - காங்கிரஸ் ஆட்சி காலங் களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறு களைத் தொடர்ந்து இத்தொடரில் - அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் ‘இருண்டகால’ வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

இந்தித் திணிப்பு (3.5.2017 ‘ஆனந்தவிகடன்’ தீட்டிய தலையங்கம்)

2011ஆம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக்குழு சமர்ப்பித்த இந்தி மொழி தொடர்பான பரிந்துரை களுக்குக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இப்போது ஒப்புதல் அளித் துள்ளார். இந்தி பேசாத மாநிலங்களின் மீது இடியைப்போல் இறங்கியிருக்கும் இந்தப் பரிந்துரைகள் கீழ்வருமாறு...

1. ஜனாதிபதி, பிரதமர், மத்திய மந்திரிகள் உள்ளிட்ட தலைவர்கள், குறிப்பாக யாருக்கெல்லாம் இந்தி தெரியுமோ, அவர்கள் இனி நாடாளுமன்றத்திலும் பொது விழாக்களிலும் இந்தியில்தான் பேச வேண்டும்

2. விமானங்களில் இந்தியில்தான் அறிவிப்புகளை வெளியிட வேண்டும். அதைத் தொடர்ந்து, ஆங்கிலத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டும்.

3. இனி, விமானங்களில் வழங்கப்படுகிற செய்தித் தாள்கள் மற்றும் பத்திரிகைகள் 50 சதவிகிதம் இந்தி மொழியில் இருக்க வேண்டும். ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் டிக்கெட்டுகளிலும் இந்தி பெருமளவு பயன்படுத்தப்பட வேண்டும்.

4. மத்திய அரசின் டேராடூன் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் அனைத்துப் பயிற்சி ஏடுகளும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

5. பள்ளிக் கல்வித்திட்டத்தில் இந்தி கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்பட வேண்டும். முதல் கட்டமாக சி.பி.எஸ்.இ மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடங்களில் 10ஆம் வகுப்பு வரையில் இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப் படவேண்டும். இது தொடர்பாக மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தி, கொள்கை வகுக்க வேண்டும்.

6 இந்தி மொழி பேசாத மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்களில், தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் இந்தியில் பதில் அளிப்பதை விருப்புரிமைத் தேர்வாகக் கொள்ள வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் அனைத்தும் ஆறு ஆண்டு களுக்கு முன்பு, அதாவது காங்கிரஸ் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட நாடாளுமன்ற நிலைக் குழுவால் முன் மொழியப்பட்டவை. இந்த நிலைக் குழுவின் தலைவரே, தமிழகத்தைச் சேர்ந்த, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் தான். இந்தியைத் திணிப்பதற்கான காங்கிரஸ் பரிந்துரைகளை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில், 'இந்தி'யாவின் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு

ஒப்புதல் வழங்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை. பல்வேறு மொழிகள், தேசிய இனங்கள், பண்பாடுகளை அழித்து, இந்தி என்ற ஒற்றை மொழியை அனைத்து மட்டங்களிலும் கொண்டுவரும் நடவடிக்கைதான் இது.

“காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்” என்றார் மோடி. ஆனால், இதையெல்லாம் பார்க்கும்போது, இந்தி தவிர்த்த பிறமொழிகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதுதான் நோக்கம் போலத் தெரிகிறது. நாம் அனைவரும் ‘இந்தியர்’ என்று இதுவரை சொல்லி வந்ததன் உண்மையான அர்த்தம், இனி ‘இந்தி’யர் என்பது தானோ?

இனி, ஆனந்தவிகடன் தலையங்கமாவது தமிழில் இருக்கலாமா, அல்லது இதுவும் இந்தியில்தான் இருக்க வேண்டுமா? - என்று கேட்கிறது, ‘ஆனந்த விகடன்’.

தமிழ்நாட்டில் 1967இல் கொண்டு வரப்பட்ட இருமொழிக் கொள்கையை ஒழித்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் அனைத்துத் துறைகளிலும் அரங்கேறி வருகின்றன.

1963இல் இந்திய ஆட்சி மொழி சட்டம் உருவானது. அதற்கான விதிகள் 1976இல் தான் வகுக்கப்பட்டன. அதில் இந்தியாவின் ஆட்சி மொழிக் கொள்கை தமிழ்நாடு நீங்கலாக அமுல்படுத்தப்படும் என்றே குறிப்பிடுகிறது. கடைசியாகக் கடந்த 14.5.2011லும் இது உறுதிப்படுத்தப் பட்டது. அதையும் மீறியே இப்போது இந்தி திணிக்கப்படுகிறது.

தேசியக் கல்விக் கொள்கை என்ற கல்வித் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி உருவாக்கி மாநிலங்களின் மீது திணித்தபோது மும்மொழித் திட்டத்தை வலியுறுத்தியது. உடனடியாக தமிழ் நாட்டிலிருந்து கண்டனக் குரல்கள் வலிமையாக எழுந்தன. அடுத்த இரு நாட்களிலேயே அதைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தது ஒன்றிய ஆட்சி.

உ.பி.யில் அகில இந்திய ஆட்சி மொழிக் கூட்டத்தில் (12.11.2021) பங்கேற்றுப் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, “நான் ஒரு குஜராத்தி; ஆனால் என் தாய்மொழியைவிட இந்தி மொழியைத்தான்

நேசிக்கிறேன் என்று கூறிய தோடு, உள்துறை அமைச்சகத்தில் ஒரு கோப்பு கூட ஆங்கிலத்தில் எழுதப்படுவது இல்லை என்பதை பெருமையாகக் கூறிக் கொள்கிறேன். நாங்கள் இந்தியை ஆட்சி மொழியாக முற்றிலுமாய் பின்பற்றி வருகிறோம். இந்தியா சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் போது உள்நாட்டு மொழிகளும் ஆட்சி மொழியாக இந்தி வரவேண்டும்; அப்போது ஒரு அயல் மொழியினர் உதவியை நாம் நாடக் கூடாது. அந்த அளவுக்கு இந்தி வலிமை பெற வேண்டும் என்ற உறுதி மொழியை இந்தி மொழி ஆர்வலர்கள் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று பேசியிருக்கிறார். இந்தியே ஆட்சி மொழி என்ற கொள்கை தமிழ்நாட்டில் மட்டும் அமுல்படுத்தப்படாது என்று இப்போ துள்ள சட்டபூர்வமான நிலையை காற்றில் பறக்கவிட ஒன்றிய ஆட்சி தயாராகி விட்டது.

சென்னை சரக்கு மற்றும் சேவை வரி உதவி ஆணையரான பா. பாலமுருகன் என்பவர்தான் இப்படியோர் அதிரடி குற்றச்சாட்டைச் சுமத்தி யிருக்கிறார். இது குறித்து துறை சார்ந்த மேலதிகாரிகளுக்கு பாலமுருகன் எழுதியிருக்கும் கடிதத்தில்,

“நான் சென்னை (புறம்) சரக்கு மற்றும் சேவை வரி ஆணையர் அலுவலகத்தின் இந்திப் பிரிவில் பணியாற்றி வருகிறேன். இந்தி மொழியைப் பரப்பும் இந்தப் பணியில் எனக்குத் துளியும் விருப்பம் இல்லை. எனவே, இந்தி எழுதப் படிக்கத் தெரிந்த, அந்தப் பிரிவில் பணியாற்றுவதற்கு விருப்பமுள்ளவர்களைப் பணி நியமனம் செய்ய உத்தரவிடும்படி மத்திய வரி மற்றும் சுங்கவரி வாரியத்தின் தலைவர் அவர்களைத் தாழ்மை யுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்” என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

1976இல் அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங் களை மூன்று வகைகளாகப் பிரித்தார்கள். அதாவது, இந்தி பேசும் மாநிலங்கள், இந்தியைக் கல்வி மொழியாக மட்டும் வைத்திருக்கும் மாநிலங்கள், இந்தியைக் கல்வி மொழியாக அங்கீகரிக்காத மாநிலங்கள் என அவை பிரிக்கப் பட்டிருக்கின்றன. இதன்படி ‘தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களில் தமிழ் அல்லது ஆங்கிலத்தை அலுவல் மொழியாக வைத்துக் கொள்ளலாம்; இந்தி மொழியை அலுவல் மொழியாகப் பயன்படுத்தக் கூடாது’ என்று 1976ஆம் ஆண்டிலேயே அலுவல் மொழிச் சட்டத்தில் திருத்தம் செய்துவிட்டார்கள்.

சட்டம் இப்படியிருக்கும்போது, தமிழ்நாட்டி லுள்ள மத்திய அரசு அலுவலகங்களில், இந்தியைப் பரப்புவதற்கென்று தனிப்பிரிவு வைத்திருப்பதே தவறானது. அடுத்து, இந்தி மொழியே தெரியாத ஒருவரை, இந்தி பரப்பும் குழுவில் நியமிப்பதற்கான நோக்கம் என்ன?

தமிழ்நாட்டிலுள்ள எல்.ஐ.சி., பெல், ஏ.ஜி.எஸ் அலுவலகம் உள்ளிட்ட மத்திய அரசு நிறுவனங்களில் இந்தி மொழி திணிக்கப்படுவதை எதிர்த்து ஏற்கெனவே ஊழியர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

2014இல் ராணிப்பேட்டை பெல் தொழிற் சாலையில் ஓர் அதிகாரி வழக்கத்துக்கு மாறாக வேண்டுமென்றே இந்தி மொழியிலான சுற்றறிக்கையை தொழிலாளர்களுக்கு அனுப்பி வைத்தார். அதிகாரியின் இந்த நடவடிக்கைக்கு எதிராகப் போராடிய தொழிலாளர்களும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும்வகையில், இந்தி மொழியில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்குத் தமிழ் மொழியிலேயே பதில்களைத் தயார் செய்து அனுப்பிவைத்தனர்

வங்கித் துறைகளில்...

வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) என்பது நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஓர் அரசு நிறுவனமாகும். 2014ஆம் ஆண்டிற்கு பிறகு ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே வேலைக்கு சேருபவர்களுக்கான ஆரம்ப தேர்வுகளை நடத்தியது. 2019ஆம் ஆண்டில் கிராமப்புற மற்றும் பிராந்திய வங்கிகள் உட்பட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பணியாளர்களுக்கான ஆரம்பத் தேர்வுகள் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெறும் என்று IBPS அறிவித்தது.

ஆட்சேர்ப்புக் கொள்கை மாற்றப்பட்டதன் காரணமாக உள்ளூர் பணியாளர்கள் 90% பேர் வேலை வாய்ப்பை இழக்கின்றனர். மேலும், இளைஞர்கள் வேலை வாய்ப்புகளை இழக்கிறார்கள்; அந்தந்த மாநிலங்களின் தாய்மொழி மட்டுமே தெரிந்த வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வங்கியில் பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். வாடிக்கையாளர்களை இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

இதற்கு நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆளும் கட்சிகள், எதிர்க்கட்சிகள் உள்ளிட்டு பலரும் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து மாநில மொழிகளில் வங்கிப் பணியாளர் தேர்வுகள் நடத்தவிருப்பதாக அறிவித்திருக்கிறது.

அஞ்சல் அலுவலக பண விடைகள் (Money Order) சிறு சேமிப்பு படிவங்கள் (Small Savings Forms) இந்தியிலும், ஆங்கிலத்திலும் மட்டுமே இணைய வழியில் கிடைக்கின்றன; அலைபேசிகளில் கூட சாதாரண மக்கள் தமிழ் எழுத்துக்களை தரவிறக்கம் செய்ய தமிழில் வாய்ப்பில்லை. இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், தலைமை அஞ்சல் நிலைய பொது மேலாளருக்கு கடிதம் எழுதி நேரில் சந்தித்து வற்புறுத்திய பிறகு தமிழ் இடம் பெறச் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் அஞ்சல் துறைகளில் தமிழே தெரியாத வடநாட்டார்கள், தமிழ் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றதாக மோசடியாக தமிழ்நாட்டில் வேலை வாங்கிய மோசடி மத்திய தேர்வாணையத்தில் நடந்தது. மோசடி அம்பலமானப் பிறகு, தேர்வுகள் இரத்து செய்யப்பட்டன.

மத்திய அரசால் நடத்தப்படும் தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனங்களுக்கான அய்.அய்.டி. கூட்டு நுழைவுத் தேர்வுகளை (ஜே.இ.இ.) தமிழ் மொழியில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஒன்றிய அரசு மறுக்கிறது. ஆங்கிலம், இந்தி மொழிகளில் நடத்தப்படும் தேர்வுகள், மாநில மொழியான குஜராத்துக்கு மட்டும் சிறப்புரிமை வழங்கப்பட்டு, குஜராத் மொழியில் நடத்தப்படு கிறது.

145க்கும் மேற்பட்ட ஒன்றிய நிறுவனங்களுக்கு பல கட்ட தேர்வுகளை நடத்தி ஊழியர்களை தேர்வு செய்யும் ஒன்றிய அரசு தேர்வாணையம், மண்டலங்கள் வாரியாக தேர்வு நடத்தும் முறையை ஒழித்து, அகில இந்திய தேர்வுகளாக மாற்றியதால் இந்தி பேசும் வடநாட்டுக்காரர்கள், ஒன்றிய அரசுப் பணிகளை பெருமளவில் கைப்பற்றி வருகிறார்கள்.

தலித் மக்களின் வளர்ச்சி, மாணவர் கல்விக்கான உதவித் தொகை வஞ்சிக்கும் மோடி

தலித் மக்களின் வளர்ச்சிக்கான நிதியை படிப் படியாகக் குறைத்த மோடி ஆட்சி, மாணவர் கல்விக்கான உதவித் தொகையிலும் கை வைத்தது. தலித் மக்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்தது.

பட்டியல் இனப் பிரிவு மேம்பாட்டுக்காகவும் நலனுக்காகவும் அவர்களுக்கான மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு துறை யிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு மிக மிகக் குறைவு என்பதையே புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 22.5 சதவீத நிதி ஒதுக்கீட்டுக்கு பதிலாக 2014-15ஆம் ஆண்டுக்கு 8.79 சதவீதம்; 2015-16இல் 6.63 சதவீதமும், 2016-17இல் 7.06 சதவீதமும், 2016-17இல் 8.91 சதவீதமும், 2017-18இல் 6.55 சதவீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டன. மிகக் குறைவாக ஒதுக்கப்பட்ட நிதியும் கூட பட்டியலினப் பிரிவினருக்கு நேரடியாகப் பயன்தரக் கூடிய திட்டங்களுக்கு செலவிடப்பட வில்லை.

ஏற்கனவே அமுல்படுத்தி வரும் பட்டியல் இனப் பிரிவினருக்கான நல்வாழ்வுத் திட்டங்களை செயற்படுத்து வதற்கான நிதியும் மோடி ஆட்சியில் கணிசமாக வெட்டப்பட்டது. தனித் தனியாக நேரடி பயன்தரக்கூடிய திட்டத் துக்கான நிதி ஒதுக்கீட்டில் 50.69 சதவீதமும், பொதுவான சமூகநலத் திட்டங்களுக்கு 49.3 சதவீதமும்

ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதாவது தேவையான முழு ஒதுக்கீட்டில் பாதியளவு கூட ஒதுக்கப்படவில்லை. அது மட்டுமின்றி பட்டியலினப் பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு திட்டங்களுக்கு மடை மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ரூ. 6312 கோடியை நோய் தடுப்புத் திட்டத்துக்கும், 244.50 கோடியை காற்றாலை மின் உற்பத்தி திட்டத் துக்கும், ரூ. 857.92 கோடியை சூரிய மின் உற்பத்தித் திட்டத்துக்கும் திருப்பிவிடப்பட்டது. இது அப்பட்டமான முறைகேடு. (ஆதாரம்: நாடாளுமன்றத்தில் 2.1.2018இல் இணை அமைச்சர் விஜய் சாம்ப்ளா தந்த தகவல்)

உயர் கல்வி நிதி வெட்டு

தலித் மாணவர்கள் உயர் கல்விக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017-18ஆம் ஆண்டு இத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் 348 கோடி ரூபாயை அரசு குறைத்துவிட்டது. அதுவும் ஏற்கனவே 51,03,243 தலித் மாணவர்கள் இந்த உதவித் தொகைக் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சூழலில் ஒதுக்கப்பட வேண்டிய நிதியை மேலும் குறைத்தார்கள். உதவித் தொகைக் கிடைக்காத நிலையில் ஏராளமான தலித் மாணவர்கள் உயர் கல்வியை பாதியிலேயே கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு ராம்நாத் கோவிந்த் என்ற தலித் வேட்பாளரை நிறுத்தி, தலித் ஆதரவு நாடகம் நடத்தும் மோடி ஆட்சி யில் தலித் மக்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? அவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா?

மிகவும் விளிம்பு நிலையில் உள்ள சமூகத் தினரான, தலித்துகள், பழங்குடியினர் மற்றும் மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அவர்களுக்கான முன் னுரிமை என்பது 'பசு'விற்குக் கொடுப்பதைவிட குறைவேயாகும். தலித்துகள், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் குறித்து நாட்டிலுள்ள ஊடகங்கள் வாயே திறப்பதில்லை.

2014 பொதுத் தேர்தலின்போது பாஜக வெளியிட்ட தேர்தல் அறிக்கையையும் கடந்த காலங்களில் அது அமல்படுத்தியுள்ள

வற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே பாஜகவின் மோசமான ஆட்சியை நன்கு புரிந்துகொள்ள முடியும், 'பாஜக மனிதர் மலத்தை மனிதர் சுமக்கும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்திட உறுதி பூண்டிருக்கிறது' என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது.

ஆனால், இந்த உறுதிமொழிக்கும் எதார்த்த நிலைக்கும் தொடர்பே கிடையாது. உண்மையில், 2017-18இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், மனித மலத்தை சுமந்திடும் மனிதருக்கு மாற்று வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு பத்து கோடி ரூபாய் அளவிலிருந்து ஐந்து கோடி ரூபாயாக, அதாவது பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டது. 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி நாட்டில் உலர் கழிப்பிடங்கள் 26,07,612 இருக்கின்றன. இதற்கு சுமார் 2 இலட்சம் சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தேவை.

இத்துடன் இரயில்வே மற்றும் பொது இடங் களில் உள்ள கழிவறைகளைச் சுத்தம் செய் வோரையும் சேர்த்தால் இவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாகும். இவ்வாறு மலம் அள்ளும் தொழிலாளிக்கு மாற்றுப்பணி அளிப்பதற்காக ஒரு நபருக்கு ரொக்க ஊக்கத் தொகையாக 40 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட வேண்டும் என்று கணக்கிட்டால், மொத்தம் 800 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் 2016 பிப்ரவரி 15 வரையிலும் 7,573 நபர்களுக்கு மட்டுமே மாற்றுப்பணி அளிக்கப்பட் டிருக்கிறது. 1,92,427 பேர் மாற்றுப்பணி எதுவும் அளித்திடாமல் நிர்க்கதியாய் விடப்பட்டிருக் கிறார்கள். மோடியின் 'தூய்மையான பாரதம்' திட்டத்தின் கீழ் எத்தனை உலர் கழிப் பிடங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கான தரவு எதுவும் கிடையாது.

'ஆர்.டி.அய்.' சட்டம் சீர்குலைவு

ஊழல் அதிகார முறைகேடுகளை வெளிச்சத் துக்குக் கொண்டு வருவதற்கு மிகப் பெரும் ஆயுதமாகத் திகழ்வது 2005ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம். இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை சீர்குலைக்கும் அத்தனை முயற்சி களிலும் மோடி ஆட்சி செயல்பட்டிருக்கிறது.

ஒரு கல்லூரியில் பட்டப் படிப்பு 3 ஆண்டு படித்தால் எவரும் பட்டம் பெறலாம். எத்தனை பேர் இப்படிப் பட்டம் பெற்றார்கள் என்ற

தகவல் - தகவல்கள் அறியும் உரிமைச் சட்டம் வருவதற்கு முன்பே எளிதாகக் கிடைத்துதான் வந்தது. ஆனால் மோடி பிரதமரான பிறகு ஓர் அதிசயம் நடந்தது; அது என்ன தெரியுமா?

1978ஆம் ஆண்டு டெல்லி பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டு பட்டப் படிப்பை முடித்து பட்டம் பெற்றதாக மோடி நாடாளுமன்றத்தில் போட்டி யிடுவதற்கான வேட்பு மனுவில் குறிப்பிட்டிருந்தார். அவர் 1978இல் பட்டம் வாங்கியது உண்மையா? என்பதை அறிய அந்த ஆண்டு டெல்லி பல்கலையில் பட்டம் வாங்கியவர்கள் விவரங்களை குறித்த தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் ஒருவர் கேட்டார். தகவல் ஆணையம் தகவல் தர மறுக்கவே, தகவல் கேட்டவர் மேல்முறையீடு செய்தார். தகவல் ஆணையர் தகவல் தர உத்தரவிட்டார். தகவல் தெரிவிக்க முடியாது என்று டெல்லி பல்கலைக் கழக நிர்வாகம், டெல்லி உயர்நீதி மன்றத்தில் தகவல் ஆணையருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. வழக்கில் வாதாட மூத்த வழக்கறிஞர்கள் அரசு செலவில் நியமிக்கப் பட்டனர். டெல்லி பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடத் தேவையில்லை என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மோடி உண்மையில் பட்டம் வாங்கினாரா என்ற தகவல் வெளிப் படுத்த முடியாத நாட்டின் இரகசியமாக்கப் பட்டது.

மோடி பிரதமரானவுடன் தலைமை தகவல் அதிகாரி பதவி காலியாக இருந்தது. அந்தப் பதவிக்கு அதிகாரியை நியமிக்காமல் மோடி ஆட்சி கிடப்பில் போட்டது. டெல்லி உயர் நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தலையிட்டு உத்தரவிட்ட பிறகே 10 மாத இடைவெளிக்குப் பிறகு தலைமை ஆணையாளர் நியமிக்கப்பட்டார். அந்த 10 மாத காலமும் மேல்முறையீட்டுக்கு வந்த அந்த விண்ணப்பங்களும் கிடப்பிலேயே போடப்பட்டன. தகவல் பெறும் ஆணையத்தில் பதவிகள் காலியான போதெல்லாம் நீதிமன்றங்கள் தலையீட்டுக்குப் பிறகே மோடி ஆட்சி அதிகாரிகளை நியமித்தது குறிப்பிடத்தக்கது. பல மாநிலங்களில் தகவல் ஆணையர் பதவிகள் நிரப்படுவதே இல்லை. 2016ஆம் ஆண்டு காலியான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கேட்டு விளம்பரம் தந்தார்கள். அவ்வளவுதான்; பதவிகளை நிரப்பும் முயற்சிகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

தகவல் கேட்டு விண்ணப்பித்தவர் இறந்து விட்டால் தகவல் தர வேண்டிய அவசிய மில்லை என்று 2017இல் ஒரு திருத்தம் கொண்டு

வந்தது மோடி ஆட்சி. இதனால் தகவல் வெளிவந்துவிடக் கூடாது என்று நினைக்கும் மோசடிப் பேர் வழிகள், தகவல் கேட்போரை தீர்த்துக் கட்டத் தொடங்கினர்.

தகவல் கேட்டு மேல் முறையீடு செய்தவர்கள், விரும்பினால் முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று மோடி ஆட்சி சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. இதனால் மேல்முறையீடு செய்தவர்களை மிரட்டி இலஞ்சம் கொடுத்து, விண்ணப் பத்தைத் திரும்பப் பெற வைக்கும் முயற்சிகள் தொடங்கின.

தலைமை தகவல் ஆணையர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இணையாகக் கருதப் பட்டு தலைமை நீதிபதிக்கு உரிய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மோடி ஆட்சி, அமைச்சரவையைக் கூட்டி விவாதிக்காமலே தலைமை தகவல் ஆணையரின் ஊதியத்தைக் குறைத்தது.

ஆணையம், அனைத்து தகவலையும் 'டிஜிட்டல்' மயமாக்கியது. ஒளிவு மறை வின்றி எல்லா தகவல்களையும் கணினியைப் பயன்படுத்தி பார்க்கலாம்; இதைத் தடுப்பதற்காக 'அட்மின் லாக் இன்' என்ற முறையைக் கொண்டு வந்து தகவல்களை பதிவிறக்கம் செய்ய முடியாமல் மோடி ஆட்சி தடுத்து விட்டது.

தகவல் பெறும் உரிமை சட்டத்தைப் பயன் படுத்தி ஊழல் முறைகேடுகளை அம்பலப் படுத்தி வந்த சமூக செயல்பாட்டாளர்கள் 70 பேர் வரை கொலை செய்யப்பட்டார்கள். இந்த அச்சுறுத்தலைத் தடுக்க முந்தைய காங்கிரஸ் தலைமையிலான 15ஆவது நாடாளுமன்றம், 2014 மே மாதத்தில் தகவல் பெறுவோர் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலும் கிடைத்தது. தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மோடி ஆட்சி சட்டத்தை இதுவரை கெசட் டில் வெளியிடவில்லை. நடைமுறைக்கு வராத சட்டமாக மோடி ஆட்சி மாற்றி விட்டது. கடைசியாக 2018ஆம் ஆண்டு மே மாதம் ஒரு தகவல் பெறும் சமூக செயல் பாட்டாளர் படுகொலை செய்யப்பட்டார். நிறைவேற்றப்பட்ட சட்டத்தை முடக்கிய மோடி ஆட்சி பிறகு அந்த சட்டத்தை பலவீனமாக்க மேலும் பல திருத்தங்களைக் கொண்டு வந்து, அதை பொது மக்கள் விவாதத்துக்குக் கொண்டு வராமலேயே மூடி மறைத்து மே 11, 2015இல் நாடாளு மன்றத்தில் திருத்தப்பட்ட மசோதாவை திடீரென்று அறிமுகப் படுத்தியது.

கார்ப்பரேட் நிறுவனங்களைக் காப்பாற்றச் சட்டங்கள்

கடந்த 2017 பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைக்கு நாடாளுமன்றத்தில் ஏற்பு வாங்கப்பட்டபோது, கடைசி நேரத்தில் 40 திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்கள். இந்த திருத்தங்களை மாநிலங்களவைக்கே கொண்டு செல்லவில்லை. நிதி தொடர்பான மசோதாக்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் மட்டுமே போதுமானது என்ற சட்டம் தந்துள்ள வாய்ப்பை இப்படி குறுக்கு வழியில் முறைகேடாகப் பயன்படுத்தி யிருக்கிறது மோடி ஆட்சி.

இந்த திருத்தங்களில் ஒன்று - வருமான வரித் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்களாகும். நடுவண் ஆட்சி, அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்குப் பயன்படுத்தும் வலிமையான அதிகார அமைப்புகளில் ஒன்று வருமான வரித் துறை. புதிய திருத்தத்தின்படி, இனி வருமான வரித் துறை அதிகாரிகள், தேவையான ஆதாரங்கள், தடயங்கள் இல்லாமல், சந்தேகத்தின் அடிப்படையிலேயே சோதனையிடவும், சொத்துகளைப் பறிமுதல் செய்யவும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. சோதனையிடப்படு வதற்கான காரணங்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உள்ளிட்ட எந்த

அமைப்புக்கும் அதிகாரிகள் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. பார்ப்பன அதிகார மய்யமாக திகழும் வருமானவரித் துறையை 'ஒரு இராணுவ சர்வாதிகாரி' போல செயல்படுவதற்கான அதிகார அமைப்பாக்கிவிட்டார்கள். அந்த அதிகாரம்தான் இப்போது எதிர்கட்சிகளை அச்சுறுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது 'சகாரா', 'ஆதித்யா பிர்லா' குடும்பங்களில் வருமான வரித்துறை நடத்திய சோதனைகளில் மோடிக்கு நன்கொடை தந்ததற்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, அந்த ஆதாரங்கள் வருமான வரித்துறையின் பதிவேடுகளிலேயே இடம் பெற்றிருந்ததை சுட்டிக்காட்டி நடவடிக்கைக் கோரி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஆதாரங்களோடு வழக்கு தொடர்ந்தார். மோடி மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காகவே, வருமான வரித் துறை அதிகாரியாக இருந்த கே.பி. சவுத்திரி என்பவருக்கு, இலஞ்ச ஒழிப்புத் துறைத் தலைவர் என்ற உயர்ந்த பதவி பரிசாக அளிக்கப்பட்டதையும் பிரசாந்த் பூஷன் சுட்டிக் காட்டியிருந்தார்.

மற்றொரு முக்கிய திருத்தமும் கொண்டு வரப்பட்டது. கார்ப்பரேட் கம்பெனிகள் இனி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகளை வழங்குவதற்கு உச்சவரம்பு எதுவும் கிடையாது என்பதே இந்த புதிய திருத்தம். தற்போதுள்ள சட்டத்தின்படி ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தனது நிகர இலாபத்தில் 7.5. சதவீத அளவில் மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்க முடியும். அது மட்டுமின்றி வழங்கப்பட்ட தொகை, வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் அறிவித்தாக வேண்டும். இப்போது வரம்பு நீக்கப்பட்டதோடு வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் வெளியிடத் தேவை இல்லை என்கிறது புதிய திருத்தம். ஏற்கெனவே அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடிக்குள் வந்துவிட்டன. கார்ப்பரேட் நிறுவனங்களோ பார்ப்பன அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அதை மேலும் உறுதிப்படுத்தி யிருக்கிறது மோடி ஆட்சி. தமிழ் நாட்டில் ஆர்.கே. நகர் தொகுதியில் கோடி கோடியாக பணம் புரண்டதற்கான காரணங்களில் ஒன்று, கார்ப்பரேட் கம்பெனி களிடமிருந்து பெற்ற இலஞ்சம். ஸ்டேட் வங்கி மூலம் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கலாம் எனும் இத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிறுவனங்கள் தொழிலதிபர்கள் - 1000

கோடி மதிப்பிலான பத்திரத்தை பா.ஜ.க.வுக்கு வழங்கியிருப்பது ஆர்.டி.அய். மூலம் வெளி வந்திருக்கிறது. இலஞ்சத்துக்கு கதவு திறந்துவிடும் பா.ஜ.க.வுக்கு அரசியல் ஊழல்களைப் பற்றிப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று கேட்கிறோம்.

மற்றொரு திருத்தம் – தீர்ப்பாயங்களை முடக்கியிருப்பதாகும். இந்தத் தீர்ப்பாயங்கள் நீதித் துறைக்குரிய அதிகாரங்களுடன் செயல் படக்கூடிய அமைப்புகள். அரசின் தலையீடுகளுக்கு இதில் இடமில்லை. நீதிமன்ற ஆணைப்படி உருவாக்கப்பட்ட தீர்ப்பாயங் களும் உண்டு. தீர்ப்பாயங்களுக்கு தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு நிர்வாக அமைப்பு களுக்கு அப்பாற் பட்டவர்கள் என்று உச்சநீதிமன்றம் 2014இல் திட்டவட்டமாக கூறியிருக்கிறது. ஆட்சியாளர்களையே சம்மன் செய்து விசாரிக்கும் உரிமை கொண்டவை. இப்போது தேவையில்லை என்று ஆட்சியாளர் விரும்புகிற தீர்ப்பாயங்களை கலைக்கவும், சில தீர்ப்பாயங்களின் தனித்துவமான உரிமைகளைப் பறித்து, வேறு சிலவற்றுடன் இணைக்கவும் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள்.

வரி, அரசு வாங்கும் கடன், அரசு செல வினங்கள், கடன் பத்திரங்கள் போன்ற அம்சங்கள் மட்டுமே நிதி மசோதாவின் கீழ் வரக்கூடியவை. மோடி ஆட்சி, வருமான வரித் துறை, கார்ப்பரேட் கம்பெனிகள் சட்டம், தீர்ப்பாயங்கள் போன்றவற்றையும் நிதி மசோதாவுடன் இணைத்து மாநிலங்களவை விவாதத்துக்கு உட்படுத்தாமல் 40 திருத்தங்களை செய்திருப்பது மிகப் பெரும் ஜனநாயகப் படுகொலை.

மாநிலங்களின் உரிமைகளை பறிப்பது மட்டுமின்றி, மாநிலங்களின் அவையையும் முடக்கி விட்டார்கள். ஒற்றை ஆட்சி ஒற்றை கலாச்சாரம் எனும் இந்துத்துவா ஆயுதத்தை மக்களுக்கு எதிராக கூர் தீட்டி வருகிறது மோடி ஆட்சி.

சிந்தனையாளர்கள் மீது அடக்குமுறைகள்

புனேயில் உள்ள பீமா கொரேகான் என்னுமிடத்தில் பேஷ்வா அரசுப் படைகளை ஆங்கிலேயப் படைகளுடன் தலித் படைவீரர்கள் வீழ்த்திய நினைவுச் சின்னம் ஒன்று உள்ளது. நூறாண்டுகளுக்கு முன் 1917 டிச 31 அன்று அண்ணல் அம்பேத்கர் அஞ்சலி செய்த நினைவுச் சின்னம் அது. சென்ற 2017 டிசம்பர் 31 அன்று தலித்கள் மற்றும் பொதுமைச் சிந்தனை உடையவர்கள் அங்கு கூடி 'எட்கார் பரிஷத்' எனும் நிகழ்ச்சியை நடத்தினர். பேஷ்வா அரசை எதிர்த்து தலித் படை ஒன்று வெற்றிபெற்றதைக் கொண்டாடிய இந்த நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் புகுந்து குழப்பம் விளைவித்தனர்.

இந்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததில் மாவோயிஸ்டுகளின் பங்கு இருந்ததாகச் சொல்லி சென்ற ஜூன் 2018இல் சுரேந்திரா காட்லிங், சுதிர் தவாலே, பேராசிரியை ஷோமாசென், மகேஷ் ராவ்த், ரோனா வில்சன் முதலான தலித் மற்றும் மனித உரிமைச் செயல்பாட் டாளர்களை மகாராஷ்டிர அரசு கைது செய்தது. அவர்கள் இன்று 'சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்' (UAPA) கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கைதைக் கண்டித்த செயல்பாட்டாளர் களான வழக்குரைஞரும் பி.யூ.சி.எல் அமைப்பின் தேசியத் தலைவருமான சுதா பரத்வாஜ், எழுத்தாளரும் மனித

உரிமைப் போராளியுமான கௌதம் நவ்லக்கா. தலித் அறிவுஜீவியும் எழுத்தாளருமான ஆனந்த் டெல்டும்டே, செயல்பாட்டாளர் சூசன் ஆப்ரஹாம், ஜார்கன்டில் பழங்குடி மக்கள் மத்தியில் வேலை செய்யும் திருச்சியைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டான் சாமி, ஆந்திரக் கவிஞர் வரவர ராவ், வழக்குரைஞர் அருண் ஃப்ரெய்ரா ஆகியோரது வீடுகள் ஆக. 28, 2018 அன்று சோதனை இடப்பட்டது. இவர்களில் சிலரும் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

இப்படி எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், மனித உரிமைப் போராளிகள் முதலானோர் கொடும் தடுப்புக் காவல் சட்டங்களில் கைது செய்யப்படுவதை உலகளவில் அறிவுஜீவிகள் கண்டித்தனர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லக்கா, வெர்னான் கோன்சால்வ்ஸ், அருண் ஃப்ரெய்ரா, வரவரராவ் ஆகிய ஐவர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்கைத் தகர்த்து அவர்களை உடன் விடுதலை செய்யச் சொல்லி உலக அளவில் புகழ்பெற்ற வரலாற்று அறிஞர் ரொமிலாதாபர் மற்றும் பொருளியல் வல்லுனர் பேரா பிரபாதப் பட்நாயக், மூத்த பொருளியல் அறிஞர் தேவகி ஜெயின், காமன்வெல்த் மனித உரிமை அமைப்பின் மூத்த ஆலோசகர் மாஜா தாருவாலா ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை சென்ற செப்டம்பர் 2018இல் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வு தள்ளுபடி செய்தது. அது மட்டுமல்ல மகாராஷ்டிர காவல்துறை இதை விசாரணை செய்தால் இவ்வழக்கில் நீதி கிடைக்காது என்பதால் ஒரு சிறப்பு விசாரணைக் குழு (SIT) அமைக்க வேண்டும் என்கிற இவ் அறிஞர்களின் கோரிக்கையையும் அது தூக்கி எறிந்தது.

வேளாண் சட்டங்கள்

பாஜக அரசாங்கம், நாடாளுமன்றத்தில் இதன் மூன்று சட்டமுன்வடிவுகளும் நிறைவேற்றியது. விளைவாக, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை நாட்டில் எங்கே வேண்டுமானாலும் விற்பதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதால், விவசாயிகள் 2020 ஜூன் 3 அன்றுதான் சுதந்திரம் பெற்றார்களேயொழிய, 1947 ஆகஸ்ட் 15 அன்று சுதந்திரம் பெறவில்லை என்று துஷ்டத்தனமாகக் கூறிவருகிறது. இவர்கள் 1991இலிருந்து கடைப்பிடித்துவரும் நவீன தாராளமய, தனியார்மய, உலகமயக் கொள்கைகள் தான் மிகவும் மோசமான அளவில் விவசாயி நெருக்கடியை ஏற்படுத்தி, 4 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விட்டார்கள் என்றே தெரிகிறது. இப்போது கொண்டு வந்துள்ள மூன்று சட்டங்களுமே மாநில அரசாங்கங்களின் உரிமைகள் மீதும் அவற்றின் கூட்டாட்சித் தத்துவத்தின் மீதும் நேரடித் தாக்குதல்களாகும். விவசாயம் என்பது அரசமைப்புச்சட்டத்தின்கீழ் மாநிலப்பட்டியலில் வரக்கூடிய ஒன்று. பாஜக மத்திய அரசாங்கம், உண்மையில் மாநிலங்களின் அனைத்து அதிகாரங்களையும் தன் கைகளில் எடுத்துக்கொண்டு, விவசாயப் பொருள்கள் மீது இருந்துவரும் ஒழுங்குமுறைகளை நீக்கி, கார்ப்பரேட் நிறுவனங்கள் அவற்றைக் கபளீகரம் செய்துகொள்ள அனுமதித்திருக்கிறது.

மோடி அரசு மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

இந்தச் சட்டங்கள், விவசாயிகளை, வேளாண் வர்த்தகர்கள், பெரிய அளவிலான சில்லரை வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் தயவில் வாழக்கூடிய விதத்தில் தள்ளிவிட்டிருக்கிறது. இதுநாள்வரையிலும் வேளாண் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்தவர்களுக்கு இருந்துவந்த கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. எதிர்காலத்தில் மாநில அரசாங்கங்கள் இனி விவசாயத்தையும், வர்த்தகம் மற்றும் வணிகத்தையும் தங்களின் தனி உரிமைகளாகக் கருதிட முடியாது.

விவசாயிகளுக்கு இதுநாள்வரையிலும் இருந்துவந்த கொஞ்சநஞ்ச பாதுகாப்பும்கூட நீக்கப்பட்டுவிட்டன. விவசாயிகள், பெரும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வேளாண்வர்த்தகர்களின் தயவில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவார்கள். அவர்கள் இடும் கட்டளையின்படிதான் இனி விவசாயிகள் தங்கள் நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலை உருவாகும். இவ்வாறாக இந்தச் சட்டங்களில் கொண்டுவந்துள்ள மாற்றங்கள், விவசாயிகளை முற்றிலுமாக அதிகாரமிழக்கச் செய்து, விவசாயத்தில் கம்பெனி ராஜ்ஜியத்திற்குக் கட்டியம் கூறியிருக்கிறது.

சந்தைகளின் கட்டுப்பாடுகள் நீக்கம், கார்ப்பரேட்டுகளின் கொள்ளை லாபமீட்டலுக்கு வழிவகுக்கும்.

பாஜக அரசாங்கம், விவசாய உற்பத்திப் பொருட்கள் வர்த்தகம் மற்றும் வணிகம் (மேம்படுத்துதல் மற்றும் வசதிசெய்துதருதல்) சட்டமுன்வடிவு, 2020 மாநிலங்களுக்கிடையே தடையில்லா வர்த்தகம் மற்றும் வணிகம் மேற்கொள்வதை மேம்படுத்தும் என்று பாஜக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. நாட்டில் முதன்முதலாக விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை நாட்டில் எங்கு வேண்டுமானாலும் விற்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் கூறிக்கொண்டிருக்கிறது. இதற்கும் எதார்த்த நிலைக்கும் வெகுதூரமாகும். உண்மை நிலை என்னவென்றால் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்துவந்த பொருள்களில் உபரியாக இருந்தவற்றை உள்ளூரில் உள்ள பெரும் வர்த்தகர்களிடம்தான் இதுநாள்வரையிலும்

விற்று வந்தார்கள். மொத்தம் உள்ள 31 பயிர்களில் 29 பயிர்களை இவ்வாறு அவர்கள் கடந்த 2012 ஜூலைக்கும் 2013 ஜூனுக்கும் இடையே விற்றிருக்கிறார்கள். ஏபிஎம்சி எனப்படும் வேளாண் உற்பத்திப் பொருள்கள் சந்தைக் குழு சந்தைகளில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களில் 25 சதவீதம்கூட விற்றது கிடையாது.

வர்த்தகர்கள் மற்றும் பெரும் வியாபாரிகள் அறிவிக்கப்பட்ட சந்தைகளுக்கு வெளியே உற்பத்திப் பொருள்களை விவசாயிகளிட மிருந்து வாங்குவதற்கு அனுமதிப்பது என்பதன் பொருள், அவை அவர்களிடமிருந்து எவ்விதமான ஏலமும் விடப்படாமல் அல்லது பெரும் வர்த்தகர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இடையே எவ்விதமான பேச்சுவார்த்தைகளுமின்றி பொருள்களை வாங்குவது என்பதாகும். இத்தகைய அமைப்புமுறை இயல்பாகவே விவசாயிகளின் நலன்களுக்கு எதிரானதாகும். அவர்கள் தங்கள் பொருள்களுக்கு உரிய ஆதார விலையை (சநஅரநேசயவளைந யீசஉைநள) பெற மாட்டார்கள். விவசாயிகள் அடிக்கடி தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை தங்கள், குடும்ப செலவினங்களுக்காகவும், அடுத்து பயிரிடுவதற்காகவும் வாங்கிய கடன்களை அடைப்பதற்காகவும் மிகவும் குறைந்தவிலைக்கு விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இனி வருங்காலங் களில் இந்த உள்ளூர் வர்த்தகர்களின் இடத்தை பெரும் முதலாளிகள் பிடித்துக் கொள்வார்கள். அரசாங்கம் எவ்விதத்திலும் தலையிடாது.

குறைந்தபட்ச ஆதார விலை என்பதும், அரசாங்கமே கொள்முதல் செய்துகொள்ளும் என்பதும் முடிவுக்கு வந்துவிட்டன. ‘ஒரே தேசம் ஒரே சந்தை’ என்பது, இதற்கு முந்தைய முழக்கங்களான ‘ஒரே தேசம் ஒரே வரி’ என்பதைப்போலவே விவசாய உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு மேலும் துன்ப துயரங்களையே கொண்டுவரும். விவசாயிகளின் துன்பதுயரங்களுக்கு அடிப்படைக் காரணம் சந்தைப்படுத்தலில் உள்ள கட்டுப்பாடுகள் அல்ல, மாறாக அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்கவில்லை என்பதும், தாங்கள் உற்பத்தி செய்த பொருள்கள் கொள்முதல் செய்யப்படுவதற்கான உத்தரவாதம் இல்லாத நிலையுமேயாகும். நிறைவேற்றப்பட்டுள்ள மூன்று சட்டங்களிலும் எந்த இடத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்கள் உற்பத்திச் செலவினத்துடன் ஒன்றரை மடங்கு உயர்த்தி குறைந்தபட்ச ஆதார

விலை அளித்து கொள்முதல் செய்யப்படும் என்கிற உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.

இந்த மூன்று அவசரச்சட்டங்களையும்/சட்டமுன்வடிவுகளையும் ஒருங்கிணைத்துப் படித்தோமானால், எந்த அளவிற்கு உலக வர்த்தக அமைப்பு நம் நாட்டில் இருந்துவந்த மானியங்களை வெட்டிக் குறைப்பதிலும், அரசாங்கம் அவற்றைக்கொள்முதல் செய்வதைக் குறைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதிலும், அதன் கட்டளைப்படியே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.சாந்த குமார் குழு இதைத்தான் பரிந்துரைத்திருந்தது. கொள்முதலையும், விவசாயப் பொருள்களை பதப்படுத்தி வைப்பதையும் தனியார்மயப்படுத்திட வேண்டும் என்றும், இவ்விஷயங்களில் மத்திய அரசாங்கம் தன் பங்களிப்பினைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தது. இதன் பரிந்துரையின் அடிப்படையில்தான் பாஜக அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. நெல்லைக் கொள்முதல் செய்வதில் மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதாரவிலை குவிண்டாலுக்கு 900 ரூபாயாக இருக்கக்கூடிய அதே சமயத்தில், கேரள மாநில அரசு குவிண்டாலுக்கு 2750 ரூபாய் கொடுத்து கொள்முதல் செய்கிறது. இவ்வாறு மாநில அரசுகள் இதுவரை செயல்பட்டுவந்தன. இனி இவ்வாறு மாநில அரசுகள், விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினாலும் அதனைச் செய்யமுடியாத விதத்தில் மத்திய அரசு இந்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது.

‘நீட்’ திணிப்பு

கல்வி உரிமையை மாநிலங்களிடமிருந்து பறித்து, பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்த ‘நீட்’ தேர்வு நாடு முழுதும் ஒரே தேர்வுக்கு வழிவகுத்து தமிழகத்தில் கட்டி எழுப்பப்பட்ட சமூகநீதியைத் தகர்த்து விட்டது. 31.1.2019இல் தமிழக சட்டசபையில் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோரும் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது பா.ஜ.க. ஆட்சி. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான குறைந்தபட்ச இடங்களை உறுதி செய்து, 7.5 சதவீத உள்ஒதுக்கீடு கோரும் சட்டத்துக்கும் ஒப்புதல் தராமல் காலம் தாழ்த்திய ஆளுநர், தமிழக அரசு அரசாணை வெளியிட்ட பிறகு வேறு வழியின்றி ஒப்புதல் தந்தார். மாநில கல்வி உரிமையை தனதாக்கிக் கொண்டது ஒன்றிய ஆட்சி.

ஜி.எஸ்.டி.

மாநிலங்களின் வரிவிதிப்பு உரிமையைப் பறிக்கும் ஜி.எஸ்.டி. வரி வருவாய் முறையை அமுல்படுத்தி மாநிலங்களுக்கு தருவதாக உறுதியளித்த இழப்பீடு தொகையையும் தர மறுக்கிறது நடுவண் ஆட்சி.

ஜம்மு-காஷ்மீர்

ஜம்மு-காஷ்மீர் மாநில மக்களுக்கு அரசியல் சட்டம் உறுதி செய்த 370ஆவது பிரிவின் கீழ் உறுதி செய்த தனி சிறப்புரிமைகளைப் பறித்து மாநில உரிமையை கூட தர மறுத்து விட்டார்கள். இராணுவத்தின் பிடியில் அங்கே ஆட்சி நடக்கிறது.

தேசிய கல்விக் கொள்கை

நாடு முழுதும் ஒரே கல்வி கொள்கை என்ற பெயரில் சமஸ்கிருதத்தையும் இந்தியையும் திணிப்பதோடு 5ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புகளில் தேர்வுகளை வைத்து மாணவர்களை கல்வி அமைப்பிலிருந்து வடிகட்டி வெளியேற்றி, குலக் கல்விக்கு வழி வகுக்கும் ஒரு கல்வித் திட்டத்தைத் திணித்து விட்டார்கள்.

குடியுரிமை சட்டம்

குடியுரிமை சட்டத்திலும் மத அடையாளத்தைத் திணித்து ‘குடிமக்கள்’ மதச் சார்பற்றவர்கள் என்ற நிலையை மாற்றி மதத்தின் அடையாளத்தைத் திணித்து பாகுபடுத்தி விட்டது. 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றே நாட்களில் மக்களவை, மாநிலங்களவை ஒப்புதலோடு குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று சட்டமாக்கி விட்டார்கள். அதாவது 2014ஆம் ஆண்டு வரை இந்தியாவுக்குள் அடைக்கலம் தேடி பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம் அல்லாத 6 மாதப் பிரிவினருக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படும் என்று சட்டம் கூறுகிறது. குடியுரிமைக்கு மதத்தை ஒரு அடையாளமாக்கும் மனித விரோத சட்டம் இது.

ஆரியர் வருகைக்கு முன்பே தமிழர் நாகரிகம் இங்கே இருந்ததற்கான ஆதிச்ச நல்லூர் ஆய்வு முடிவுகளை வெளியிட மறுத்து

கீழடி போன்ற இடங்களில் நடக்கும் ஆய்வுகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள்.

இப்படி நீண்ட பட்டியலிட முடியும்!

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சுயாட்சி பேசினார்கள்; காங்கிரசும் அதைப் பேசியது; பிறகு சுதந்திர இநதியாவில் அரசியல் சட்டத்தில் சுயாட்சி கொள்கைகளை கை கழுவினார்கள். காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப்பட்டது என்றால் பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாடு தமிழர்கள் அடையாளமே ஒழிக்கப்படும் முயற்சிகள் சட்டங்களாக அதிகாரங்களுடன் படை எடுத்து வருகின்றன. ஒற்றை இந்தியா என்ற பெயரில் உருவாகி வரும் பார்ப்பனிய இராமராஜ்யத் துக்குள் தமிழ்நாடு மூழ்கிவிடுமா? இல்லை உரிமைகளுக்கான போராட்டங்கள் வழியாக தமிழர்கள் தங்கள் உரிமைகளை, அடையாளங்களை மீட்டெடுப்பார்களா என்ற கேள்வி தமிழர்கள் முன் நிற்கிறது.

கட்டுரைக்கு பயன்படுத்தப்பட்ட நூல்கள்

- மாநில சுயாட்சி - முரசொலி மாறன்
- மலர்க மாநில சுயாட்சி - கு.சா. ஆனந்தன்
- திராவிட இயக்க வரலாறு - க. திருநாவுக்கரசு
- திராவிட இயக்க வரலாறு - ஆர். முத்துக்குமார்
- பெரியோர்களே, தாய்மார்களே! - திருமாவேலன்
- 'நிமிர்வோம்' இதழ்கள்
- சங் பரிவாரங்களின் சதி வரலாறு - விடுதலை இராசேந்திரன்
- The R.S.S. - A.G. Noorani
- The Majoritian State published by Har Per Colins
- Dismiantling India - A Four years Rule
- Frontline - The Wire - The Print

தமிழ்நாட்டில் அடிமைகள்!

அடிமை முறை எனும் கொடுமை தமிழ்நாட்டிலேயே இருந்திருக்கிறது. அடிமைகளாக நடத்தப் பட்டவர்கள் அனைவருமே 'சூத்திரர்கள்.' 'தீண்டப்படாத' பிரிவைச் சார்ந்த மக்கள், ஊதியம் வாங்காமல் அவர்கள் வேலை செய்வது கட்டாயம். 'சூத்திரர்கள்' அடிமைகளாக நடத்தப்பட்டார்கள் என்றால், 'தீண்டப்படாத சண்டாளர்கள்' என்று அழைக்கப்பட்ட மக்கள், இறந்துபோன சடலங்களுக்கு இணையாக நடத்தப்பட்டனர். முதலில் பிரிட்டிஷ் ஆட்சி இதை கண்டு கொள்ளவில்லை. 'கொடுமை தாங்காமல் ஓடிப்போன அடிமைகளை'க் கண்டுபிடித்து, மீண்டும் அவர்களின் எஜமானர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வருவாய் வாரியத்துக்கு தஞ்சை கலெக்டர் (ஆட்சித் தலைவர்) கடிதம் எழுதிய ஆவணங்கள் இருக்கின்றன. அடிமைகள் தங்களின் 'எஜமானர்களிடம்' அடிமைகளாக வேலை செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டிய பொறுப்பு, காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1830-இல் திருச்சி கலெக்டர் என்.எஸ். கேமரோன், தனது மாவட்டத்தைச் சார்ந்த ஒரு 'பிராமண' நிலப் பிரபுவிடமிருந்து ஓடிப்போன பத்து 'பள்ளர்' சமூகத்தைச் சார்ந்தவர்களை திருப்பி அனுப்புமாறு சேலம் கலெக்டருக்கு கடிதம் எழுதியிருப்பதை வரலாற்றுப் பேராசிரியர் சி.பரமார்த்தலிங்கம் பதிவு செய்திருக்கிறார்.

–இந்நூலிலிருந்து

நிமிர்வோம் **விலை : ரூ.100/-**